
ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:



உபயவேதாந்தவித்வத் ஸார்வபௌமராயெழுந்தருளியிருந்த

காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

அந்த ஸ்வாமியின் வாழ்நாளில்

மதுரை ஹரிஸமய திவாகரம் பத்திரிகையில்

அச்சாகி வெளிவந்தவரை.

(அபூர்ணம்.)

மதுரை, ஸ்ரீவைஷ்ணவ பாதரேணு

V. சேஷராமாநுஜதாஸனால்


மதுரை ஹரிஸமய திவாகர அச்சுக்கூடத்தில் அச்சிட்டு


வெளியிடப்பட்டது.

1961

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாயநம:





உபயவேதாந்தவித்வத் ஸார்வபௌமராயெழுந்தருளியிருந்த

காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

(ஹரிஸமய திவாகரம் பத்திரிகையில் வெளிவந்தது)


மதுரை, ஸ்ரீவைஷ்ணவ பாதரேணு

V. சேஷராமாநுஜதாஸனால்

மதுரை ஹரிஸமய திவாகர அச்சுக்கூடத்தில் அச்சிட்டு

வெளியிடப்பட்டது.

1961 இதன் விலை ரூ. 1.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதுபயவேதாந்த மஹாவித்வான்
காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி
திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

தருணாருணாம்புஜவிகாஸிலோசநம்
கருணாரஸைகவருணாலயம் விபும் ।
ஶரணாகதார்திஹரணைகதீக்ஷிதம்
ஶரணம் பஜேய வரதம் ரமாஸகம் ॥ (1)

வாரணாசலஶிரோவிபூஷணம்
வாரணார்திஹரணைகதீக்ஷிதம் ।
[illegible]
[illegible] ॥ (2)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (3)

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ (4)

[illegible]
[illegible]

ஶ்ருத்யர்தஸார விஶதீகரணைகதக்ஷ
ஸம்ப்ரதாய பரம்பரேய: ।
ஶ்ரீஶைலேஶ க்ருபாலப்த ஸம்ப்ரதாய ஸமஸ்தவிஜ்ஞ
வாசம் மானவேன ஸமாயம்
ஸத்ருஶாவஸ்த்யாதிஶயீ வரவரமுநிரா
யாஸுஷ்யணீ க்ருபாம் ஶ்ரியம் ந: ॥ (5)

— நூல் தொடக்கம் —

ஆழ்வார் தொடங்கி எம்பெருமானுர் நடுவாக மணவாள மாமுனிகள் முடிவாகவுள்ள ஆசார்ய பரம்பரையில் ஸம்ப்ரதாய பரம்பரா ப்ராப்தங்களான அர்த்தவிசேஷ நிர்ணயமானது நிரதிசய புருஷார்த்த ப்ராப்திக்குறுப்பாகையாலே; அவர்களால், சுருக்கியும் விரித்தும் அருளிச்செய்யப்பட்ட அர்த்தவிசேஷங்கள் எளிதில் அறியும் பொருட்டு, அவ்வவ்விடங்களிலுள்ளவைகளைக்கொண்டு மிகச் சுருக்கமும் விரிவுமின்றிக்கே இங்கு நிரூபிக்கப்படுகின்றன.

— இந்நூல் இரண்டு பரிச்சேதமாயிருக்குமென்கை —

அதில் "மாநாதீநா மேயஸித்தி:" என்கிறபடி ப்ரமாணத்தைக் கொண்டே பிரமேயம் ஸித்திக்கவேண்டியிருப்பதால், முதலில் பிரமாணத்தை நிரூபித்துக்கொண்டு பின்பு பிரமேயங்களான அர்த்த விசேஷங்களை நிரூபிக்கவேண்டியது அடைவாகையாலே, இப்பிரபந்தம் பிரமாண பரிச்சேதமென்றும் பிரமேய பரிச்சேதமென்றும் இரண்டு பாகமாயிருக்கும்.

— ப்ரத்யக்ஷாதி ப்ரமாண நிரூபணம் —

அவற்றுள் பிரமாணங்களாவன—பிரமேயங்களை உள்ளபடி அறிகைக்குச் சாதனங்களான பிரத்யக்ஷமும், அநுமானமும், சப்தமுமாம். அவற்றுள் பிரத்யக்ஷப் பிரமாணமாவது—ரூப ரஸ கந்த ஸ்பர்ச சப்தங்களையும், இவைகளுக்கு ஆதாரங்களான திரவியங்களையும், உள்ளுறையான சுகதுக்கங்களையும் அறிதற்குச் சாதனங்களான கண் முதலான ஐந்து இந்திரியங்களும், மனஸ்ஸுமாகிற ஆறு இந்திரியங்களுமாம். அநுமானப் பிரமாணமாவது— பிரத்யக்ஷத்தால் அறியப்படும் வஸ்துக்களுடைய ஒன்றைவிட்டு ஒன்று

பிரியாமலிருக்கிற நிலைமையைக்கொண்டு ஒன்ருலே ஒன்றை அறிகைக்குறுப்பான தர்க்கமென்று சொல்லப்படுகிற யுக்தி விசேஷம். அஃதாவது—அறியப்பட்ட தொன்றைவிட்டுப் பிரிந்திருக்க மாட்டாததென் றறிந்ததொன்றை அறியாதவிடத்தும் அவ்வறியப் பட்டதைக்கொண்டறியும் யுக்தி விசேஷம் என்றபடி. சப்தப்பிரமாணமாவது—பிரத்யக்ஷத்தால் அறியமுடியாத வஸ்துக்களை உள்ளபடி அறிகைக்குச் சாதனமான அக்ஷரராசி ரூபமான சப்தம்.

— சப்த ப்ரமாண விசேஷ நிருபணம் —

அந்த சப்தம் நாலுவகையாயுள்ள வேதங்களும், அவைகளின் அர்த்தத்தை உள்ளபடி தெரிவித்தற்குச் சாதனங்களான மீமாம்ஸை முதலான அங்கங்களும், அந்த வேதங்களுடைய அர்த்தத்தை விஸ்தரித்துச் சொல்லியும், அந்த அர்த்தங்களுக்கு விரோதமில்லாமல், அதற்கு உபயுக்தமான அர்த்தங்களைச் சொல்லியும் போருகிற மநுஸ்மிருதி முதலான தர்மசாஸ்திரங்களும், இதிஹாஸ புராணங்களும், பாஞ்சராத்திரமும், மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகளும், அவைகளை அநுஸரித்த பூர்வாசார்யர்களுடைய ஸூக்திகளுமாம்.

— வேதத்தின் பெருமை விளக்கம் —

அவைகளில் வேதமானது—ஒரு புருஷனுற் சொல்லப்படாமையாலே பிரமம் வஞ்சனை அநவதாநம் ஆகிய இவைகளால் உண்டாகும் தோஷம் அதற்கு இல்லையாம். மற்றும் அவ்வேதமானது ஒரு வஸ்துவைத் தெரிவிக்கும் விஷயத்தில் மற்றென்றை அபேக்ஷியாமலிருக்கும்படியான பெருமையும், நித்யமாயிருக்கையும் உடையது. ஆனுல், ஸித்தாந்தத்தில் சப்தம் அஹங்கார மென்கிற தத்துவத்தினுடைய காரியமாயிருப்பதால், நித்யமென்று சொல்லும்படி எங்ஙனே என்னில்? சப்தம் அநித்யமாயிருந்த போதிலும், கல்பங்கள்தோறும், ஆநுபூர்வி வேறுபட்டிராமல் ஒரே ஆநுபூர்வியாக உச்சரிக்கப்படுவதைப்பற்றி நித்யமென்றே சொல்லப்படும்

— இதிஹாஸ புராணங்களின் தன்மை —

மற்ற இதிஹாஸ புராணங்களுக்கு வேதத்தை அநுஸரித்தே பிராமாண்யம் ஏற்படுவதால் வேதவிரோதமான அர்த்தங்களைச் சொல்லுமிடத்து அவை பிரமாணமாகமாட்டா.

— பாஞ்சராத்ர-திவ்யப்ரபந்தங்களைப்பற்றி —

பாஞ்சராத்ரம், ஸர்வஜ்ஞனாய் சேதனர்களுடைய உஜ்ஜீவனத்தில் ப்ரவ்ருத்தனாயிருக்கிற ஸர்வேசுவரனால் அருளிச்செய்யப்பட்டதாகையால், வேதம்போல் தன்னுடைய ப்ராமாண்யத்தில் மற்றொன்றை அபேக்ஷியாமலிருப்பதால் வேததுல்யம். அப்படியே மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளும் வேத துல்யங்களாம். அன்றிக்கே வேதம்போல் ஆநுபூர்வி வேறுபடாமல் "என்முன் சொல்லும் மூவுருவாமுதல்வனே" என்றும், "திருநாமச் சொற்கற்றனமே" என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேசுவரன் ஆழ்வாருக்கு உபதேசிக்க, ஆழ்வார் மதுரகவிகளுக்கு உபதேசிக்க, இப்படி நாதமுனிகள் முதலாகப் பரம்பரையாக வருகிறபடியால் நம்மாழ்வார் அருளிச்செய்த நாலு பிரபந்தங்களும் நாலு வேதங்களாகவும் மற்ற ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகள் அவைகளுக்கு அங்கங்களாயும் உபாங்கங்களாயும் உள்ளன என்பது சில ஆசார்யர்களுடைய அபிப்பிராயம்.

வேதத்தின் பாகுபாடு.

இனி வேதம் கருமபாகமென்றும் ப்ரஹ்மபாகமென்றும் இரண்டு வகையாயிருக்கும். அவற்றுள் கருமபாகம் ஆராத்யனான ஸர்வேசுவரனுடைய ஆராதனங்களான யஜ்ஞம் முதலான கர்மாக்களையும், அவைகளுடைய அநுஷ்டானப் பிரகாரத்தையும் விளக்கமாய்ச் சொல்லும். இதற்கு உபப்ரும்ஹணங்கள் (வழிநூல்கள்) மநுஸ்மிருதி முதலான தர்ம சாஸ்திரங்களாம். ப்ரஹ்மபாகம் ஆராத்யனான ஸர்வேசுவரனுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளையும் அவனை யடைவதற்குரிய உபாயத்தையும் அதனுடைய பலத்தையும் நேராகப் பிரதிபாதிக்கும். இதற்கு வழிநூல்கள் ஸ்ரீராமாயண பாரதங்களான இதிஹாஸங்களும் விஷ்ணுபுராணம் முதலான ஸாத்விக புராணங்களுமாம்.

— வேதத்தின் வழிநூல்களைப்பற்றி —

இதில் பூருவபாகத்தின் வழிநூல்களான தர்ம சாஸ்திரங்களில் ஆராதனமான கர்மாவினுடைய நிருபணத்தில் ஆராத்யனான ஈசுவரனுடைய ஸ்வரூப நிருபணத்தில் ஆராதனமான கர்மாவினுடைய நிருபணமும் இன்றியமையாததாய் ஏற்பட்டிருக்கும்.

அந்த இரண்டு நிரூபணங்களும் மிகவும் உபயுக்தங்களாகை யால், இரண்டுவிதமான வழிநூல்களும் இரண்டுவித நிரூபணங்களி லும் அவைகளுக்காகவே ப்ரவ்ருத்தங்களாகையால் ஈசுவர ஸ்வரூப நிரூபணத்தில் தர்மசாஸ்திரங்களும், கர்ம நிரூபணத்தில் இதிஹாஸ புராணங்களும் அங்யபரங்களன்று. ஆதலால் ஈசுவர ஸ்வரூப நிரூபணத்தில் தர்மசாஸ்திரம் இதிஹாஸ புராணத்தைக் காட்டிலும் துர்ப்பலமென்றும், அப்படியே ஆசார நிரூபணத்தில் தர்மசாஸ்திரத் தைக் காட்டிலும் புராணம் துர்ப்பலமென்றும் சொல்லுவது பிரமாணத்துக்கு ஒத்ததன்று. இந்த விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் இரண்டாவது அத்தியாயத்தில் ஸ்மிருத்யதிகரணத்தில் விளக்கமாகக் காணலாம். இந்த விஷயத்தைத் தர்மசாஸ்திர நிபந்தனகாரரான வைதிக ஸார்வபௌமர் "தசநிர்ணயி" என்கிற க்ரந்தத்தில் ஸ்ரீஜயந்தி நிர்ணயத்தில் விவரித்து நிரூபித்திருக்கிறார். இதுநிற்க.

— ரஹஸ்யக்ரந்த ப்ரஸ்தாவம் —

"சாஸ்த்ரஜ்ஞாநம் பஹுக்லேசம் புத்தேச் சலந காரணம்— உபதேசாத் ஹரிம் புத்வா விரமேத் ஸர்வகர்மஸு" என்கிற சுலோ கத்தின்படி உபதேச சாஸ்த்ரமும் பிரமாணம். உபதேச சாஸ்த்ர மாவது—ஆசார்யனால் உபதேசிக்கப்பட்ட ரஹஸ்யத்ரய சாஸ்த்ரம். இந்த விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் லகு ஸித்தாந்த ச்ருதப்ரகாசிகையில் விளக்கமாம். இவ்விஷயம் பிரமேய பரிச்சேதத்தில் விவரிக்கும் படியாயிருக்கும். இந்த உபதேச சாஸ்த்ரார்த்த விசார ரூபங்களான ஸூத்திரங்களாகவே "ஸ்ரீ வசனபூஷண"மும், "ரஹஸ்யத்ரய"மும், லோகதேசிகனால் அருளிச்செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கு வ்ருத்தி க்ரந்தம் மணவாளமாமுனிகள் அருளிச்செய்த வியாக்யானங்களாம். இந்த ஸூத்திரங்களுக்குப் பாஷ்யங்களாக குன்னத்தூர் ஐயன், சுத்தஸத்வம் எம்பாவையங்கார் என்கிற இவ்விருவரும், "ஸ்ரீ வசனபூஷண மீமாம்ஸா பாஷ்யம்" என்றும், "ரஹஸ்யத்ரய மீமாம்ஸா பாஷ்யம்" என்றும் இரண்டு பாஷ்யங்கள் முறையே அருளிச்செய்திருக்கிறார்கள்.

இந்த அர்த்தவிசேஷங்கள் ஸ்ரீபாஷ்யத்தில் ஸ்ரீபாஷ்யகார ராலே சுருக்கமாய் அருளிச்செய்யப்பட்டன. இவை பிரமேய பரிச் சேதத்தில் நிரூபிக்கும்படியாயிருக்கும். இவ்வர்த்த விசேஷங்கள்

"சரமசுலோக சந்திரிகை" யிலும், "சரமசுலோக டிப்பணி" யிலும் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி எம்பார் ஜீயர்ஸ்வாமி ஸாதித்த க்ரந்தங்களிலும் விஸ்தரிக்கப்பட்டன.

— சிஷ்டாசார ப்ராமாண்ய ப்ரஸ்தாவம் —

அப்படியே "தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்" என்கிறபடியே சிஷ்டாசாரமும் பிரமாணம். "தர்மஜ்ஞஸமயம் பிரமாண"மென்று முந்திச் சொல்லப்பட்டிருப்பதால், சிஷ்டாசாரம் முக்ய பிரமாணம். சிஷ்டர்களாகிறுர் பகவத் கடாக்ஷ விசேஷத்தால் அடையப்பெற்ற திவ்ய ஜ்ஞாநத்தை யுடையவர்களான ஆழ்வார்கள். இந்த விஷயத்தை "சொல்லும்அவிடு சுருதியாம்" என்று ஞானசாரத்தில் அருளாளப்பெருமா ளெம்பெருமானுர் ஸூசிப்பித்திருக்கிறுர். அப்படியே திருப்பாவையில் "மாலேமணிவண்ணு" என்கிற பாட்டில் "மேலையார் செய்வனகள்" என்கிற வாக்யத்தினுடைய வ்யாக்யாநவஸரத்தில் அழகியமணவாளப்பெருமாள்நயினுர் வியக்தமாக அருளிச்செய்திருக்கிறுர். நிற்க. மீமாம்ஸையில் சுருதிஸ்மிருதி விருத்தமான சிஷ்டாசாரம் பிரமாணமன்றென்று சொல்லியிருப்பது ஸாக்ஷாத் பகவத் தத்வதர்சிகளான ஆழ்வார்களைத் தவிர, கேவலஸ்மார்த்தாக்களான சிஷ்டர்களுடைய ஆசாரவிஷயம்.

— இராமாநுச நூற்றந்தாதியைப்பற்றி —

இனி இராமாநுச நூற்றந்தாதி திவ்யப்பிரபந்தங்களின் எண்ணிக்கையிற் சேராமல் திவ்யப்பிரபந்தங்களுக்குண்டான பெருமையைப் பெற்றது என்கிற விஷயம் சிஷ்டாசாரஸித்தம்.

ஆழ்வார்களின் அருளிச்செயல்களான திவ்யப்பிரபந்தங்கள் ஆழ்வார்கள் காலத்திற்குப் பிறகு பிரசாரம் இல்லாமல் லோபத்தையடைய, பின்பு நாதமுனிகள் காலத்தில் நாதமுனிகளுக்கு ஆழ்வார் நாலாயிரத்தையு மருளிச்செய்ததாகக் குருபரம்பரா ப்ரபாவத்திலிருக்கிறது. அப்போது இராமாநுச நூற்றந்தாதி இல்லாமையாலும் அவ்வாறில்லாதிருக்கினும், ஆழ்வார் இனி ஏற்படும் இந்தப் பிரபந்தத்தையும் ஸாக்ஷாத்கரித்து அருளிச்செய்தார் என்பதற்குப் பிரமாணமில்லாமையாலும், நாதனுக்கு நாலாயிரமும் உபதேசித்த பிறகு பூர்வர்களுக்கு இராமாநுச நூற்றந்தாதியும் உபதேசமாகவே வந்ததாகப் பிரமாணமில்லாமையாலும், "வேதத்துக்கு ஓமென்னு

மதுபோல்" என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்தபடி "கண்ணிநுண் சிறுத்தாம்பு"க்கு முந்தியுள்ள பிரபந்தங்கள் ப்ரண வார்த்த விவரணமாயும், நம: சப்தத்துக்கு முக்யார்த்தமான பாகவத சேஷத்வத்தை ப்ரதிபாதிக்கிறபடியால் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" நம: சப்தார்த்த விவரணமாயும் "பெரியதிருமொழி" மந்த்ரசேஷத்தி னுடைய விவரணமாயும், திருவாய்மொழி த்வயார்த்த விவரண மாயும், இயற்பா சரமசுலோகார்த்த விவரணமாயும் இருக்கும் படியை அழகியமணவாளப்பெருமாள்நாயனுர் ஆசார்யஹ்ருதயத்தில் நிர்வஹித்தபடியை அநுஸரித்து, "உபதேசரத்தினமாலை"யில் "வாய்த்ததிருமந்திரத்தின் மத்திம மாம்பதம்போல்"என்று தொடங்கி "அருளிச்செயல்நடுவே சேர்வித்தார் தாற்பரியந்தேர்ந்து" என்று "கண்ணிநுண் சிறுத்தாம்பை"த் திவ்யப்பிரபந்தங்களிற் சேர்த்து அருளிச்செய்ததுபோல் இராமாநுச நூற்றந்தாதியைத் திவ்யப்பிரபந் தங்களிற்சேர்த்து அருளிச்செய்யாமையாலும், அப்படி நாலாயிரத்திற் சேர்த்துக்கொள்வதாயிருந்தால் பாகவதசேஷத்வஞ் சொல்லப்பெற்ற இப்பிரபந்தத்தைக் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பிரபந்தத் தோடு சேர்த்து அநுஸந்திக்கவேண்டி வருகையாலும், ஸம்ப்ரதாயம் அவ்வாறில்லாமல் பிரபந்தாந்தத்தில் ஸேவித்து வருகிறபடியாலும், இராமாநுச நூற்றந்தாதி நாலாயிரத்திற் சேர்ந்ததன்று.

ஆகிலும் கோயிலில் பெரியதிருநாள் ஸப்தாவரணோத்ஸவத் தில் நம்பெருமாள் உடையவரைக் கோஷ்டிக்கு எழுந்தருளாம லிருக்க நியமித்து உடையவர் விஷயமான இப்பிரபந்தத்தைத் தாம் திருச்செவி சாத்தி யருளி அன்றுமுதல் திவ்யப் பிரபந்தங்களுக்குச் சமமாக இதை ஸேவித்துவரும்படி நியமித்தபடியால், திருப்பல் லாண்டுக்கு முந்தி இப்பிரபந்தத்தையும் சாற்றமுறை செய்கிற தும், திவ்யப் பிரபந்தங்களை அத்யயநம் பண்ணக்கூடாத அநத்யயந காலங்களில் இப்பிரபந்தத்தையும் அத்யயநம் பண்ணுமலிருக்கையு மாகிற திவ்யப் பிரபந்தங்களுக்குண்டான இந்த கௌரவத்தை இதற் கும் ஏற்படுத்தியிருக்கிருர்கள். இவ்விஷயம், "கோயிலொழுகு" முதலான பிரபந்தங்களில் தெளிவாகக் காணலாம்.

— நாலாயிரமென்னும் ஸங்கியையைப்பற்றி —

இதில் "திருவெழு கூற்றிருக்கை" 'சிறிய திருமடல்" "பெரிய திருமடல்" என்ற மூன்றும் ஒவ்வொரு பிரபந்தமும்

ஒவ்வொரு பாட்டாகக் கொள்ளவேண்டியது தமிழ்முறைக்குச் சேர்ந்தது. ஆயிரக்கணக்கான தொகைகளில் சற்றேறக்குறைய விருந்தாலும், அவைகளை அவ் வாயிரக்கணக்கால் வழங்குவதும் உசிதமே யாம். இதனை, இதிஹாஸ புராணாதிகளுக்கும் பகவத் விஷயம் முதலான வியாக்யானங்களுக்கும் சொல்லும் கிரந்த ஸங்கியைகளைக் கணக்கிட்டும் காணலாம். ... ...

— உபய மீமாம்ஸைகளைப்பற்றி —

வேதத்தின் கர்மபாகத்திற்கும், ப்ரஹ்மபாகத்திற்கும் முறையே அர்த்த விசாரமாக வியாஸ சிஷ்யரான ஜைமினியாலும், வியாஸராலும் செய்யப்பட்ட பூர்வ மீமாம்ஸையும், உத்தர மீமாம்ஸையும் இரண்டுங்கூடி ஒரே சாஸ்திரமாகும்; இதனை "ஸம் ஹிதமேதத்சாரீரகம் ஜைமிநீயேந ஷோடசலக்ஷணே நேதி சாஸ்த்ரைகத்வஸித்தி:" என்று போதாயந வ்ருத்தியிற் சொல்லியிருப்பதாலறியலாம். ஆகவே அவை இரண்டும் பரஸ்பரம் விருத்தங்களென்றுவது, வெவ்வேறு சாஸ்திரங்களென்றுவது கொள்ளக்கூடாது.

— மஹாபாரத ஸ்ரீராமாயணங்களைப்பற்றி —

இனி இதிஹாஸங்களுள் பாரதத்திற் காட்டிலும், ஸ்ரீராமாயணம் சிறந்த பிரமாணமாகும். இதனை, பட்டர் அருளிச்செய்த ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் "ராமாயணவத் மஹாபாரதமபி சரணம்" என்று ஸ்ரீராமாயணத்தை திருஷ்டாந்தமாகக் காட்டியிருப்பதாலறியலாம்.

— புராண விவேசனம் —

இனி, புராணங்களுக்குள் ராஜஸ தாமஸ புராணங்களைக் காட்டிலும், ஸாத்விக புராணங்கள் மேலானவைகள். அவற்றின் விபாகக்கிரமமும் நிருபிக்கலாகும். புராண ப்ரவர்த்தகரான ருஷிகள் ப்ரஹ்மாவிடஞ் சென்று எங்களுக்குப் புராண தத்வங்களைச் சொல்ல வேணுமென்று கேட்க, "நான் முக்குணவயத்தன்; ஸத்வம் தலையெடுத்தபோது நாராயணனைப் பிரதிபாதிக்கிற புராணங்களையும், ரஜோகுணத்தின் வயமானபோது என்னுடைய பெருமையைப் பேசும் புராணங்களையும், தமோகுணத்தின் வயமானபோது அக்கினி சிவன் இவர்களுடைய பெருமையைப் பேசும் புராணங்களையும்

சொல்லுவேன்; இவற்றுள் ஸத்வம் தலையெடுத்தபோது சொல்லிய புராணங்கள் உண்மை யுரைப்பதிற் சிறந்தவைகளாம்; மற்றைப் புராணங்களில் ஸாத்விக புராணங்களோடு மாறுபாடில்லாத பகுதிகளே மெய்யுரைகளாம்" என்றிவ்வாறு பிரமன் சொன்னதாகக் கூர்மபுராணங் கூறுவதால் ஸாத்விகபுராணங்கள் மேலானவைகள்.

— வ்யுத்பத்தி ப்ரகார நிருபணம் —

இனிச் சொற்கள் பொருள்களை யுணர்த்துமாறு காட்டப்படும். பாலர்களுக்குத் தாய்தந்தை முதலானவர்கள் ஒரோர் பொருளைச் சுட்டிக்காட்டி, அததற்குரிய சொல்லைச் சொல்லிப் பயிற்றுதலால் உண்டாகும் சப்தார்த்த ஸம்பந்த ஜ்ஞாநத்தை (சொற்பொருளுணர்ச்சியை)ப் புத்தி பூர்வக வியுத்பத்தியென்று சொல்லலாகும். இவ்வாறன்றி ஒருவன் ஒருவனை ஒரு காரியத்திலேவும்போது, ஏவுவோன் சொல்லுஞ் சொற்களையும், இயற்றுவோன் செய்யுங் காரியங்களையுங் கண்டு இச்சொற்கு இது பொருளென்றுணர்தலை யாத்ருச்சிக வ்யுத்பத்தி யென்பர். இவ்வாறு ஒவ்வொரு சொல்லும் அததற்குரிய பொருளையுணர்த்தி முடியும் சொல்லாற்றலை (சப்த வ்ருத்தியை)ப் பரியவஸாநவிருத்தியென்று வழங்குவர்.

— அபர்யவஸாநவ்ருத்தி நிருபணம் —

சரீரத்தை யுணர்த்துஞ் சொற்களும், குணத்தை யுணர்த்துஞ் சொற்களும், ஜாதியை யுணர்த்துஞ் சொற்களும், அவற்றை யுணர்த்தும் அவ்வளவில் நில்லாமல் முறையே சரீரத்தையுடைய ஜீவனையும், குணங்களையுடைய பொருள்களையும், ஜாதிக்குப் பற்றுக்கோடான (ஆசிரயமான) வடிவத்தையும், உணர்த்துவனபோல ஒவ்வொரு சொல்லும் அதனதன் பொருளுணர்த்தியவளவில் நில்லாமல் அவ்வப் பொருள்களையெல்லாம் உடலாகவுடைய ஸர்வேசுவரனளவிற் செல்லும் சொல்லாற்றலை (சப்தவிருத்தியை) அபர்யவஸாநவ்ருத்தி என்பர். எப்படி தேவதத்தன் என்ற பெயர் தேவதத்தனது சரீரத்தை யுணர்த்தி, அதற்கபிமானியாயுள்ள ஜீவனையுமுணர்த்துமோ அப்படியே அந்த ஜீவனுக்கும் அந்தர்யாமியான ஈசுவரனையுஞ் சொல்லுமாகையால், உலகவழக்கான சொற்களும், வேதவழக்கான சொற்களும், ஸர்வேசுவரனைச் சொல்லத் தட்டில்லை. இப்படியான அபர்யவஸாநவ்ருத்தி யிருந்தபோதிலும்; ஜ்ஞாத்வம், ஜடத்வம், சரீரம்

முதலான சொற்கள் ஈசுவரனை யுணர்த்தாமல் கோத்வம், கடத்வம், சரீரம் என்னும் அப்பொருள்களையே யுணர்த்தும். நீல: சுக்ல: தேவ தத்த: என்பனபோன்ற சொற்கள் ஒருகால் நீலரூபத்தையும், சுக்ல ரூபத்தையும், தேவதத்த சரீரத்தையும், முறையே உணர்த்தியும், ஒருகால் இவைகளையுடைய பொருள்களையும் உணர்த்தியும் நிற்கும். இவ்வாறான சொற்பொருளாற்றல்களை இடங்கண்டுகொண்டு லௌகிக வைதிக வாக்கியார்த்தங்களை யறியவேண்டும்.

— இனி, பாஷா நிரூபணம் —

ஸம்ஸ்கிருதம் தேவபாஷையாகையால் மேன்மையுடையதே: திராவிடபாஷை பிசாசபாஷையாகையால் தாழ்வுடையதாகும்: ஆகவே அதிலுள்ள பிரபந்தங்களும் பிரமாணமாகும்படி எங்ஙனே? என்னில்? தாழ்வுடைய பாஷையானாலும் "ஹரிகீர்த்திம் விநைவாந் யத் ப்ராஹ்மணேந நரோத்தம!, பாஷாகாநம் நகாதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயா க்ருதம்" என்னும் மாத்ஸ்ய புராண வசனத்தின்படி பகவத் விஷயமாகையாலும், ஸம்ஸ்கிருதம்போல் அநாதியாகையாலும், அகஸ்தியர் இப்பாஷைக்குப் பிரவர்த்தகராகையாலும், "ஸம்ஸ்க்ருத ச்ருதயோ யத்வத் த்ராமிட ச்ருதயஸ் ததா" என்கிற பிரமாணத்தாலும் தோஷமில்லையென்று கொள்ளத்தக்கதே.

மேலும் ஸம்ஸ்கிருத பாஷையே கொள்ளத்தக்கதென்றால் ஜைந பௌத்த சாஸ்திரங்களும் கொள்ளத்தக்கதாக வேண்டும்; ஆதலால் பாஷைகளைக் கொள்ளுதலும் விடுதலும் விஷயங்களைப் பற்றியவை யாம். இந்த விஷயங்களை வேதாந்தாசார்யர் பாதுகா ஸஹஸ்ரத்தில் "விந்த்யஸ்தம்பாதவிஹதகதே: விஷ்வகாசாந்த ஸிந்தோ: கும்பீஸூநோ ரஸூர கபளக்ராஸிந: ஸ்வைரபாஷா" என்றும், த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் "வேதாந் ஆகஸ்த்ய பாஷாவபுஷ உததரத் ச்ரேயஸே ப்ராணிநாம் ய:" என்றும் அருளிச்செய்திருக்கிறார். ஈட்டிலும் இவற்றிற்குப் பரிஹாரம் அருளிச்செய்திருப்பது கண்டுகொள்ளத்தக்கதாம்.

இனி, பிரபந்தங்களுக்கு வக்தாக்களான ஆழ்வாராதிகளுடைய அவதார விசேஷம் விசாரிக்கலாகும்.

ஆழ்வாராதிகள் நித்யஸூரிகளுடைய அவதார விசேஷங்களென்று புராணாதிகள் சொல்லுகின்றன; அதை அநுஸரித்து

திவ்யஸூரி சரிதையிலும். குருபரம்பரா ப்ரபாவத்திலும் சொல்லி யிருக்கிறார்கள். ஆனாலும் ஈட்டிலும் ஆசார்யஹ்ருதயத்திலும் ஆழ்வார் ஸம்ஸாரிகளி லொருவராகச் சொல்லப்பட்டிருக்கிறார். இதற்குப் பிரமாணம் "மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து" என்பது தொடக்க மான திவ்யஸூக்திகளாம்.

புராணங்களில் அவதார விசேஷமாகச் சொல்லியிருப்பதைக் கொண்டு ஆழ்வாருடைய ஸூக்திகளை அபிநய பரங்களாகக் கொள்ளுவோமானால், தங்கள் தங்களுடைய ஸ்வரூப ஸ்வபாவ நிர்ணயத்தில் தங்கள் தங்களுடைய வாக்கியங்களே முக்கிய பிரமாண மாகையாலும், *பொய்யில்பாடலான பிரமாணசிரேஷ்டமாயும், ஸ்வவசனமாயுமுள்ள பாசுரத்தை அநுஸரித்து புராணங்களே வைபவ பரங்களென்று கொள்ளவுங்கூடும்; ஆகையால் இரண்டு பிரமாணங்களுக்கும் விரோதமில்லாமல் நிருபிக்கவேண்டும். அப்படி நிருபிக்குங்கால், "பூர்வோத்டங்கேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌயுகே, அநுப்ரவிச்ய குருதே" என்று வேதாந்தாசார்யர் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளிச்செய்தபடி ஸம்ஸாரியான சேதன விசேஷத்தில் ஸர்வேசுவரனுடைய சக்தியாவேசமுண்டாயிருப்பதைக் கொண்டு பரசுராமாவதாரம் போலும் ஆவேசாவதாரமென்று சொல்லலாம்.

ஒரு சேதநவிசேஷத்தில் சக்த்யாவேச முண்டாவதற்கு ஹேது ஸர்வேசுவரனுடைய நிர்ஹேதுக கடாக்ஷமென்று நிர்வஹிக்கும்படி யிருப்பதால்; ஸம்ஸாரிகளில் ஒருவரை ஈசுவரன் தன்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தால் "மயர்வறமதிநலமருளினன்" என்பதற்கும் விரோதமில்லை. ஆகவே "ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்ய மயீம் தநும். மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ர பாணிநா" என்கிற சுலோகத்தால் ஆசார்யனைப் பகவதவதாரமென்று சொல்லியிருப்பதும் பொருத்தமுடையதாம்.

இதை அநுஸரித்தே ஸ்ரீ வசனபூஷண வ்யாக்யானத்தில் ஜநந்யாசார்ய ஸ்வாமி "குருரேவ பரம்ப்ரஹ்ம" என்கிற சுலோகத்தில் குரு சப்தத்துக்கு அர்த்தம் விலக்ஷணஜீவ விசிஷ்ட பகவத் தத்வம் என்றும், அந்த குரு சப்தமான எழுவாய்க்கும் ப்ரஹ்ம என்கிற பயனிலைக்கும் ஒரு நிலையிருக்கை [ஸாமாநாதிகரண்யம்] கூடுமென்

றும் நிர்வஹித்திருக்கிறுர். ரஹஸ்யத்ரயஸார வ்யாக்யானமான ஸாரா ஸ்வாதிநியிலும், ஆழ்வார்கள் ஆவேசாவதாரமென்றும், பரசு ராமாவதாரம் ஆவேசாவதாரமாயிருந்தபோதிலும், தசாவதாரத்துட் சேர்க்கப்பட்டிருப்பதுபோல் ஆழ்வார்களையும், அபிநவ தசாவதார மென்று கொள்ளலாம்படி சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியான பொருத்தங்களைக்கொண்டு "ஈடு" "ஆசார்ய ஹ்ருதயம்" திவ்யஸூக்திகள், புராணங்கள் இவைகளுக்கு விரோத மில்லையென்று கண்டுகொள்ளத்தக்கது.

இனி உடையவர், தேசிகன், மணவாளமாமுனிகள்
இவர்களுடைய அவதார விஷயம் நிருபிக்கப்படுகிறது.

உடையவர் விஷயமான நூற்றந்தாதியில் "அடையார் கமலத் தலர்மகள் கேள்வன்" என்கிற பாசுரத்தில் உடையவரைப் பஞ்சா யுதங்களுடைய அவதாரமாகச் சொல்லியிருக்கிறது. அப்படியே வேதாந்தாசார்யரும் "வவ்ருதே பஞ்சபிராயுதைர்முராரே:" என்றும், "விஷ்வக்ஸேநோ யதிபதிரபூத் வேத்ரஸாரஸ் த்ரிதண்ட:" என்றும் யதிராஜ ஸப்ததியில் அருளிச்செய்திருக்கிறுர். திருவனந்தாழ்வான் அவதாரமாகப் பிரஸ்தாவிக்கவில்லை; ஆனல் குருபரம்பரா ப்ரபாவத் திலும், திவ்யஸூரி சரிதத்திலும் திருவனந்தாழ்வா னவதாரமாகப் பேசப்பட்டிருக்கிறது. தொண்டனூரில் ஜைனர்களுடன் வாதம் செய்யும்போது திரைக்குள் திருவனந்தாழ்வானுக இருந்ததாகவும், "கலௌ கச்சித் பவிஷ்யதி" என்று யாதவகிரி மாஹாத்மியத்தில் இருக்கிற சுலோகத்தில் "கச்சித் பவிஷ்யதி" என்று சொல்லியது தம்மையென்று உடையவர் காட்டினதாகவும் குருபரம்பரா ப்ரபா வத்திலிருக்கிறது. அதற்கு அடையாளமாக இப்போது தொண்ட னூரில் திருமுடியில் ஏழு படங்களுடன் அர்ச்சாரூபமாக ஸேவை ஸாதித்துக்கொண்டிருக்கிறுர். ஸ்ரீ வரவரமுனி சதகத்தில், திருவனந் தாழ்வான் முந்தி உடையவராக அவதரித்து, பிந்தி மணவாள மாமுனிகளா யவதரித்ததாக எறும்பியப்பா அருளிச்செய்திருக்கிறுர். அப்படியே மணவாளமாமுனிகள் விஷயமான பிரபந்தத்தில், "ஆதியிலே அரவரசை யழைத்து" என்கிற பாட்டில் உடையவரைத் திருவனந்தாழ்வான் அவதாரமாகச் சொல்லியிருக்கிறது. இப்படி யிருக்கிற பிரமாணங்களைக்கொண்டு உடையவர் திருவனந்தாழ்வா

னுடைய பூர்ணாவதாரமாகவும், பஞ்சாயுதங்களுடைய சக்தியாவேச மாகவும் கொள்க.

அப்படியே வேதாந்தாசார்யரை "வேங்கடேசாவதாரோயம் தத்கண்டாம்சோதவாபவேத்" என்கிற சுலோகத்திலும் "வித்ராஸினீ விபுதவைரி வருதினீநாம் பத்மாஸநேந பரிசாரவிதௌ ப்ரயுக்தா, உத்ப்ரேக்ஷ்யதே புதஜனை: உபபத்திபூம்நா கண்டா ஹரே: ஸமஜநிஷ்ட யதாத்மநேதி" என்று வேதாந்தாசார்யர் அருளிச்செய்திருக்கிற ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும், வேதாந்தாசார்ய விஷயமான ஆசார்ய சம்பு முதலான கிரந்தங்களிலும் சொல்லியிருக்கிறது.

திக்விஜயம் எம்பார்ஸ்வாமி யருளிச்செய்த சரமசுலோக டிப்பணியில் "அஸ்மத்குரு மநோஜுஷ்டகண்டா சேஷாவதாரயோ:, ஆஸ்யோத்தௌ நாதநிச்வாஸள நிக்நதாம் நோ விகாதகாந்" என்று கண்டாவதாரமாகச் சொல்லியிருப்பதால் வேதாந்தாசார்யரைக் கண்டாவதாரமாகக் கொள்ளவேணும்.

அப்படியே மணவாளமாமுனிகள், திருவனந்தாழ்வானுகை உத்தமநம்பி முதலானவர்களுக்கு ஸேவை ஸாதித்திருப்பதாலும், "ரகுபதே ராஸ்திதோ பத்ரபீடம்" என்று எறும்பியப்பா தமக்கு ஸேவை ஸாதித்த பிரகாரத்தை வரவரமுனி சதகத்தில் அருளிச்செய்திருப்பதாலும், மற்றுமுள்ள ஐதிஹ்ய விசேஷங்களாலும் திருவனந்தாழ்வா னவதாரமென்று கொள்ளத்தட்டில்லை.

"சேஷச்ஸ்ரீமாந் நிகமமகுடீ யுக்ம ரக்ஷாப்ரவ்ருத்த:
விந்தந் ராமாவரஜமுநிதாம் ரம்யஜாமாத்ருதாஞ்ச"

என்று நியாய பாஸ்கரத்தில் த்விதீய பரிச்சேதத்தில் அனந்தாழ்வா னருளிச்செய்திருப்பதையுங் கண்டுகொள்க.

இனி ஆழ்வார்கள் தாழ்ந்தவர்ணங்களிலுமவதரித்தவர்களாகையால் அவர்கள் அருளிச்செய்த பிரபந்தங்களுக்கு அப்ராமாண்ய சங்கை பரிஹரிக்கப்படுகிறது.

முதலில் ஜாதியினுடைய ஸ்வரூபம் நிருபிக்கப்படுகிறது. ஸித்தாந்தத்தில் ஜாதி, அவயவ ஸம்ஸ்தான விசேஷமென்று நிருபித்து, நிரவயவ த்ரவ்யங்களில் அவயவ ஸம்ஸ்தானரூப ஜாதி கூடாமையால் பகவத்ஸங்கல்ப விசேஷமென்று முடிவில் நிர்ண

யிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ப்ராஹ்மண்யம் முதலான ஜாதிகளும் ஸங்கல்பரூபமென்றே கொள்ளவேணும். இந்த விஷயம் "ததுபர்யபி பாதராயணஸ்ஸம்பவாத்" என்கிற ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் சுருதப்ரகாசிகையில் நிரூபிக்கப்படுகிறது.

மேலும் நியாய ஸித்தாஞ்ஜந வியாக்யானத்தில் ரங்கராமாநுஜ ஜீயர், பிராமணனுக்கு பிராமண ஸ்திரீயினிடத்தில் உண்டாகையே பிராஹ்மண்யமென்று சொல்லும் பக்ஷத்தில் விசுவாமித்திரர் முதலானவர்களிடத்தில் அது கூடாமையால் சக்தி விசேஷமாகக் கொள்ளவேணுமென்று நிரூபித்திருக்கிறார். கீதா பாஷ்ய தாத்பரிய சந்திரிகையில் "ப்ராஹ்மம் கர்ம ஸ்வபாவஜம்" என்கிற சுலோக வியாக்யான அவஸரத்தில், ஸத்வகுண மிகுதியான ப்ரகிருத்யம்சங்களுடைய ஸங்காதம் பிராஹ்மண்யமென்றும் இப்படியே ரஜோகுண மிகுதியான பிரகிருத்யம்ச ஸங்காதம் க்ஷத்திரியத்வமென்றும், இப்படியே வைச்யத்துவ சூத்ரத்வாதிகளையும் ரஜோகுணம் குறைவாயும் தமோகுணம் அதிகமாயுமுள்ள பிரகிருத்யம்ச ஸங்காதமென்றும். தமோகுணமாத்ர பிரகிருத்யம்ச ஸங்காதமென்றும் நிரூபித்திருப்பது ஸர்வ ஸாதாரணமாகக் கொள்ளலாகாது. ஏனெனில்? விசுவாமித்ர வீதஹவ்ய ராஜாதிகளிடத்தில் அது கூடாமையால் ஸம்பவாபிப்பிராயமாம். ஆதலால் ஸங்கல்ப விசேஷமே ஜாதியாகையால் அந்த ஜாதியும் தபஸ்ஸு, பிராஹ்மணவாக்கியம். சாபம் இவைகளால் மாறுவதுபோல் ஆழ்வார்களிடத்திலும் பகவத்கடாக்ஷ விசேஷத்தாலே மாறத் தட்டில்லை.

ஆனால், விசுவாமித்ர ப்ராஹ்மண்யத்துக்குக்காரணம் சருவ்யத்யாஸமேயன்றி தபஸ்ஸு காரணமாகாதென்பது சேராதென்று நிரூபிக்கப்படுகிறது. சருவித்யாஸமே விசுவாமித்ர ப்ராஹ்மண்யத்துக்குக் காரணமென்னில்? இந்தச் சருவித்யாஸம் பரசுராமனிடத்திலும் இருப்பதால் பரசுராமனுக்கு க்ஷத்ரியத்வம் ஏற்படத் தட்டில்லை. ஆனால், அப்படி க்ஷத்திரியத்வங் கொள்ளில் "ப்ராஹ்மணோஸீதி". என்ற ஸ்ரீராமாயணத்தோடு விரோதிக்கும். மேலும் பாரதத்தைக் காட்டிலும் ஸ்ரீராமாயணம் பிரபல ப்ரமாணமாகையால் அந்த ஸ்ரீராமாயணத்தில் "ப்ராஹ்மண்யம் தபஸாப்ராப்தம்" என்கிறதோடு விரோதிக்கும். ஆனால் சருவித்பாஸஞ் சொல்லியிருப்பதற்குப் பிரயோஜனம் யாதெனில்? விசுவாமித்ர ப்ராஹ்மண்யம் வருகைக்குக்

காரணமான தவம் புரிதற்கு ஹேதுவென்று கொள்ளவேண்டும். பாகவதம் நவமஸ்கந்தத்தில் விசுவாமித்ரருக்கு தபஸ்ஸாலே ப்ராஹ்மண்யம் ஏற்பட்டதென்று சொல்லுகிற இடத்தில் சருவித்யாஸம் ப்ராஹ்மண்யத்துக்கு ஹேதுவான தபஸ்ஸுக்குக் காரணமென்று வீரராகவீயத்தில் நிருபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் "ஸ்வவசநே க்ஷத்ரியம் விச்வாமித்ரம் ப்ராஹ்மணீ க்ருதவதோ வஸிஷ்டஸ்ய" என்று பட்டர் அருளிச்செய்திருக்கிறார்.

முராரி கவி, "அநர்க்கராகவம்" என்கிற நாடகத்தில் த்ரிஜன்மாவென்று சொல்லியிருக்கிறார். அஃதாவது 'ஔத்பத்திகே ப்ராஹ்மணோ ப்ராஹ்மண்யே த்ரிஜாதகாந் முநே:' என்று சொல்லியிருக்கிறது. போஜராஜாவும் போஜசம்புவில் "ஸங்க்ராந்த வர்ணாந்தர காதிஸூநோ: ஸம்பர்க்க புண்யாதிவ ராமபத்ர:" என்று சொல்லியிருக்கிறார். ஆகையால் சருவித்யாஸத்தை விசுவாமித்ரருடைய ப்ராஹ்மண்யத்துக்கு ஹேதுவாகக்கொள்ளில் அது ஜன்மம் முதல் அநுவர்த்திக்க வேண்டியதாகையால் வர்ணாந்தரமென்றும் திரிஜன்மாவென்றும் சொன்னது பொருந்தாது. அப்படியே விசுவாமித்ர விஷயத்தில் சருவித்யாஸத்தைக் காரணமாகச் சொன்னாலும் ருஷி வாக்யத்தாலே ப்ராஹ்மண்யத்தை யடைந்த வீதஹவ்ய விஷயத்தில் வேறு காரணம் சொல்லமுடியாது. அப்படியே இந்த விஷயத்தை "கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ் ஸர்வயோநிஷு, ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்று பாரத்வாஜ ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கிறது. பாகவதத்திலும் "தக்த துர்ஜாதி கில்பிஷ:" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தாழ்ந்தஜாதி போனால் உயர்ந்தஜாதி வரும்பக்ஷத்தில் அதுக்குண்டான தர்மங்களும் வர ப்ரஸங்கிக்குமே எனில்? அதற்குப் பரிஹாரம் சொல்லப்படுகிறது. எப்படி ராமகிருஷ்ணாத்யவதாரங்களில் அந்த விக்ரஹம் அப்ராகிருதமாகையால் ஒரு ஜாதியுமில்லையோ அதுபோல "ப்ராதுர்பாவைஸ் ஸுரநரஸமோதேவதேவ: ததீயா ஜாத்யா வ்ருத்னதரபிச குணத: தாத்ருசோ நாத்ர கர்ஹா" என்கிற சுலோகத்தின்படி தாழ்ந்தஜாதி போனது மாத்ரமேயல்லது அவர்களிடத்தில் மற்றொரு ஜாதி வருவதில்லை. ஸாஜாத்யத்தைக்கொண்டு அந்தந்த ஜாதிகளுக்கு ஏற்பட்ட தர்மாநுஷ்டானமும் மற்ற ஜாதிகளுக்கேற்பட்ட அநநுஷ்டானமும் ஏற்பட்டிருக்கும்; ஸ்வவர்ண மர்யாதையைக் கடக்கவுங் கூடாது. ஆகையால் ஆழ்வார்கள் ராம

கிருஷ்ணாத்யவதாரங்கள்போல ஸர்வவர்ணாதீதர்களாகையால் தேஹத்தைப்பற்றிவரும் ஜன்மத்துக்குப் பொருத்தமான உயர்வு தாழ்வு வருவதற்கு இடமில்லை.

இனி இதற்கு அனுகுணங்களான அனுஷ்டானங்கள் காண்பிக்கப்படுகின்றன. பாரதத்தில் தர்மபுத்ர ராஜஸூய யாகத்தில் பட்டத்துக்குரிய க்ஷத்திரியர்கள், ருஷிகள் இவர்களுடைய ஸபையில் கிருஷ்ணனுக்கு அக்ரபூஜை செய்ததாகச் சொல்லப்படுகிறது. பெரும்புலியூரில் திருமழிசைப்பிரான் வருகிறபோது அவரை, சூத்ர ஜாதியாக நினைத்து வேதாத்யயநத்தை நிறுத்தியவர்கள் பின்பு அவர்களே அப்படிப்பட்ட திருமழிசைப்பிரானுக்கு யஜ்ஞத்தில் அக்ரபூஜை செய்திருக்கிறார்கள். கிருஷ்ணன் தூதுசெல்லுகைக்காக ஹஸ்தினாபுரத்துக் கெழுந்தருளும்போது சூத்ரஜாதியான விதுரருடைய வீட்டில் அமுது செய்ததாகச் சொல்லியிருக்கிறது. சூத்ர ஜாதிக்கு சமையற்றொழிலில் அதிகாரம் இருந்தபோதிலும் சூத்திர வீட்டில் சூத்திர சொத்தான ஆஹாரத்தை அமுது செய்யக் கூடுமா? அப்படி சாஸ்திர ஸித்தமாக இருக்கும் பக்ஷத்தில் துர்யோதனன் "பீஷ்ம த்ரோணா வதிக்ரம்ய மாஞ்சைவ மதுஸூதந, கிமர்த்தம் புண்டரீகாக்ஷ புக்தம் வ்ருஷல போஜநம்" என்று கேட்க பிரஸக்தியில்லை. ஆனால் "ப்ராப்யம் ஜ்ஞானம் ப்ராஹ்மணாத் க்ஷத்ரியாத்வா" என்கிற சுலோகத்தின்படி ஆபத்காலத்தில் தாழ்ந்த வர்ணஸ்தர்கள் உயர்ந்த வர்ணஸ்தர்களுக்கு உபதேசிக்கலாமென்னில்? அப்படியே உபதேசிக்கும் பக்ஷத்தில் அவர்களிடத்தில் அநுவ்ரஜ்யை சுச்ருஷை கூடாதென்று சாஸ்த்ரம் சொல்லியிருக்க, மதுரகவிகள் ஆழ்வார் விஷயத்தில் அநுவ்ரஜ்யை முதலானவை செய்யக்கூடாது. மேலும் திருப்பாணாழ்வாரை லோகஸாரங்க மஹாமுநிகள் எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய்ப் பெரியபெருமாள் ஸந்நிதியில் சேர்த்திருக்கிறார்; ஆதலால் திருப்பாணாழ்வார் முநிவாஹனர் என்று சொல்லப்படுகிறார் ஆழ்வார்கள் அர்ச்சையில் பூஜ்யர்களென்றும், விபவத்தில் பூஜ்யர்கள் அல்லரென்றும் சொல்லுவதும் மதுரகவிகள் விபவத்தில் ஆழ்வாரை அநுவர்த்தித்தார் என்பதோடும் விரோதிக்கும். மேலும் விபவத்தில் அர்ச்சிக்க நேரிடாமல் போனதற்காக பிரதிநிதியாக அர்ச்சையில் விபவஸஜாதியமான விக்ரஹத்தை ஏற்படுத்திக்கொண்டு பூஜிப்பது லோகஸித்தம். இந்த விஷயம் ஏகலவ்யனிடத்திற் காணலாம்.

இப்படியே திருக்கச்சிநம்பி விஷயத்திலும் "ராமாநுஜ முநேர்மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜநாச்ரயம்" என்று தனியன் அநுஸந்தித்து வருகிறார்கள். ஆனால் விதுர ப்ரஜாகரத்தில் விதுரர் "சூத்ரயோநாவஹம் ஜாதோ நாதோந்யத்வக்து முத்ஸஹே" என்று த்ருதராஷ்ட்ரன் தன்னை சூத்ரனாக நினைத்திருப்பதனாலும், தாம் ஜ்ஞாநாதிக்யத்தைக்கொண்டு சூத்ரஜாதிக்குத் தகாத பிரஹ்மவித்யோபதேசத்தைச் செய்யும் பக்ஷத்தில் ஸாமாந்ய சூத்ரர்களும் அப்படிச் செய்வார்களாகையால் லோகஸங்க்ரஹம் ஏற்படாதென்பதை உத்தேசித்துச் சொன்னதாகக் கொள்ளவேணும். அப்படிக் கொள்ளாதவரையில் கீழ் விதுரர் வீட்டில் கிருஷ்ணன் அமுது செய்ததோடும் விதுரரை தர்மபுத்ரர் ப்ரஹ்ம மேதத்தாலே ஸம்ஸ்கரித்தாரென்பதோடும் விரோதிக்கும். ப்ரஹ்மமேத ஸம்ஸ்கார விஷயத்தில் பாரதத்தில் "யதிதர்மமவாப் தோஸௌ, போபோ ராஜந் ந தக்தவ்யம் ஏதத் விதுர ஸம்ஜ்ஞிதம்" என்கிற அசரீரி வாக்கியத்தை ப்ரமாணமாகக் கண்டுகொள்வது. தூஷ்ணீம் ஸம்ஸ்காரமென்னில் கீழ்ச்சொன்ன வாக்யத்தோடு விரோதிக்கும்.

— சில ஆக்ஷேப ஸமாதானங்கள் —

ஆனால் த்ரௌபதி விவாஹம்போல் சில வியக்திகளிடத்திலிருக்கிற அநுஷ்டானம் நமக்கு க்ராஹ்யமன்றென்று சொல்லும் பக்ஷத்தில் அங்கு இப்படிப்பட்ட விவாஹம் கூடாதென்று துருபத மஹாராஜா ஆக்ஷேபிக்க, வியாஸர் ஸமாதானஞ் சொன்னதுபோல் இங்கு அப்படி ஆக்ஷேப ஸமாதானங்கள் ஏற்படவில்லை. ஜ்ஞாநாதிக்ய விஷயத்தில் இப்படியே செய்யவேண்டுமென்று அசரீரி வாக்யத்தால் தெரியவருகிறது. இப்படியே சக்ரவர்த்தி திருமகன் ஜடாயுவுக்கு ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரம் பண்ணிய விஷயத்தையும் கண்டுகொள்வது. இப்படி சாஸ்த்ரார்த்த மிருந்தபோதிலும் அந்தப்படியே அனுஷ்டிக்கும் பக்ஷத்தில் லோகக்ஷோபம் பிறக்குமென்றும் அப்படிச் செய்வது வ்யக்தி விசேஷ நியதமென்றும் தேசிகன் அருளிச்செய்திருக்கிறார், இப்படியிருந்தபோதிலும், ஸாக்ஷாத்க்ருத பகவத்தத்வரான திருமங்கையாழ்வார் "அந்தணர் மாட்டந்தி வைத்த மந்திரத்தை" என்றருளிச்செய்த பாசுரத்தின் வியாக்யானத்தில் பெரியவாச்சான்பிள்ளை, "திருவுள்ளத்தில் வேதார்த்தங்கள் விசதமாக இருக்கச்செய்தேயும் தமக்கு அநதிகாரந்தோற்ற அந்தணர்மாடென்கிறார்காணும்" என்றருளிச்செய்திருக்கிறார்.

மதுரகவிகள் முதலானவர்கள் ஆழ்வாருடைய அதிமானுஷ்ய வியாபாரத்தைக் கண்டு மிகவும் அனுவர்த்திக்க விசேஷார்த்தங்களை அருளிச்செய்தாரே ஒழிய ஸர்வ ஸாதாரணமாக அருளிச்செய்யவில்லை. திருக்கச்சிநம்பி நேரில் பேரருளாளப்பெருமாளுடன் வார்த்தை சொல்லிக்கொண்டிருந்ததும் "அஹமேவ பரம் தத்வம்" என்று தொடங்கி ஆறுவார்த்தை வர்க்க அருளிச்செய்ததும் ப்ரஸித்தம்.

அப்படியிருக்க, அவர் லோக மர்யாதையை அதிக்கிரமிக்க வில்லை. எப்படிப்பட்ட ஜ்ஞானவான்களா யிருந்தபோதிலும் அவ ரவர்களுடைய வர்ணதர்மங்களை லோக ஸங்க்ரஹத்தின் பொருட்டு அனுஷ்டித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். இந்த விஷயத்தை "யதிஹ்யஹம் ந வர்த்தேய ஜாது கர்மண்யதந்த்ரித:. ஸங்கரஸ்ய ச கர்த்தாஸ்யாம் உபஹந்யாமிமா: ப்ரஜா:" என்று கீதாசார்யன் அருளிச்செய்தான். பாரத்வாஜ ஸம்ஹிதையில் ஆசார்யன் நல்ல குலத்தில் அவதரித்தவனு யிருக்கவேணும்; ஜ்ஞாநாநுஷ்டானங்க ளோடே கூடினவனு யிருக்கவேணும்; ப்ராஹ்மணர்களைத் தவிர மற்றவர்கள் ஆசார்யர்களாகக் கூடாதென்று சொல்லிவிட்டு "ப்ரத்யக்ஷிதாத்ம நாதாநாம் நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்று சொல்லியிருப்பதால் ப்ரத்யக்ஷிதாத்ம நாதர்களான ஆழ்வார்கள் ஆசார்யர்களாக இருப்பது பொருத்தமானதே யாம்.

இப்படி ப்ரமாண நிரூபணம் முந்திச் செய்யவேண்டிய விஷய மும் ப்ரமாணங்களுடைய ஸங்க்யைகளும் பிரமாணங்களுடைய பிராபல்ய தௌர்பல்யங்களும் ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்தி களுக்கு ப்ராமாண்ய நிர்வாஹத்தின் பொருட்டு பாஷா விஷய ப்ரஸ் தாவமும் ஆழ்வார்களுடைய அவதார விஷய விசாரமும் அதுவடி யாக ஜாதி விஷய ப்ரஸ்தாவமும் யதாமதி நிரூபிக்கப்பட்டன. இப்படி பிரமாணங்களின் ஸ்வருபமும் லக்ஷணமும், ஸங்கியைகளும் சொல்லி இடையே ப்ராஸங்கிகமாய் ப்ரமாதாக்களின் அவதார ப்ரஸ்தாவமடியாக வந்த ஜாதிசங்காபரிஹாரமும் செய்யப்பட்டது.

— இனி ப்ரமேயம் நிரூபிக்கப்படுகிறது —

ப்ரமேயங்களாவன—ப்ரமாணங்களால் உள்ளபடி அறியப்படு மவைகள்; அவையாவன தத்வ ஹித புருஷார்த்தங்கள்.

அவற்றுள் தத்வமானது, சேதனனுக்கு ப்ராப்யமாய் அவனுக்கு இஷ்டமான பலன்களைக் கொடுக்குமதாய் இவனுல் செய்யப்படும் உபாஸனம் முதலியவற்றிற்கு விஷயமாயுள்ள பரதேவதை. (இது பரதத்துவமாகையால் அவரதத்துவமாகிற சேதனுசேதனங்களும் சரீரதயா இதிலடங்கும்.)

ஹிதமாவது, அந்த பரதேவதையான ஈசுவரனை அடைவதற்கு ஸாதனமாயும் அவன் பலனளிக்கும்படி அவனை உவப்பிப்பதாயுமுள்ள பக்தி முதலான உபாயங்களாம்.

புருஷார்த்தமாவது, புருஷனுல் விரும்பத்தக்கவையான ஐசுவர்ய கைவல்யங்கள். இம்மூவகையான ப்ரமேயங்களுக்குள் தத்வார்த்தமான ஸர்வேசுவரன்—சேதனுசேதனங்களை சரீரமாகக் கொண்டவனுயும் அவைகளைக் காட்டிலும் விலக்ஷணனுயுமிருப்பதால் முதலில் சேதனுசேதனங்களினுடைய ஸ்வரூப நிருபணம் செய்கை ஆவசியகம். இவைகளை உள்ளபடி யறிந்து புருஷார்த்தங்களை அடையவேண்டியவன் சேதனனுகையாலே முந்தி சேதனனுடைய ஸ்வரூபம் நிருபிக்கப்படுகிறது.

— சேதநஸ்வரூப நிருபணம் —

சேதன ஸ்வரூபமாவது—ஈசுவரனுக்கு சேஷமாயும் பரதந்திரமாயும் ஜ்ஞானஸ்வரூபமாயும் ஜ்ஞானமுடையதாயும் நித்தியமாயும் அணுவாயும் சரீரந்தோறும் வேறுபட்டிருப்பதாயும் தேஹேந்திரிய மந: ப்ராணன்களைக் காட்டிலும் வேறுபட்டதாயுமிருக்கை.

(சேஷத்வமாவது தன்னின் ஆதிக்யமுடையதொன்றின் அம்சமாய் அம்சிக்குத் தன்னுல் வைசிஷ்ட்ய முண்டாம்படியிருக்கையாம்; இது சேதனனிடத்தில் காணும்போது தாஸ்யமென்று வழங்கப்படும்; இந்த வைலக்ஷண்யத்தாலே) இங்கு சேதனன் ஈசுவரனுக்கு சேஷமாயிருக்கையாவது—தன்னைக் காட்டிலும் பரனுயிருக்கிற ஸர்வேசுவரனுக்கு அதிசயத்தை விளைவிப்பதை விஷயமாகவுடைய இச்சையோடே அவனை அநுவர்த்தித்திருக்கை. இந்த சேஷத்வம் நிருபாதிகமென்றும் ஸோபாதிகமென்றும் இரண்டு வகையாயிருக்கும். இவற்றுள் நிருபாதிகமாகையாவது—ஸ்வரூப ப்ரயுக்தமாயிருக்கை. (அதாவது இயல்பாகவேயிருக்கை). ஸோபாதிக

மாகையாவது—(செயற்கையாகவுண்டாவது) ஈசுவரனுடைய குண ப்ரயுக்தமாயிருக்கை. இதில் உபாதிபூதங்களான ஈசுவர குணங்கள் நித்யமாகையால் அவற்றைப் பற்றிவருகிற சேஷத்வமும் நித்யமாயிருக்கும். ஆகையால் இரண்டு வகையான சேஷத்வமும் நித்யமாம்.

இவற்றுள் நிருபாதிகத்துக்கு ப்ரமாணங்கள், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திருமொழியுள் "வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது" என்கிற பாட்டும், ஸ்ரீராமாயணத்தில் "யத்யப்யேஷ பவேத் பர்த்தா மமார்யே வ்ருத்தவர்ஜித:" என்பது முதலிய பிராட்டி வாக்யங்களும் "தாஸபூதாஸ் ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:" "ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா சேஷோஹி பரமாத்மந:" என்பது முதலிய சுலோகங்களுமாம்.

குணத்தால்வரும் ஸோபாதிக சேஷத்வத்துக்கு 'குணைர் தாஸ்யமுபாகத:' என்கிற ஸ்ரீராமாயண சுலோகத்தையும் திருமந்த்ரத்திலே பிரணவத்தின் அகாரார்த்த நிருபணத்தில் லுப்தசதுர்த்தியாற் சொல்லப்படுகிற சேஷத்வத்துக்குக் கல்யாணகுணங்களை பிரயோஜகமாகக்கொண்டு "இதிலே கல்யாண குணங்களையும் சொல்லும்" என்கிற லோகதேசிகன் ஸூக்தியையும் பிரமாணமாகக் கொள்க.

பாகவத சேஷத்வம் பகவத் ஸம்பந்தமடியாக வருவதாகையால் அதுவும் ஔபாதிகம். சேஷிபக்கல் பிரீதியோடு கூடிய சேஷத்வமே தாஸ்யமென்று வழங்கப்படும். இதில் சேஷபூதனாலே சேஷிக்குண்டாம் அதிசயம் ப்ரீதிஜநக வியாபாரமாகையால் போக தசையில் சேஷி தாழநின்று பரிமாறினாலும் அதற்கு இசைந்திருக்குமது சேஷத்வகார்யம். இந்த அர்த்தத்தை "போகதசையில் ஈசுவரனழிக்கும்போது" இத்யாதி ஸ்ரீஸூக்திகளாலே லோகதேசிகன் அருளிச்செய்தார்; ஆழ்வார் அருளிச்செய்த "உருகுமால் நெஞ்சம்" என்கிற திவ்ய ஸூக்தியில் இந்த அர்த்தம் ஸ்பஷ்டம்.

இப்படி சேஷியும் சேஷபூதன் விஷயத்தில் ப்ரணயித்வத்தாலும் ஸ்வாதந்த்ரியத்தாலும் சேஷபூதனுயிருக்கிறபடியால் சேஷிக்கும் ஸோபாதிக சேஷத்வமுண்டு. இந்த விஷயம் "இமௌ ஸ்ம முநிசார்த்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ" "லோகநாத: புராபூத்வா" "ஸுக்ரீவம் சரணங்கத:" என்றும் ஸ்ரீராமாயணத்தில் வெளியாம்.

இந்த சேஷத்வம் ஜ்ஞாத்ருத்வம் இரண்டும் ஸ்வரூப நிரூபகங்கள். (ஸ்வரூப நிரூபகமாவது ஸ்வரூபம் தோன்றும்போதெல்லாம் தோன்றிக்கொண்டிருப்பது) இவற்றுள் சேஷத்வம் அந்தரங்க நிரூபகம். அஃதெப்படியெனில் "உபாதத்தே ஸத்தாஸ்திதி நியமநாத்யை: சிதசிதௌ" என்கிற பட்டர் ஸூக்தியின்படி ஸர்வேசுவரன் தன்னுடைய அதிசயத்தின்பொருட்டே சேதநாசேதனங்களுடைய ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகளைத் தான் நிர்வஹிக்கிறுகையால் அவனுடைய அதிசயாதானமே சேஷத்வமாகையால் இது அந்தரங்க நிரூபகமென்று நிரூபிக்கப்படுகிறது. இந்த அர்த்தம் திருமந்த்ரத்தில் ப்ரணவத்தில் லுப்த சதுர்த்தியாலே சேஷத்வத்தை முன்பு சொல்லி மகாரத்தாலே ஜ்ஞாத்ருத்வத்தைப் பின்பு சொல்லியிருக்கையாலும் ஈட்டில் உதாஹரித்த ஐதிஹ்யத்தாலும் விளங்கும்.

இனி, பரதந்த்ரமாயிருக்கையாவது தன்னுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் ஈசுவராதீனங்களாகவிருக்கை. ஆகவே ஈசுவரனுக்கு அதிசயத்தை விளைக்கைக் குறுப்பாக இஷ்டவிநியுக்தமாவதற்கு யோக்யமாயிருக்கை சேஷத்வமென்றும் இஷ்டவிநியுக்தமாகை பாரதந்த்ரியமென்றுங் கண்டுகொள்வது. இவற்றிற்கு உதாஹரணமாக கட்டிப்பொன்போலேயிருக்கை சேஷத்வமென்றும் பணிப்பொன்போலேயிருக்கை பாரதத்ந்ரியமென்றும் சொல்லுவர்.

— பாரதந்த்ர்ய ப்ரகாரவிசேஷ நிருபணம் —

இப்படியிருந்துள்ள பாரதந்த்ரியம் ஸ்வரூப பாரதந்த்ரியமென்றும் உபாய பாரதந்த்ரியமென்றும் ஃபல பாரதந்த்ரியமென்றும் மூன்று வகையாயிருக்கும். அவற்றுள் ஸ்வரூப பாரதந்த்ரியம் ஈசுவராதீன ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகமாயிருக்கை. உபாய பாரதந்த்ரியம் இரண்டு வகையாயிருக்கும். அவன் விதித்த உபாயங்களை அவனுக்குப் பரதந்த்ரனாய்க்கொண்டு அநுஷ்டித்து பலத்துக்கு அவன் கைபார்த்திருக்குமது கேவல பாரதந்த்ரியமென்றும் "என்னுடம்பிலழுக்கை நானே போக்கிக்கொள்ளேனோ" என்கிற லோகதேசிகன் ஸூக்திப்படி இவன் சரீரமாய் ஈசுவரன் சரீரியாயும் ஃபல போக்தாவாயுமிருப்பதால் தனக்கு ஒரு பிரயோஜனத்தை யுத்தேசித்து உபாயாநுஷ்டானம் பண்ணுகைக்கு யோக்யதையில்லாமல் அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்காமையை ஜ்ஞாபிக்கிற சைதந்ய

கார்யமாய் வருவதான ப்ரபத்த்யநுஷ்டானத்தை அத்யந்த பாரதந்த்ரிய மென்றும் வழங்குவர்கள்.

ஶேஷ பாரதந்த்ரியமும் இரண்டு வகையாயிருக்கும். தன்னுடைய போகம் அப்ரதானமாகவும் ஈசுவரனுடைய போகத்தைப் பிரதானமாகவுங் கொள்ளுகை கேவல ஶேஷ பாரதந்த்ரியமென்றும் ஈசுவரனுடைய முகோல்லாஸமே பிரயோஜனமாய் சைதந்ய கார்யமாய்த் தனக்குவரும் போகத்தை ஈசுவர போகத்திற்கு அதிசயத்தை விளைவிப்பதாக உத்தேசித்திருக்கை பாரதந்த்ரிய காஷ்டையென்றும் சொல்லுவர்கள்.

ஈசுவரபோகத்துக்கு அதிசயத்தை விளைக்கையாவது—சேதனனுக்குப் போகமில்லாமல் அசித்துப்போலே பரதந்த்ரனாயிருந்தால் பாஞ்சாலிகா பரிஷ்வங்கம்போலே ஈசுவரனுக்கு போகம் ரஸிக்காதாகையால் இவனுக்கு போகம் உண்டாகும் பக்ஷத்தில் அவனுக்கு போகம் ரஸிக்கும்படியாயிருக்கை. புஷ்பத்திற்குப் பரிமளம்போலேயும் ரத்னத்திற்கு ஒளிபோலேயும் இவனுடைய போகம் பரார்த்தமாயிருக்கும். இந்த அர்த்தம் திருமந்த்ரத்தில் வ்யக்த சதுர்த்தியோடு கூடின நம: சப்தத்திலும் த்வயத்தில் உத்தரவாக்யத்தில் நம: சப்தத்திலும் "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" யென்கிற ஆழ்வார் திவ்ய ஸூக்தியிலும் "மற்றைநங்காமங்கள் மாற்று" என்கிற ஆண்டாள் திவ்ய ஸூக்தியிலும் கண்டுகொள்வது.

இந்த அர்த்தத்தை வேதாந்ததேசிகன் "புங்க்தே ஸ்வபோகமகிலம் பதிபோகசேஷம்" என்று அருளிச்செய்திருக்கிறார்.

ஆசார்ய ஹ்ருதயத்திலும் " முற்பாடர்க்கு க்ரியாங்கமானவை இரண்டும் செயல்தீர்ந்தார் வ்ருத்தியில் ஸ்வசிர்ப்பந்தமறுக்கும்" என்று அருளிச்செய்திருக்கிறார். அதாவது முற்பாடரான உபாயாந்தர நிஷ்டர்களுக்கு உபாஸனத்திற்கு அங்கங்களான சேஷத்வ போக்த்ருத்வங்களிரண்டும் ஈசுவரனையே உபாயமாகப்பற்றி க்ருதக்ருத்யர்களாயிருக்கிற அதிகாரிகள் பண்ணும் கைங்கர்யத்தில் தனக்கென்னப் பண்ணுகிற நிர்ப்பந்தத்தைப் போக்குமென்பதாம்.

ஜ்ஞானஸ்வருபமாகையாவது தன்னுடைய பிரகாசத்தில் மற்றொன்றை யபேக்ஷியாமல் தானே பிரகாசிக்கை.

ஜ்ஞாதுச்ரயமாகையாவது நான் அறிகிறேன் என்கிற ப்ரதீதியாலே ஜ்ஞானத்துக்கு இருப்பிடமாயிருக்கை. இவையிரண்டும் ஸ்வரூப நிருபகங்கள்.

இவன் ஜ்ஞாதுச்ரயனுகையாலே அதடியாக வரும் கர்த்ருத்வமும் ஆத்மாவுக்கு ஸ்வரூபம். கர்த்ருத்வமாவது ஒரு வஸ்துவை உள்ளபடியே யறிந்து அதை யடையவேணுமென்கிற இச்சையுண்டாகி அதனையடைய முயலுகை. இந்த ஜ்ஞாநேச்சாக்ருதிகள் ஜ்ஞானத்தினுடைய அவஸ்தா விசேஷங்களாகையாலே ஜ்ஞாதுச்ரயமாயிருக்கையாகிற ஜ்ஞாத்ருவத்திலடங்கும்.

இந்த கர்த்ருத்வம் "பராத் து தச்ச்ருதே:" என்கிற ஸூத்ரத்தின்படி ஸர்வேசுவராதீனம். அந்த கர்த்ருத்வம் ஈசுவராதீனமாயிருக்கையாவது "ஆதாவீச்வரதத்தயைவ" என்கிற அம்மாள் சுலோகத்தின்படி ஸ்ருஷ்டி காலத்தில் கரணகளேபரங்களைக் கொடுத்து ஜ்ஞானசக்தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி சக்திகளையுங் கொடுத்து சேதனனுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் தான் உதாஸீனனுயும் த்விதீய ப்ரவ்ருத்தியில் அநுமந்தாவாயுமிருக்கை.

இதுநிற்க. இந்த சேதனன் பத்ததசையில் ப்ரக்ருதி ஸம்பந்தமுள்ளவனுயிருப்பதால் அந்த ப்ரக்ருதியினுடைய குணங்களான ஸத்வரஜஸ் தமஸ்ஸுக்களுடைய ஸம்பந்தத்தால் வருமதான கர்த்ருத்வம் ஔபாதிகம். இந்த அர்த்தம் "ப்ரக்ருதே: க்ரியமாணுநி குணை: கர்மாணி ஸர்வச:, அஹங்கார விமூடாத்மா கர்த்தாஹமிதி மந்யதே" என்கிற சுலோகத்தால் ப்ரக்ருதியினுடைய குணங்களினுடைய சேர்க்கையாலே பண்ணப்படுகிற கர்மாக்களை தானே செய்கிறதாக நினைக்கிருன் என்று சொல்லப்பட்டிருப்பது காண்க.

இப்படியில்லாமல் பகவத் கடாக்ஷ விசேஷத்தினுலே நிஷ்க்ருஷ்டஸத்வம் தலையெடுத்து பகவந் முகோல்லாஸமே ப்ரயோஜனமாகச் செய்யப்படுகிற வியாபாரங்களில் ஏற்படுகிற கர்த்ருத்வம் மோக்ஷதசையிலும் அநுவ்ருத்தமாகையால் ஸ்வாபாவிகமாகும். கீழ்ச்சொல்லிய கர்த்ருத்வம் ப்ரக்ருதி ஸம்பந்தத்தைப்பற்றி வருமதாய் மோக்ஷதசையில் மாறுதலால் வந்தேறியாகும்.

ஆதலால் மிச்ரஸத்வத்தால் ஏற்படுகிற உபாயபுத்தியா லனுஷ்டிக்கப்படுகிற பக்தி பிரபத்திகளில் கர்த்ருத்வம் ஔபாதிகம். இப்படியன்றிக்கே ஸ்வயம் பிரயோஜனமான பகவந் முகோல்லாஸத்தை உத்தேசித்துச் செய்யப்படுகிற பக்தி பிரபத்திகளில் கர்த்ருத்வம் நிஷ்க்ருஷ்ட ஸத்வகார்ய மாகையால் ஸ்வாபாவிகம். இந்த அர்த்தம் "இவன் பாசுரம் கேட்டவாறே திருவுள்ள முகக்கும்" என்கிற லோகதேசிகன் ஸ்ரீ ஸூக்தியால் வியக்தமாம். அதாவது தாயானவள் தன்னாலே போஷிக்கப்படுகிற பிரஜைக்கு அந்த போஷணத்தின் பொருட்டு ஆஹாரம் கொடுப்பதில் ஒரு ஸாதனத்தையும் அபேக்ஷியாம லிருக்கச்செய்தேயும் அந்த பிரஜையானது முந்தி ஒரு ரோக விசேஷத்தினால் ஆஹாரத்தி லிச்சையில்லாமலிருந்து பின்பு அந்த ரோகம் தீர்ந்து ஆஹாரத்தை யபேக்ஷித்துச் சொல்லுகிற வார்த்தை தாயினுகப்புக்குக் காரணமாவதுபோலு மென்பதாம்.

ஆகையால் ஈசுவரனும் அப்படியே இவனுக்குப் புருஷார்த்தத்தைக் கொடுப்பதில் உத்யுக்தனாயிருக்கச் செய்தேயும் ஸம்ஸாரமாகிற பெரிய ரோகத்தினால் அந்த புருஷார்த்தத்தில் இச்சையில்லாமலிருந்து மறுபடி ஈசுவரனுடைய கடாக்ஷ மூலமாக யாத்ருச்சிக ஸுக்ருதமடியாகப் புருஷார்த்தத்தி லிச்சைபிறந்து புருஷார்த்தத்தை யபேக்ஷித்து ஈசுவரனைக் கேட்குமது ஈசுவரனுக்கு உகப்பாகையாலே அந்த சேதனன் கேட்குமதே பக்திப்ரபத்திகளாகையால் இந்த பக்திப்ரபத்திகள் கைங்கர்ய ரூபமாய் அநுஷ்டிக்கப்பட்டிருந்தபோதிலும் ஈசுவரன் பலப்ரதானம் பண்ணுகைக்கு பிரயோஜகங்களாக ஏற்படுகின்றன. அதைப்பற்றியே பக்திப்ரபத்திகள் வியாஜஹேதுக்களாக நம்முடைய ஆசார்யர்களால் வியவஹரிக்கப்படுகின்றன. அப்படியிருக்க, பக்திப்ரபத்திகளை உபாயமாகச் சொல்லுவது போஜனத்துக்குப் பசிபோல பக்தி பகவதனுபவத்துக்கு ஸாதனமான அபிநிவேச ரூபமாகையாலும், ப்ரபத்தி சேதனனுடைய அநந்ய சரணத்வ ரூபமான ஸ்வரூபத்தினுடைய ஜ்ஞானகார்யமாய் வந்து ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞானமாயிருக்கையாலும் ஸங்கதம். இன்னும் மற்ற விஷயங்கள் ஹிதநிருபணத்தில் பிரஸ்தாவிக்கப்படும்.

போக்த்ருத்வமும் ஸ்வார்த்தமென்றும் பரார்த்தமென்றும் இரண்டு வகையாக விருக்கும். ஸ்வார்த்த போக்த்ருத்வமாவது தன்னுடைய போகத்தையே ப்ரதாநோத்தேச்யமாக நினைத்திருக்கை,

பரார்த்த போக்த்ருத்வமாவது தன்னுடைய போகத்தை அப்ரதா நோத்தேச்யமாக நினைத்து ஈசுவர போகத்தை ப்ரதாநோத்தேச்ய மாகக் கொள்ளுகை. அங்ஙனமன்றிக்கே தன்னுடைய போகத்தை ஈசுவர போகத்துக்கு அதிசயத்தை விளைப்பதாக உத்தேசித்திருக்கையு மாம். இந்த விஷயம் கீழ் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி ஆத்மஸ்வரூபம் ஜ்ஞானஸ்வரூபமாயும் ஜ்ஞாநாச்ரய மாயுமிருப்பதையும் அதடியாகவந்த கர்த்ருத்வ போக்த்ருத்வங்களை யும் நிரூபித்து நின்றது கீழ்; இனி ஆத்மாவைப் பற்றியிருக்கும் ஜ்ஞானஸ்வரூபம் நிரூபிக்கப்படுகிறது.

— ஆத்மாவின் ஜ்ஞாநஸ்வரூப நிரூபணம் —

ஜ்ஞானமாவது வஸ்துக்களைத் தான் விஷயீகரிக்கும் காலங் களில் தன்னுடைய ஆசிரயத்துக்கு மற்றொன்றை யபேக்ஷியாமல் தானே பிரகாசிப்பதாயும் ஸங்கோச விகாஸங்களை யுடையதாயு மிருக்கும். ஸூர்யன் முதலான தேஜ: பதார்த்தங்களைப் பற்றியிருக் கும் பிரபையானது தேஜோமய த்ரவ்யமாயும் ஸூர்யாதிகளுக்குக் குணமாயுமிருப்பதுபோல் ஜ்ஞானமும் தான் த்ரவ்யமாயும் ஆத்மா வுக்குக் குணமாயுமிருக்கும். இப்படியிருக்கையாலே ஆத்மா தர்மி பூத ஜ்ஞானமென்றும் இது தர்மபூத ஜ்ஞானமென்றும் வழங்கப் படும். இந்த ஜ்ஞானத்துக்கு எப்போதுமுள்ள ஆகாரம் எல்லா வஸ்துக்களையும் ஒரேகாலத்தில் ஸாக்ஷாத்கரிக்கையாகிற விகாஸமே யாம். அப்படிக் கில்லாமலிருப்பது ஸங்கோசம். இந்த ஸங்கோசம் ஸம்ஸாரிகளுடைய கர்மத்தாலே வந்ததாயிருப்பதால் வந்தேறி யாகும். ஸம்ஸார ஸம்பந்தமற்ற முக்தர்களுடையவும் நித்யர்களு டையவும் ஈசுவரனுடையவும் ஜ்ஞானம் எப்போதும் விகாஸமுடை யதாயிருக்கும். இந்த விஷயம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில்,

"தயா க்ஷேத்ரஜ்ஞ சக்திஸ் ஸா வேஷ்டிதா ந்ருப ஸர்வகா
ஸர்வபூதேஷு பூபால தாரதம்யேந வர்த்ததே"
"அப்ராணிமத்ஸு ஸ்வல்பாஸா ஸ்தாவரேஷு ததோதிகா"

இத்யாதி சுலோகங்களால் நிரூபிக்கப்பட்டது.

இப்படியே முமுக்ஷுக்களான ஆழ்வார்களுடைய ஜ்ஞாநமும் நிஷ்பந்நமான யோகத்தையுடைய ரிஷிகளுடைய ஜ்ஞாநமும்

எப்போதும் மேற்சொன்ன விகாஸத்துடனிருக்கும். அதில் ஆழ்வாருடைய ஜ்ஞாந விகாஸத்துக்கு ஹேது நிர்ஹேதுகமான பகவத் கடாக்ஷ விசேஷம். ரிஷிகளுடைய ஜ்ஞாந விகாஸத்துக்கு ஹேது அவர்கள் அநுஷ்டித்த பக்தியோகத்தால் ப்ரஸந்நனான எம்பெருமானுடைய கடாக்ஷ விசேஷம்.

ஆனால் ஜ்ஞானம் பூதகாலீநமாயும் வர்த்தமாந காலீநமாயும் பவிஷ்யத் காலீநமாயுமுள்ள எல்லா வஸ்துக்களையும் ஏககாலத்தில் ஸாக்ஷாத்கரிக்கும்படி எங்ஙனே யென்னில்? நம்முடைய ஸித்தாந்தத்தில் தத்வத்ரயமும் நித்யமாகையால் அவஸ்தைகளைப் பற்றியே உத்பத்தி விநாச வ்யவஹாரங்களுண்டாகின்றன. அந்த அவஸ்தாச்ரயமான வஸ்துக்கள் எப்போதுமுள்ளவையாகையாலே அந்த வஸ்துக்களை ஸாக்ஷாத்கரிக்கக்கூடும் ஆயினும் அந்தந்த அவஸ்தாவிசிஷ்டமாக ஸாக்ஷாத்கரிக்கக் கூடுமோவென்னில்? காலத்துக்கு அதீதமென்றும் வர்த்தமாநமென்றும் பவிஷ்யத் தென்றும் சொல்லப்படுகிற வ்யவஹாரம் உபாதியால் வருவதாகையால் உபாதியில்லாத அகண்ட காலத்தில் எல்லா வஸ்துக்களும் உள்ளபடியே தத்ததவஸ்தா விசிஷ்டங்களாகவேயிருப்பதால் அந்த அகண்ட காலத்தில் ஸாக்ஷாத்கரிக்கக்கூடும். இந்த விஷயம் பகவத் விஷயத்தில் "நாலாம்பத்தில் மூன்றும் திருவாய்மொழி" "கோவை வாயாள்" ப்ரவேசத்தில் பட்டர் நிர்வாஹத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஜ்ஞானம் பத்த (பஃ) தசையில் இந்திரியங்களின் வழியால் ப்ரஸரித்து விஷயங்களை கிரஹிக்கிறபடியால் ஸங்கோசப்பட்டு சாக்ஷுஷாதி வ்யவஹாரங்களை யடையும்; மோக்ஷதசையில் கர்மோபாதி நிவிருத்தமாகையால் இந்திரியங்களை அபேக்ஷியாமல் விகஸித்து ப்ரஸரிப்பதால் ப்ரத்யக்ஷமென்றே வ்யவஹரிக்கப்படும். இந்த விஷயத்தை,

> "அபாணி பாதோ ஜவநோ க்ரஹீதா
> பச்யத்யசக்ஷுஸ் ஸ ச்ருணோத்யகர்ண:"

இத்யாதி சுருதி வாக்கியங்களில் கண்டுகொள்வது.

ஆத்மா நித்யனுயிருக்கையாவது "அஜோநித்ய: சாச்வத:" இத்யாதி கீதா சுலோகத்தின்படி ஸ்வத உத்பத்திவிநாசங்களில்லாமையாம். ஜந்மாந்தரங்களில் பண்ணின கர்மாவினுடைய பலமாக

ஜந்மாந்தரங்களில் சுகதுக்கங்களை அனுபவிக்கையாலும் நித்யத்வம் ஸித்தம். இப்படியிருக்க, ஆத்மாவுக்கு உத்பத்தி விநாச வ்யவஹாரங்கள் தேஹத்தினுடைய ஸம்யோகவியோகங்களைப்பற்றி வருகிறது.

அணுவாயிருக்கையாவது—"வாலாக்ர சதபாகஸ்ய" என்கிற வாக்யத்தின்படி அத்யந்தம் ஸூக்ஷ்மமாய் ஒரு வஸ்துவினுடைய தடைக்கும் யோக்யதை இல்லாமை. இந்த விஷயத்தை ஸூத்ரகாரர் "உத்க்ராந்தி கத்யா கதீநாம்" என்கிற ஸூத்ரத்தில் நிருபித்திருக்கிறார். இப்படியிருக்கிற ஆத்மா, ஹ்ருதயகமலத்திலிருந்தபோதிலும் ஆகாசத்திலிருக்கிற ஸூர்யன் தன்னுடைய ப்ரபையாலே எங்கும் வ்யாபிப்பதுபோல் ஜ்ஞானமாகிற குணத்தாலே சரீரமெங்கும் வியாபித்து ஸுகதுக்கங்களை அனுபவிக்கிறான். யோகிகளாயிருக்கிற ஸௌபரி முதலானவர்கள் யோக ப்ரபாவத்தாலே வேறு சரீரங்களிலும் ஜ்ஞானத்தாலே வ்யாபித்து ஸுகாதிகளை அனுபவிக்கிறார்கள்,

"குணாத்வாலோகவத்" என்கிற ஸூத்ரத்தில் இந்த அர்த்தம் வ்யக்தம், இப்படியிருப்பதைக்கொண்டு ஆத்மா விபுவாக சாஸ்த்ரங்களில் வ்யவஹரிக்கப்படுகிறான். ஆத்மாக்கள் சரீரந்தோறும் வேறுபட்டிருந்தபோதிலும் எல்லா ஆத்மாக்களுக்கும் ஜ்ஞாநம் ஏகரூபமாயிருப்பதைப்பற்றி வ்ரீஹி ஸமுதாயத்துக்கு ஏகோவ்ரீஹி: என்று வ்யவஹார மிருப்பதுபோல் ஏகத்வ வ்யவஹாரம் உபபந்நம். இப்படியே என்னுடைய தேஹம், என்னுடைய இந்திரியம், என்னுடைய ப்ராணன் என்று பேதவ்யவஹார மிருப்பதால் ஆத்மா தேஹேந்திரியங்களைக் காட்டிலும் வேறுபட்டவன். ஆனால் "ராஹோ: சிர:" "மமாய மாத்மா" "சிலாபுத்ரகஸ்ய சரீரம்" என்கிற சில வ்யவஹாரங்களை அபேதபரங்களாக நிர்வஹிப்பதுபோல் இங்கும் நிர்வஹிக்கலாமே யென்னில், அவ்விடங்களில் பேதம் பாதிதமாகையால் ஔபசாரிகமான அபேத வ்யவஹாரம் ஏற்படுகிறது. இவ்விடத்தில் ஆத்மாவுக்கும் சரீரத்துக்குமுள்ள பேதத்துக்கு பாதகமில்லாமையால் முக்கியமான பேதவ்யவஹாரமே உபபந்நம். இன்னும் இவைகளினுடைய விஸ்தரம் தத்வத்ரய வியாக்கியாநாதி க்ரந்தாந்தரங்களிற் கண்டுகொள்க.

இனி இந்த ஆத்மாக்கள் பத்தர்களென்றும், முக்தர்களென்றும், நித்யர்களென்றும் மூன்று வகையாயிருப்பர்கள். அவர்களில் பத்தர்கள் அநாதியான பிரகிருதி ஸம்பந்தத்தால் வருகிற அவித்யா

கர்ம வாஸநா ருசிகளால் தேவாதி சரீரங்களைப் பரிக்ரஹித்து ஸ்வர்க்க நரகாதிகளில் ஸுகதுக்காநுபவம் பண்ணித்திரியும் சேதனர்கள். இங்ஙனமன்றிக்கே மூலப்ரகிருதியில் கரணகளேபர விதுரர்களாய் போக மோக்ஷ சூன்யராயிருந்துள்ள பத்தர்களில் சிலர் யாத்ருச்சிக ஸுகிருத விசேஷத்தாலே "ஜாயமாநம் ஹி புருஷம்" இத்யாதி சுலோகத்தின்படி பகவத்கடாக்ஷத்துக்கு பாத்ரபூதர்களாய் அதடியாக அத்வேஷாபி முக்யங்களைப்பெற்று ஸாத்விக ஸம்பாஷணத்தையுடையவராய் மோக்ஷாபிலாஷ முண்டாக ஆசார்ய ஸமாச்ரயணத்தைப் பெற்று தங்கள் தங்கள் அதிகாராநுகுணமாக பக்தி முதலிய உபாயங்களை அநுஷ்டிக்குமவர்கள். அங்ஙனமன்றிக்கே

"நிர்ஹேதுக கடாக்ஷேண மதீயேந மஹாமதே!" என்றும்.

"நாஸௌ புருஷகாரேண நசாப்யந்யேந ஹேதுநா"
கேவலம் ஸ்வேச்சயைவாஹம் பரேக்ஷ கஞ்சித் கதாசந"

என்றும் சொல்லுகிறபடியே நிரங்குச ஸ்வதந்த்ரனான ஸர்வேசுவரன் மயர்வறமதிநலமருள அத்தாலே ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட பகவத் ஸ்வரூப ரூபகுண விபூதிகளையுடையராய் அப்போதே நிரந்தரமான பகவதனுபவத்தைப் பெறவேணுமென்று இச்சையுண்டாகி அது கிடையாமையாலும் அந்த பகவதனுபவத்துக்கு இடைச்சுவரான ஸம்ஸாரத்தினுடைய கொடுமையை அநுஸந்திப்பதாலும் வந்த த்வரா விசேஷத்தால் கலங்கி அடிக்கடி ப்ரபத்தியை அநுஷ்டித்தும், மடலூருகை முதலான ஸ்வப்ரவ்ருத்திகளை அநுஷ்டித்தும் போருமவர்களான ஆழ்வார்கள் போல்வார். இப்படி அடிக்கடி ப்ரபத்தியை அநுஷ்டிக்கச் செய்தேயும், ஈசுவரன் தன்னுடைய அநுபவத்தைக் கொடாமல் மேன்மேலும் அநுபவத்துக்குப் பரிகரமான பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்திகளை அபிவ்ருத்தமாம்படி பண்ணிக்கொண்டு போரும். ஆதலால் இவர்கள் உத்தேசித்த பலத்துக்கு ஹேது கேவல பகவத்கிருபையேயொழிய இவர்களநுஷ்டித்த ப்ரபத்தி ஹேதுவன்று. இந்த அர்த்தத்தை "நலமருளினன் என்கொல் என்று, ஆமூலகூடம் அருளால் மன்னுமிவர்க்கு அன்புக்கடியானதுவே அடிசேருகைக்கும் ஸாதநம்" என்று ஆசார்ய ஹ்ருதயத்தில் அருளிச்செய்தார்.

ஆனால் இப்படி ஈசுவரனாலே மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுக்கு அஜ்ஞான கார்யமான கலக்கமும், அதடியாக

அடிக்கடி ப்ரபத்தியை அனுஷ்டிப்பதும், மடலூருகையும் கூடும் படி எங்ஙனேயென்னில் ஈசுவரன் இவர்களுக்கு அருளின ஜ்ஞானம் பக்திருபாபன்ன ஜ்ஞானமாகையாலே அதடியாக வந்த கலக்கம் விஷய ஸ்வடாவத்தைப்பற்றி வருவதால் கூடும்.

நித்ய விபூதியில் ஸர்வஜ்ஞர்களான நித்யஸூரிகளும் "ஸ்நேஹா தஸ்தாநரக்ஷா வ்யஸநி பிரபயம் சார்ங்கசக்ராஸி முக்யை:" என்கிற பட்டர் ஸூக்திப்படி கலங்குகையாலும் "ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் செளரே: விதுரஸ்ஸ மஹாமதி:" என்கிற சுலோகத்தின்படி மஹாமதியான விதுரர் தன்னுடைய க்ருஹத்தில் தான் போட்ட ஆசனத்தில் தான் துர்யோதன ஸஹவாஸத்தால் போடப்பட்ட பொய்யாஸன மென்கிற கலக்கமுண்டாகி ஆஸனத்தைத் தடவிப் பார்த்தார் என்று சொல்லுகையாலும், பெரியாழ்வார் குலசேகராழ் வார் இவர்களுடைய விருத்தாந்தங்களாலும் இந்தக் கலக்கம் வருவது மிகவும் ஸங்கதமாம். "ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்று ஸ்ரீ வசனபூஷ ணத்தில் இந்த அர்த்தம் நிரூபிக்கப்பட்டது.

இப்படி ஸர்வேசுவரன் ஒரு ஹேதுவையும் அபேக்ஷியாமல் கேவலம் தன்னுடைய கிருபையாலே சில வ்யக்திகளைக் கடாக்ஷித் தால் அவனுக்கு வைஷம்ய நைர்க்ருண்யம் வாராதோ வென்னில் வாராது. எப்படியென்ருல் ஈசுவரனை உள்ளபடி அறிவிக்கிற ப்ரமாணங்கள் அவன் நிரங்குச ஸ்வதந்த்ரனென்றும் அந்த ஸ்வா தந்த்ரியத்தாலே சில வ்யக்திகளை நிர்ஹேதுகமாக கடாக்ஷித்திருக்கிரு னென்றும் சொல்லியிருப்பதால் தர்மிக்ராஹகமாநத்தாலே வைஷம்ய நைர்க்ருண்ய தோஷங்கள் வரப்ரஸக்தியில்லை.

ஆனால் 'வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" என் கிற ஸூத்ரத்தில் சேதனனுடைய கர்மாவை யபேக்ஷித்து ஸுக துக்கங்களை சேதனனுக்கு ஈசுவரன் கொடுப்பதால் வைஷம்ய நைர் க்ருண்யங்கள் இல்லையென்று பரிஹரித்ததோடு விரோதியாதோ வென்னில்? கீழ் நிர்ஹேதுகமாகக் கடாக்ஷிக்கிருனென்பதற்கு பிரமாணங்களாகக் குறிக்கப்பட்ட வாக்கியங்களுக்கும் "வைஷம்ய நைர்க்ருண்யே" என்கிற ஸூத்ரத்துக்கும் விரோதமில்லாமல் அதிகாரி பேதேந வ்யவஸ்தை பண்ணியிருப்பதால் தோஷமாகாது.

அதுவுமன்றி "வைஷம்ய நைர்க்ருண்யே" என்கிற ஸூத்ரத்தில் பண்ணியிருக்கிற வைஷம்ய நைர்க்ருண்ய பரிஹாரம் ஸ்ருஷ்டி விஷயமென்று சில வாசார்யர்களபிப்ராயம். இப்படி இந்த ஸ்வாதந்த்ரியத்தை "ஸ்வாதந்த்ர்ய மைச்வர மபர்யநுயோஜ்ய மாஹு:" என்று ஆழ்வானருளிச்செய்தார். இப்படியே ஆசார்யஹ்ருதயத்திலும் "பட்டத்துக்குரிய ஆணையும் அரசும் செய்யுமவை யாராயாது" என்று அருளிச்செய்திருக்கிறார்.

இப்படியே ஸ்ரீ பாஷ்யத்தில் ரசநாநுபபத்த்யதிகரணத்தில் "ப்ராதிகூல்ய நிவ்ருத்தி மாத்ரேண அநந்தாபராதாந் அநாத்ருத்ய ஸ்வ ப்ராப்தி ஹேதுஷு ருசிம்ஜநயதி" என்று ப்ராதிகூல்ய நிவ்ருத்தியே பற்றாசாக ஈசுவரன் தன்னையடைய ஸாதனங்களான உபாயங்களில் ருசியையுண்டுபண்ணுகிறான்; என்றிருப்பதாலும், "நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:" என்றும், "அவ்யாஜ ஸித்தமநபாய முபாய மாஹு:" என்றும், "நிருபதி ஸுஹ்ருதம்" என்றும், வேதாந்ததேசிகன் அருளிச்செய்தார்.

— ஆசார்ய ஸ்வரூப சோதநம் —

இங்கு ஆசார்ய ஸமாச்ரயணமென்று கீழ்ச்சொல்லிப் போந்தமையால் ஆசார்ய ஸ்வரூபம் ப்ரஸங்காத் நிரூபிக்கப்படுகிறது. ஆசார்யனென்பது ப்ரஹ்ம வித்யையை உபதேசிக்குமவனே. மற்ற வித்யைகளை உபதேசிக்குமவனுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை; அவனை ஆசார்யனென்று வ்யவஹரிப்பது ஔபசாரிகம்.

ஆசார்யனாவான் ஸத்ஸந்தான ப்ரஸூதனாய் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அறிந்தும் அநுஷ்டித்தும் அப்படியே பிறர்களை அறிவித்தும் அநுஷ்டிப்பித்தும் போருமவனாய் பரமஸத்வைக நிஷ்டனாய் க்யாதி லாப பூஜைகளில் அபேக்ஷையில்லாதவனாய் பரம க்ருபாளுவாயிருக்குமவன்.

இந்த ஆசார்யன் குலக்ரமாகதனென்றும் ப்ரத்யக்ரனென்றும் இரண்டு வகையாயிருக்கும். அதில் குலக்ரமாகதன்—தான் வம்ச பரம்பரையாக ஆசார்ய பதத்தை நடத்திப்போருமவன். ப்ரத்யக்ரனாவான்—தான் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அறிந்தும் அநுஷ்டித்தும் போருமவனாய், ஜ்ஞானாபேக்ஷையுள்ளவர்களுக்கு ஜ்ஞான

ப்ரதானம் பண்ணுமவனும் பாரம்பர்யத்தால் வந்ததான ஆசார்யத்வ மில்லாமல் நவீனனுயிருக்குமவன்.

இவர்களுள் குலக்ரமாகதனுன ஆசார்யன் முக்யன். இப்படி குலக்ரமாகதனுன ஆசார்யனை தானும் வம்ச பரம்பரையாக ஆச்ர யிக்குமொருவன், அந்த ஆசார்யனுக்கு பாதித்யாவஹமான தோஷ மில்லாதிருக்கும் பக்ஷத்தில் மற்றொரு ஆசார்யனை அந்த ஆசார்ய னுடைய நியமனமில்லாமல் ஆச்ரயித்தானுகில், குலக்ரமாகதரான ஆசார்யராயுள்ள வஸிஷ்டரையும் தத்புத்ரர்களேயும் நிராகரித்து விசுவாமித்திரரை ஆச்ரயித்த த்ரிசங்குவின் படியாம். இந்த அர்த்தம் பாஞ்சராத்ரத்தில் பரமபுருஷ ஸம்ஹிதையில் நிருபிக்கப்பட்டிருக் கிறது. அந்த சுலோகங்களும் இங்கே விவரிக்கப்படுகின்றன.

— பாஞ்சராத்ரம் பரமபுருஷ ஸம்ஹிதை —

அத வக்ஷ்யே மஹாசார்ய சப்தார்த்தம் ச்ருணு பத்மஜ
தஸ்ய ச்ரவண மாத்ரேண முக்தோ பவதி மாநவ: !!
ஆசிநோதிஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி
ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே !!
ஆசார்யோ த்விவித: ப்ரோக்த; ஸர்வ சாஸ்த்ரார்த்த வேதிபி:
குலக்ரமாகத: பூர்வ: ப்ரத்யக்ர: ச ததாபர:
குலக்ரமாகதாசார்யம் தமாசார்ய விதோவிது:
பும்ஸ: பரகதி ஜ்ஞானே ஜிஜ்ஞாஸா ஜாயதே யதா !!
தத்பூர்வ தேசிகா பாவாத் யஸ்ஸமித்பாணி ராச்ரயேத்
ததாநீ மஸ்ய தயயா தீக்ஷா ஸம்ஸ்கார பூர்வகம்
மந்த்ர வ்யாக்யா க்ருதாசார்ய: ஸப்ரத்யக்ராக்ய உச்யதே
குலாசார்யஸ்ய பஜநம் யேவா ஸு க்ருதிநோ ஜநா: !!
குர்வந்தி ஸததம் பக்த்யா தே வந்த்யா: ஸர்வ தைவதை:
ஸர்வக்ரது சதம் க்ருத்வா யத்பலம் ஸமவாப்நுயாத் !!
தத்பலம் ஸமவாப்நோதி குலாசார்யஸ்ய பூஜநாத் !!
தைவாத் தேசாந்தரகதே லுப்தேவா குலதேசிகே
ததிய புத்ர ப்ராத்ராதே: உபதேசோபி க்ருஹ்யதாம் !!
தத்புத்ராதே ரபாவேது சிஷ்ய:சேத் தத்வலோலுப:
தத்துல்ய பாவம் ஸர்வஜ்ஞம் ஆசார்யாந்தர மாச்ரயேத் !!
தேநோபதிஷ்டஸ் ஸர்வஜ்ஞ: சிஷ்ய: ஸத்கதி மாப்நுயாத் !!

அதுவுமன்றி "வைஷம்ய நைர்க்ருண்யே" என்கிற ஸூத்ரத்தில் பண்ணியிருக்கிற வைஷம்ய நைர்க்ருண்ய பரிஹாரம் ஸ்ருஷ்டி விஷயமென்று சில வாசார்யர்களபிப்ராயம். இப்படி இந்த ஸ்வாதந்த்ரியத்தை "ஸ்வாதந்த்ர்ய மைச்வர மபர்யநுயோஜ்ய மாஹு:" என்று ஆழ்வானருளிச்செய்தார். இப்படியே ஆசார்யஹ்ருதயத்திலும் "பட்டத்துக்குரிய ஆனையும் அரசும் செய்யுமவை யாராயாது" என்று அருளிச்செய்திருக்கிறார்.

இப்படியே ஸ்ரீ பாஷ்யத்தில் ரசனாநுபபத்த்யதிகரணத்தில் "ப்ராதிகூல்ய நிவ்ருத்தி மாத்ரேண அநந்தாபராதாந் அநாத்ருத்ய ஸ்வ ப்ராப்தி ஹேதுஷு ருசிம் ஜநயதி" என்று ப்ராதிகூல்ய நிவ்ருத்தியே பற்றாசாக ஈசுவரன் தன்னையடைய ஸாதனங்களான உபாயங்களில் ருசியையுண்டுபண்ணுகிறான்; என்றிருப்பதாலும், "நிதாநம் தத்ராபி ஸ்வயமகில நிர்மாண நிபுண:" என்றும், "அவ்யாஜ ஸித்தமநபாய முபாய மாஹு:" என்றும், "நிருபதி ஸுஹ்ருதம்" என்றும், வேதாந்ததேசிகன் அருளிச்செய்தார்.

— ஆசார்ய ஸ்வரூப சோதநம் —

இங்கு ஆசார்ய ஸமாச்ரயணமென்று கீழ்ச்சொல்லிப் போந்தமையால் ஆசார்ய ஸ்வரூபம் ப்ரஸங்காத் நிருபிக்கப்படுகிறது. ஆசார்யனென்பது ப்ரஹ்ம வித்யையை உபதேசிக்குமவனே. மற்ற வித்யைகளை உபதேசிக்குமவனுக்கு ஆசார்யத்வ பூர்த்தியில்லை; அவனை ஆசார்யனென்று வ்யவஹரிப்பது ஔபசாரிகம்.

ஆசார்யனாவான் ஸத்ஸந்தான ப்ரஸூதனாய் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அறிந்தும் அநுஷ்டித்தும் அப்படியே பிறர்களை அறிவித்தும் அநுஷ்டிப்பித்தும் போருமவனாய் பரமஸத்வைக நிஷ்டனாய் க்யாதி லாப பூஜைகளில் அபேக்ஷையில்லாதவனாய் பரம க்ருபாளுவாயிருக்குமவன்.

இந்த ஆசார்யன் குலக்ரமாகதனென்றும் ப்ரத்யக்ரனென்றும் இரண்டு வகையாயிருக்கும். அதில் குலக்ரமாகதன்—தான் வம்ச பரம்பரையாக ஆசார்ய பதத்தை நடத்திப்போருமவன். ப்ரத்யக்ரனாவான்—தான் ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் அறிந்தும் அநுஷ்டித்தும் போருமவனாய், ஜ்ஞானாபேக்ஷையுள்ளவர்களுக்கு ஜ்ஞான

ப்ரதானம் பண்ணுமவனுய் பாரம்பர்யத்தால் வந்ததான ஆசார்யத்வ மில்லாமல் நவீனனுயிருக்குமவன்.

இவர்களுள் குலக்ரமாகதனுன ஆசார்யன் முக்யன், இப்படி குலக்ரமாகதனுன ஆசார்யனே தானும் வம்ச பரம்பரையாக ஆச்ர யிக்குமொருவன், அந்த ஆசார்யனுக்கு பாதித்யாவஹமான தோஷ மில்லாதிருக்கும் பக்ஷத்தில் மற்ருெரு ஆசார்யனே அந்த ஆசார்ய னுடைய நியமனமில்லாமல் ஆச்ரயித்தானுகில், குலக்ரமாகதரான ஆசார்யராயுள்ள வஸிஷ்டரையும் தத்புத்ரர்களேயும் நிராகரித்து விசுவாமித்திரரை ஆச்ரயித்த த்ரிசங்குவின் படியாம். இந்த அர்த்தம் பாஞ்சராத்ரத்தில் பரமபுருஷ ஸம்ஹிதையில் நிருபிக்கப்பட்டிருக் கிறது. அந்த சுலோகங்களும் இங்கே விவரிக்கப்படுகின்றன.

— பாஞ்சராத்ரம் பரமபுருஷ ஸம்ஹிதை —

அத வக்ஷ்யே மஹாசார்ய சப்தார்த்தம் ச்ருணு பத்மஜ
தஸ்ய ச்ரவண மாத்ரேண மூக்தோ பவதி மாநவ: !!
ஆசிநோதிஹி சாஸ்த்ரார்த்தாந் ஆசாரே ஸ்தாபயத்யபி
ஸ்வயமாசரதே யஸ்மாத் தஸ்மாதாசார்ய உச்யதே !!
ஆசார்யோ த்விவித: ப்ரோக்த; ஸர்வ சாஸ்த்ரார்த்த வேதிபி:
குலக்ரமாகத: பூர்வ: ப்ரத்யக்ர: ச ததாபர:
குலக்ரமாகதாசார்யம் தமாசார்ய விதோவிது:
பும்ஸ: பரகதி ஜ்ஞாநே ஜிஜ்ஞாஸா ஜாயதே யதா !!
தத்பூர்வ தேசிகா பாவாத் யஸ்ஸமித்பாணி ராச்ரயேத்
ததாநீ மஸ்ய தயயா தீக்ஷா ஸம்ஸ்கார பூர்வகம்.
மந்த்ர வ்யாக்யா க்ருதாசார்ய: ஸப்ரத்யக்ராக்ய உச்யதே
குலாசார்யஸ்ய பஜநம் யேவா ஸு க்ருதிநோ ஜநா: !!
குர்வந்தி ஸததம் பக்த்யா தே வந்த்யா: ஸர்வ தைவதை:
ஸர்வக்ரது சதம் க்ருத்வா யத்பலம் ஸமவாப்நுயாத் !!
தத்பலம் ஸமவாப்நோதி குலாசார்யஸ்ய பூஜநாத் !!
தைவாத் தேசாந்தரகதே லுப்தேவா குலதேசிகே
ததிய புத்ர ப்ராத்ராதே: உபதேசோபி க்ருஹ்யதாம் !!
தத்புத்ராதே ரபாவேது சிஷ்ய:சேத் தத்வலோலுப:
தத்துல்ய பாவம் ஸர்வஜ்ஞும் ஆசார்யாந்தர மாச்ரயேத் !!
தேநோபதிஷ்டஸ் ஸர்வஜ்ஞ: சிஷ்ய: ஸத்கதி மாப்நுயாத் !!

தமேவ குரும் அஸ்யாபி புத்ராத்யா: பூஜயந்த்யத: !!
தைவாதீநாத் குலாசார்ய தத்புத்ராதௌ ததா கதே !
உபதேசோ க்ரஹீதவ்ய: புந: குலகுரோர் மநோ: !!
குலக்ரமாகதாசார்ய ஸந்நிதௌ அந்யதேசிக: !
அநுமத்யா விநா தஸ்ய ஸம்பூஜ்யோ நகதாசந !!
குலாசார்யாநிதேசேந தத்ரவை தேசிகாந்தரம் !
தத்துல்ய பக்திர் பஜதே ஸவை நரகபாஜநம் !!
பஹு-நாத்ர கிம் உக்தேந ப்ரஹ்மந் ஸம்க்ஷேபத: ச்ருணு
ந யஜ்ஞைர் ந தபோபிர்வா ந தீர்த்தைர் வ்ரதகோடிபி:
நாந்யை ருபாயைர் விவிதைர் மந்த்ரௌஷத புரஸ்ஸரை: !
குலக்ரமாகதாசார்ய திரஸ்காரஜபாதகாத்
முச்யதே மநுஜோ மூட: ஸர்வ துஷ்க்ருத பாஜநம் !
தஸ்மாத் ஸர்வாத்மநா ப்ரஹ்மந் குலாசார்யம் ப்ரபூஜயேத்
கர்மணு மநஸாவாசா நிர்தோஷ: சுத்திமாப்நுயாத் !!

இந்த சுலோகங்களின் தாத்பரியமெல்லாம் கீழே சொல்லப்பட்டன.

இனி குலக்ரமாகதனுன ஆசார்யன் முக்யன் என்பதற்கு உபபத்தி சொல்லப்படும். குலக்ரமாகதனுன ஆசார்யனுக்கு தனக்கு முந்தின வாசார்யர்களுடைய, ஈசுவரனுக்கு அத்யந்தாபிமதமான திருமேனியினுடைய ஸம்பந்தமும் ஜ்ஞான ஸம்பந்தமும் இருப்ப தால் தத்ஸம்பந்தம் உத்க்ருஷ்டம். இதைத் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீபாஷ்யகாரர் எழுபத்துநாலு ஸிஹ்மாஸநாதிபதிகளை நியமித்தருளி தத்வம்ச்யர்களே பஞ்சஸம்ஸ்காரம் முதலான வ்யாபாரங்களுக்கு அர்ஹர்களென்றும் மற்றவர்கள் அவர்கள் நியமனத்தாலே கீழ்க் குறிக்கப்பட்ட பஞ்சஸம்ஸ்காராதிகளைப் பண்ணக் கடவரென்றும் வ்யவஸ்தை பண்ணியிருக்கிருர். இந்த ஸம்ப்ரதாயமே நம்முடைய ஸிந்தாந்தத்தில் இப்போது நடந்து வருகிறது.

இந்த ஆசார்யன், கேவல மந்த்ரோபதேஷ்டாவென்றும், மந்த்ரார்த்தோபதேஷ்டாவென்றும் இரண்டு வகையாயிருப்பன். அதில் மந்த்ரோபதேஷ்டாவே மந்த்ரார்த்தத்தையும் உபதேசிக்கக் கடவன். அப்படி அவனுலுபதேசிப்பது ஸௌகர்யப்படாதிருந்தால் அவனுடைய நியமனத்தாலே மற்ற ஆசார்ய வம்ச்யனிடத்திலாவது கீழ்ச்சொன்ன ப்ரத்யக்ராசார்யனிடத்திலாவது அர்த்தக்ரஹணம் பண்ணிக்கொள்ளலாம். இந்த விஷயம் ஸ்ரீ பாஷ்யகாரர் ஐந்து ஆசார்

யர்களிடத்தில் விசேஷார்த்தக்ரஹணம் பண்ணியிருப்பதாலும் நடாதூர் அம்மாள் தனக்கு பிதாவும் ஆசார்யனுயுமுள்ள நடாதூ ராழ்வானுடைய நியமனத்தாலே எங்களாழ்வானிடத்தில் ஸ்ரீபாஷ்யார்த்தக்ரஹணம் பண்ணினபடியாலேயும் ஸ்பஷ்டம். இப்படியே வித்யாவம்ச்யரும் முக்யர்கள். இந்த விஷயத்தை "நாஸ்யாவரபுருஷா: க்ஷீயந்தே" என்று சுருதி சொல்லிற்று.

இதில் ஓராண்வழியாவது—ஒரு ஆசார்யனுக்கு அநேக சிஷ்யர்களிருந்தபோதிலும் அவருள் ஒருவரே ஓராண்வழிக் கிரமத்தை அநுஸரித்திருப்பர். அதாவது—நாதமுனிகளுக்கு அநேக சிஷ்யர்களிருக்கச் செய்தேயும் அவருள் உய்யக்கொண்டாரும், அப்படியே ஆளவந்தாருக்குப் பெரியநம்பியும், பாஷ்யகாரருக்கு எம்பாரும் அப்படியே மணவாளமாமுனிகள் பர்யந்தம் இந்த க்ரமமானது ஏற்பட்டிருக்கிறது.

மற்ற ஆசார்ய வம்ச்யர்களுக்கும் ஓராண்வழியாய் வந்த ஆசார்யர்களுக்கும் வாசி என்னென்னில், ஓராண்வழியாய் வந்த ஆசார்யர்கள் ஜ்ஞாநாதிகனுய் ஆசார்ய வம்ச்யனன்றியிருக்குமவனுக்கும் நவீனமாக ஆசார்யபதத்தைக் கொடுக்கத் தகுந்தவர்கள். மற்றை ஆசார்ய வம்ச்யர்களுக்கு அந்த அதிகாரமில்லை.

இந்த விஷயம் நஞ்சீயர், நம்பிள்ளை இவர்களிடத்தில் காணலாம். அப்படியிருக்கையாலே ஆசார்யவம்சத்திலவதரித்தவர்களும் ஓராண்வழி ஆசார்யர்களை ஆசிரயித்து மற்றவர்களுக்கு ஆசார்ய பதத்தைக் கொடுத்திருக்கிருர்கள். இதற்கு உதாஹரணம், மணவாள மாமுனிகள் எழுபத்துநாலு ஸிஹ்மாஸநாதிபதிகளில் ஒருவரான கோமடத்தாழ்வான் வம்ச்யராயிருந்தபோதிலும் திருவாய்மொழிப் பிள்ளை திருவடிகளில் ஆசிரயித்தார் அப்படி ஓராண்வழியிலே அந்வயித்தவரானபடியாலே மணவாளமாமுனிகள் வானமாமலை ராமாநுஜ ஜீயருக்கு ஓராண்வழி க்ரமத்தை ஸாதித்தார். ஆதலால் வானமாமலை ராமாநுஜஜீயரும் ஓராண்வழி ஸம்ப்ரதாயத்தை அநுஸரித்து மற்றவர்களுக்கு ஆசார்ய பதப்ரதானம் பண்ணியிருக்கிருர். அங்ஙனமன்றிக்கே ஓராண்வழி க்ரமத்தில் கோயில்கந்தாடை அண்ணனும் அந்வயித்தவரென்று சில ஆசார்யர்களுடைய அபிப்ராயம்: யதாஸம்ப்ரதாயம் கண்டுகொள்வது.

கேவலமந்த்ரோபதேஷ்டாவும், அர்த்தோப தேஷ்டாவும் கௌரவ்யதையிலே துல்யர்கள்: "அஸாவஸாவித்யாபகவத்த:" என்றும், "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்றும் ஸ்வாசார்யன் முதலாக எம்பெருமான் பர்யந்தமும் எம்பெருமான் முதலாக ஸ்வாசார்ய பர்யந்தமும் அநுஸந்திக்கப்படுகிற குருபரம்பரையில் இருவரும் அநுஸந்தேயர்; இதற்கு ப்ரமாணம் "மந்த்ரே தத்தேவதாயாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ்ஸதாகார்யா ஸாஹி ப்ரதம ஸாதநம்" "ஸஹி வித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம் ஜந்ம. சரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:" ...

— ஆசாரியர்களில் இரண்டு வகை —

இந்த ஆசார்யன் க்ருபாமாத்ர ப்ரஸந்நனென்றும் அநுவ்ருத்தி ப்ரஸந்நனென்றும் இரண்டுவகையாயிருக்கும். அதில் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யராவார், சேதனனுடைய துர்க்கதியைக்கண்டு பொறுக்கமாட்டாமல் கேவலக்ருபையாலே விமுகரான சேதனருக்கும் ஜ்ஞானோபதேசம் பண்ணுமவர்கள்; பிராட்டியும் ஆழ்வாரும் போல்வார். இந்த அர்த்தம் "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும்" என்கிற ஆசார்யஹ்ருதய சூர்ணிகையில் வ்யக்தம். சிஷ்யனுடைய அநுவ்ருத்தியினாலே கிருபையுண்டாகி ஜ்ஞானோபதேசம் பண்ணுபவர்கள் அநுவ்ருத்தி ப்ரஸன்னாசார்யர்கள். இவர்களில் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்கள் ச்ரேஷ்டர்கள்.

— ப்ராஹ்மணனே ஆசார்ய பதத்துக்கு உரியவன் —

ஆசார்யன் ஸத்ஸந்தாநப்ரஸூதனாய் ஆஸப்தபூருஷம் சுத்தனாயிருக்கவேணுமென்று பாரத்வாஜ ஸம்ஹிதையில் சொல்லியிருக்கிறபடியால் அப்படிப்பட்ட ப்ராஹ்மணனே ஆசார்யபதத்துக்குரியவன். ஆனால் ப்ரபத்தியில் எல்லோருக்கும் அதிகாரமிருப்பதாலும் ஜ்ஞானியாயிருக்கிறவன் விஷயத்தில் வர்ணாச்ரமாதி நியமம் முக்கியமல்லவென்றிருப்பதாலும் மற்ற வர்ணத்தாரும் ஜ்ஞானோபதேசம் பண்ணலாமோ வென்னில்? அது கூடாது. பாரத்வாஜ ஸம்ஹிதையில் கீழ்ச்சொன்ன ப்ராஹ்மணனே ஆசார்யபதத்துக்கு உரியவனென்று சொல்லிவிட்டு மற்ற வர்ணத்தார் அதற்கு அநர்ஹர் என்றும் நிருபித்துவிட்டு "கிமப்யத்ராபி ஜாயந்தே" என்கிற ச்லோகத்தால் பகவத் ஸாக்ஷாத்காரம் வந்தவர்களிடத்தில் குலம் முதலானவற்றைச்

சிந்திக்கலாகாதென்றும் அவர்களே ஆசார்ய பதத்துக்கு உரியவர்களென்றும் சொல்லியிருப்பதால் அவர்களைத்தவிர மற்ற ஆஸப்த புருஷம் சுத்தரல்லாதார் ஆசார்யபதத்துக்கு உரியரல்லர். அப்படி ஸாக்ஷாத்காரம் வந்தவர்களும் லோகக்ஷோபம் பிறக்குமென்று ஸர்வஸாதாரணமாக உபதேசித்தார்களில்லை. இந்த விஷயம் நம்மாழ்வாரிடத்திலும் திருமழிசைப்பிரானிடத்திலும் கண்டுகொள்வது.

இப்படியே "விதுரஸ்ஸ மஹாமதி:" என்று ஜ்ஞாநாதிகராகச் சொல்லப்பட்ட விதுரரும், (உத்யோகபர்வத்தில் விதுரப்ரஜாகரத்தில்) "சூத்ரயோநா வஹம் ஜாத: நாதோந்யத்வக்து முத்ஸஹே" என்று த்ருதராஷ்டிரனைக் குறித்து தான் ப்ரஹ்மவித்யோபதேசம் பண்ணினால் மற்ற ஸாமான்ய சூத்ரர்களும் அப்படியே செய்வார்களாதலால் லோகக்ஷோபம் பிறக்குமென்று தான் ப்ரஹ்மவித்யோபதேசம் பண்ணலாகாதென்று சொல்லியிருக்கிறார்.

எப்படிப்பட்ட ஜ்ஞாநாதிகர்களும் லோகஸங்க்ரஹார்த்தமாகத் தங்கள் தங்களுடைய வர்ணாச்ரமதர்மங்களை அதிக்ரமித்தார்களில்லையென்பது ஸ்பஷ்டம். ஆழ்வாருக்குப் பின்பு இதுவரையிலுள்ள ஆசார்ய பரம்பரையில் ப்ராஹ்மணரைத் தவிர மற்ற வர்ணத்தவர்கள் ஆசார்யபதத்தை அவலம்பித்தார்களில்லை. நேரில் தேவப்பெருமாளுடன் ஸல்லாபம் பண்ணிக்கொண்டிருந்த திருக்கச்சி நம்பியை விட்டு, ஸ்ரீ பாஷ்யகாரர் பெரியநம்பியை ஆச்ரயித்தபடியாலும் அந்த அர்த்தம் ஸுஸ்பஷ்டம்.

ஆதலால் அவரவர்ணத்தார் ஜ்ஞாநாதிகராயிருந்தாலும் "தஸ்மைதேயம் ததோ க்ராஹ்யம்" என்கிற ப்ரமாணத்தின்படி கேவலம் விசேஷார்த்தங்களை உபதேசிக்கமட்டும் அர்ஹராவரல்லது பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாக மந்த்ரோபதேசம் பண்ணலாகாது. அப்படி யோக்யதையுள்ளவர்கள் பகவத் ஸாக்ஷாத்காரம் வந்த ஆழ்வார்கள் போல்வார்கள். அவர்களும் லோகஸங்க்ரஹத்தின் பொருட்டு ஸர்வஸாதாரணமாகச் செய்யவில்லை. இவற்றால் ப்ரஸக்தமாய் வந்த ஸதாசார்ய ஸமாச்ரயண க்ரமமிருக்கும்படி கண்டுகொள்ளத்தக்கது.

— முக்த நித்ய ஸ்வரூப நிரூபணம் —

இனி முக்தராவார் கீழ்ச்சொன்ன பிரகாரம் உபாயங்களை அநுஷ்டித்து அத்தால் ப்ரஸந்நனான ஈசுவரனுடைய அநுக்ரஹத்

தாலே ஸம்ஸாரபந்தம் அற்றவர்கள். இவர்கள் கேவலர்களென்றும் பகவதநுபவபரர்களென்றும் இரண்டுவகையாயிருப்பர்கள். இப்படி இரண்டுவகையாயிருப்பதற்கு "தத்ய இத்தம் விது:" இத்யாதி சுருதியும், "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு ரர்த்தார்த்தீ ஜ்ஞாநீச பரதர்ஷப" என்கிற கீதாவாக்யமும், "அப்ரதீகாலம்பநாந்நயதீதி பாதராயண:" என்கிற ஸூத்ரமும் ப்ரமாணங்களாம். இதனுடைய அவாந்தர ப்ரகாரங்கள் புருஷார்த்த நிரூபணத்திற் சொல்லப்படும்.

இனி நித்யராவார் ஒருநாளும் ப்ரக்ருதிஸம்பந்தமில்லாதவராயும், பகவதநுபவ கைங்கர்யங்களே தாரக போஷக போக்யங்களாகக் கொள்ளுமவர்களாயுமுள்ள நித்யவிபூதிவாஸிகளான அனந்த கருட விஷ்வக்ஸேநாதிகள். இந்த விஷயத்துக்கு "யத்ரர்ஷய: ப்ரதமஜா யே புராணா:" "யத்ரபூர்வே ஸாத்யாஸ் ஸந்திதேவா:" "ஸதாபச்யந்தி ஸூரய:" என்கிற சுருதிகளும் பாஞ்சராத்ராதிகளும் ப்ரமாணங்களாம்.

— ஆத்மாக்களின் ஆனந்தமயத்வ நிரூபணம் —

கீழ் பத்த முக்த நித்யர்களாகச் சொல்லப்பட்ட மூன்றுவகை ஆத்மஸ்வரூபமும் ஆனந்தமாயும் ஆனந்தத்துக்கு ஆசிரயமாயுமிருக்கும். ஆனந்தமாவது அநுகூலமென்றறிகை அங்ஙனன்றிக்கே தனக்குத்தானே யனுகூலமாயிருப்பதும் ஆனந்தமென்று வ்யவஹரிக்கப்படும். இங்கு அநுகூலமாகையாவது வேறொன்றைப் பெறுகைக்கு ஸாதனமாக விரும்பப்படுவதன்றிக்கே தானே விரும்பப்படுமதாயிருக்கை. ஆத்மா கீழ் நிரூபித்தபடி அனுகூலமாயிருக்கும். அனுகூலமாயிருக்கும் வஸ்துக்களையும் அனுகூலங்களென் றறியுமதாயிருக்கும். இப்படி சுருதி முதலான பிரமாணங்களால் ஆத்மஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனன்றிக்கே உறங்கினவன் உணர்ந்தபிறகு நான் ஸுகமாக உறங்கினேன் என்று தான் அனுஸந்திப்பதாலும் ஆத்மா ஆனந்தரூபனாயிருப்பது ப்ரத்யக்ஷ ஸித்தமாயறியப்படும். அதெப்படியென்றால் உறங்குகிற காலத்தில் வேறு அறிவு ஒன்றுமில்லாமல் தன்னுடைய ஸ்வரூபம் மட்டும் துலக்கமாகத் தனக்குத்தானே விளங்கிக்கொண்டிருக்கும்போது அனுகூலமாகத் தோற்றிக்கொண்டிருந்தமையால் விழித்தபிறகு அந்த ஸ்மரண பூர்வகமாயுள்ள ப்ரத்யபிஜ்ஞா ப்ரத்யக்ஷமுண்டாகிறது. உறக்கமாவது:— ஆத்மா பிறி

தொன்றையும் அறியாதிருப்பதாகையால் அவ்வறியாமை அபாவரூப மாகிறது. நம்முடைய ஸித்தாந்தத்தில் அபாவம் தனக்கு ஆசிரயமா யுள்ள ஸ்வரூபமே தவிர வேறு பதார்த்தமன்றென்று ஸித்தித்திருப்ப தால் அந்த உறக்கமும் ஆத்மஸ்வரூபமேயாம். அந்த ஆத்மஸ்வ ரூபத்தை ஸுகமாக உறங்கினேன் என்று ப்ரத்யபிஜ்ஞா ப்ரத்யக்ஷம் விஷயீகரித்திருப்பதால் ஆத்மா ஸுகரூபம் என்று ஏற்படுகிறது. எங்ஙனமெனில்? இனிதாகப் பாடினேன், மெதுவாக நடந்தேன் என்கிற ப்ரத்யபிஜ்ஞா ப்ரத்யக்ஷத்தில் இனிமை பாட்டிலும், மெது வாயிருக்கை நடையிலும் அந்வயிப்பதுபோலே ஸுகமாகத் தூங்கி னேன் என்கிற ப்ரத்யபிஜ்ஞா ப்ரத்யக்ஷத்தில் ஸுகமாயிருக்கை தூக்கத்தில் அந்வயிக்கிறது. இதனுல் கீழ் நிரூபித்தபடி அந்த ஸுகா காரமான தூக்கமானது தனக்கு ஆசிரயமாயுள்ள ஆத்மாவின் ஸ்வரூபமாக ஏற்படுகிறபடியால் ஆத்மாஆனந்தரூபமென்று ஸித்திக் கிறது. ஒவ்வொருவரும் நன்ருயுறங்குகிற சமயத்தில் பிறர் எழுப்பும் போது உறக்கத்தில் விருப்பமும், எழுப்புவதில் வெறுப்புமுண்டாகக் காண்கையால் உறக்கத்தில் ஆத்மா ஸுகரூபமாகத் தனக்குத்தானே தோற்றிக்கொண்டிருக்கிறதென்பது ஸகலருக்கும் ஸ்வாநுபவஸித்த மாயும் அறியத்தக்கதே.

— அசித்ஸ்வரூப நிரூபணம் —

இனி அசித்தினுடைய ஸ்வரூபம் நிரூபிக்கப்படும். அசித்தா வது—அறிவில்லாததாயும் எப்போதும் பரிணமமுள்ளதாயும் ஈசுவர னுக்கு சரீரமாயும் இருக்கும். அது ப்ரக்ருதி என்றும், சுத்தஸத்வ மென்றும், காலமென்றும் மூன்று வகைப்படும்.

அவற்றுள் ப்ரக்ருதியாவது—ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்களுக்கும் ஆச்ரயமாயும் சேதனனுடைய கர்மாநுகுண மான பகவத் ஸங்கல்பத்தாலே எப்போதும் பரிணமத்தையுடைத்தா யுமிருக்கும். இது ப்ரகிருதியென்றும், அவிபக்த தமஸ்ஸு என்றும், விபக்த தமஸ்ஸு என்றும், அக்ஷரம் என்றும், அவ்யக்தம் என்றும் சில அவஸ்தைகளை யுடைத்தாயிருக்கும்.

அவற்றுள் அவிபக்த தமஸ்ஸாவது—மஹாப்ரளய தசையில் ஈசுவரனுடைய ஸ்வரூபத்தில் ஏகீபவித்து தனித்து வ்யவஹரிக்க யோக்யதை யில்லாமலிருக்கும்; விபக்த தமஸ்ஸாவது—தனித்து

வ்யவஹரிக்கப்படுமதாயிருக்கும்; அக்ஷரமாவது—அக்ஷரன் என்று பெயரையுடைய ஜிவஸமஷ்டி. மர்ப்பமாயிருந்து கார்யோன்முகமா யிருக்கும்; அவ்யக்தமாவது—கார்யத்தை யுண்டாக்கக் கடவதா யிருக்கும்.

இப்படியிருந்துள்ள அவ்யக்தத்தில் நின்றும் மஹான் என்கிற தத்வமுண்டாகும்; அதில் நின்றும் அஹங்காரம் உண்டாகும்; அது ஸாத்விகமென்றும் ராஜஸமென்றும். தாமஸமென்றும் மூன்று வகையாயிருக்கும். ஸாத்விகாஹங்காரத்தில் நின்றும் த்வக், ஜிஹ்வா, க்ராண, சக்ஷுஸ், ச்ரோத்ரங்களாகிற ஜ்ஞானேந்திரியங்கள் ஐந்தும், வாக், பாணி, பாத, பாயூபஸ்தங்களாகிற கர்மேந்திரியங்கள் ஐந்தும் மனஸ்ஸும் உண்டாகும். இவற்றுள் ஜ்ஞானேந்திரியங்கள் அறிவுக் குரிய ஸாதனங்களாம். கர்மேந்திரியங்கள் அறிவுடைய கார்யமான க்ரியைகளுக்கு ஸாதனங்களாம். மனஸ்ஸு அவ்விருவகை இந்திரி யங்களுக்கும் ஸஹகாரியாயிருக்கும். தாமஸாஹங்காரத்தில் நின்றும் பூதங்களுடைய ஸூக்ஷ்மாவஸ்தைகளாயுள்ள தந்மாத்ரங்களும், ஆகாசம், வாயு, தேஜஸ், ஜலம், பிருதிவீ என்கிற பஞ்சபூதங்களும் அடைவேயுண்டாகும்.

இப்படியிருந்துள்ள ஐந்து பூதங்களும் அஹங்காரம் மஹான் இவைகளேழும் தனித்தனி கார்யம் செய்யமுடியாமையால் பகவத் ஸங்கல்பத்தாலே ஸப்தீக்ருதங்களாய்க்கொண்டு கார்யங்களை யுண் டாக்கும்.

ஸப்தீகரணமாவது- இவைகளில் ஒவ்வொன்றையும் இரண்டு பாகமாக்கி ஓரோன்றின் ஒவ்வொரு பங்கை அவ்வாறு பாகமாக்கி மற்றுள்ள ஆறோடும் கூட்டிக் கார்யோந்முகமாக்குகை. இப்படி ஸப்தீக்ருதங்களான இவைகளேழும் கூடி அண்டத்தை யுண் டாக்கும்.

சுருதியில் த்ரிவ்ருத்கரணமே சொல்லியிருந்தபோதிலும் அந்த த்ரிவ்ருத்கரணமானது பஞ்சீகரணம், ஸப்தீகரணம் இவைகளுக்கும் உபலக்ஷணம். இந்த விஷயமானது ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் "மஹ தாத்யா விசேஷாந்தா ஹ்யண்ட முத்பாதயந்தி தே" என்று நிரூபிக்கப் பட்டது.

அண்டமாவது-கீழேழுலோகங்களும் மேலேழுலோகங்களும் அடங்கியதாய் கீழ்ச்சொன்ன ஐந்து பூதங்களாலும் மஹதஹங்காரங்களாலும் ஆக்கப்பட்டதாய் ஒன்றுக்கொன்று பதின்மடங்கு விஸ்தாரமுள்ள ஆவரணங்களோடே கூடினதாயிருக்கும். இப்படியே அநேக அண்டங்கள் ஏற்பட்டிருக்கும். இதற்கு ப்ரமாணங்கள் "அண்டாநாந்து ஸஹஸ்ராணி கோடிகோடி சதாநிச" என்றற்றொடக்கத்தனவாம்.

இப்படியிருந்துள்ள அண்டங்களில் ஒவ்வொரு அண்டத்திலும் ப்ரஹ்மா முதலான தேவதைகளும் மனுஷ்யாதி ஜங்மங்களும் மற்றுமுள்ள பதார்த்தங்களும் அடங்கியிருக்கும். இந்த விஷயத்தை ஸ்ரீ பாகவதத்தில் ப்ரஹ்ம ஸ்துதியில் "க்வாஹம் தமோ மஹதஹம் கசராக்நிவார்பூஸம்வேஷ்டிதாண்ட கடஸப்தவிதஸ்திகாய:, க்வேத்ருக்விதா தகணிதாண்ட பரார்த்தசர்யா பாதாத்வரோம விவரஸ்யச தே மஹித்வம்" என்று ப்ரஹ்மா நிருபித்திருக்கிறார். இவ்வளவோடு ப்ரகிருதிதத்வம் நிருபிக்கப்பட்டது.

— சுத்தஸத்வ நிருபணம் —

இனி சுத்தஸத்வம் நிருபிக்கப்படும் :— சுத்தஸத்வமாவது—ரஜஸ் தமஸ்ஸுக்கள் கலசாத கேவல ஸத்வகுணத்துக்கு ஆசிரயமாகவிருக்கும். இந்த சுத்தஸத்வம் ப்ரகிருதிக்குமேல் 'ததநந்தம்' என்றும் சொல்லுகிறபடியே ப்ரகிருதியைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாயிருக்கும் ; அன்றியும் முக்தர்க்கும் நித்யர்க்கும் ஈசுவரனுக்கும் தர்மபூத ஜ்ஞாநம்போலே தானே ப்ரகாசிக்கும்படியாயிருக்கும் இன்னும் ஈசுவரனுடைய இச்சையாலே அவனுக்கு போகார்த்தமாக விமான மண்டப கோபுராதிகளாய்க்கொண்டு பரிணமிக்கக் கடவதாயும் நித்யவிபூதி என்றும் அயோத்யா என்றும் அபராஜிதா என்றும் பெயர்களை யுடையதாயுமிருக்கும்.

இப்படியிருந்துள்ள நித்யவிபூதியில் ஆமோதம் முதலான வ்யூஹஸ்தானங்களும் மற்றும் நித்யர்களுடைய லோகங்களும் எண்ணிறந்தனவாயிருக்கும். இந்த விஷயம் கௌஷீதகீ முதலான உபநிஷத்துக்களிலும் பாஞ்சராத்ர இதிஹாஸ புராணாதிகளிலும் ஸ்பஷ்டமாக விளங்கும். அவையெல்லாம் இங்கு விரித்துரைப்பின் மிகப் பெருகுமென் றஞ்சி விடப்பட்டன.

— காலதத்வ நிருபணம் —

இனி, காலமாவது ஸத்வம், ரஜஸ், தமஸ் இந்த மூன்று குணங்களும் இல்லாததாயும் சேதனனுடைய கர்மாநுகுணமான பகவத் ஸங்கல்பத்தாலே க்ஷண லவ காஷ்டாதி ரூபமாகப் பரிண மிக்கக் கடவதாயுமிருக்கும். இப்படிப்பட்ட கால பரிணாமம் நித்ய விபூதியில் இல்லை.

— ஈச்வரதத்வ நிருபணம் —

இனி ஈசுவர தத்வம் நிருபிக்கப்படும்:— ஈசுவரனாவான்— ஸமஸ்தகல்யாணகுணாகரனாயும், ஸமஸ்த வஸ்துக்களுக்கும் சேஷியாயும் ஸ்வாமியாயும் ஸர்வ கர்ம ஸமாராத்யனாயும் நிரதிசய புருஷார்த்தமான மோக்ஷத்தைக் கொடுப்பவனாயும் உபாயமாயும் உபேயமாயுமுள்ள மேலான தேவதை. அந்த மேலான தேவதை ஸ்ரீமானான நாராயணனே யென்பது சுருதி ஸ்ம்ருதி இதிஹாஸ பாஞ்சராத்ர புராணாதிகளாலும் மற்றும் ப்ரதாநர்களாயுள்ள ஸம்ஸ்கிருத த்ராவிட மஹாகவிகளின் வாக்யங்களாலும் மற்றும் உபபத்திகளாலும் நிருபிக்கலாகும்.

சுருதியில், 'காரணந்து த்யேய:' என்ற வாக்கியத்தால் ஜகத் காரண வஸ்துவே தியானிக்கத் தக்கதென்று அறுதியிட்டு, அந்த ஜகத் காரணம் 'யதோவா இமாநி பூதாநி" என்று தொடங்கி 'ப்ரஹ்ம' சப்த வாச்யமாம் என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது.

"ஏகோஹவை நாராயண ஆஸீத்" என்ற வாக்கியத்தால் ப்ரஹ்ம ருத்ராதிகளுண்டாவதற்கு முன்னே ஜகத் காரணமாயிருந்த ப்ரஹ்ம சப்தவாச்யன் நாராயணன் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னும் 'யேநாக்ஷரம் புருஷம் வேதஸத்யம் ப்ரோவாசதாம் தத்வதோ ப்ரஹ்ம வித்யாம்" என்பதால் எந்த ஜ்ஞானத்தாலே அக்ஷரனான புருஷனை அறிவனோ அந்த ப்ரஹ்ம வித்யையைச் சொல்லக்கடவன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் ப்ரஹ்ம சப்தவாச்யன் புருஷன் என்று பெறப்படுகிறது.

ஆனந்த வல்லியில் "ஆத்மந ஆகாச: ஸம்பூத:" என்று தொடங்கி ஆத்மாவே ஜகத்காரணபூதனென்றும் அந்த ஆத்மா ஆனந்தமயனென்றும், அந்த ஆனந்தமயனான பரமாத்மா "யச்சா

ஸாவாதித்யே" என்று ஆதித்ய மண்டலாந்தர்வர்த்தி யென்றும் சொல்லப்பட்டது.

சாந்தோக்யத்தில் அந்தராதித்ய வித்யையில் "ய ஏஷோந்தராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே தஸ்ய யதா கப்பாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ" என்பதனுல் ஆதித்யமண்டலாந்தர்வர்த்தி புருஷன் என்றும் அவன் "புண்டரீகாக்ஷன்" என்றும் சொல்லியிருக்கிறது. இந்த புண்டரீகாக்ஷனுன புருஷன் நாராயணன் என்பது நிரூபிக்கப்படும். சைவ புராணத்தில், நாராயணன் தினந்தோறும் ஆயிரம் தாமரை மலர்களாலே சிவனே அர்ச்சித்து வந்ததாகவும் ஒருநாள் பக்தியை சோதிக்கவேண்டி ஒரு தாமரைமலரை சிவன் காணுமற் செய்ததாகவும் அப்போது அர்ச்சிக்கும் நாராயணன் புண்டரீகாக்ஷனுகையால் தன்னுடைய கண்மலரா லர்ச்சித்ததாகவும் அதனுல் ஸந்துஷ்டனுய் சக்ரம் கொடுத்ததாகவும் சொல்லியிருப்பதால் புண்டரீகாக்ஷன் நாராயணன் என்பது இந்த கட்டுக்கதையாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஆதுனிகர்களான சைவகவிகளில் ஒருவர் சிவஸ்துதியில் "கஞ்சலோசந பூஜ்யாய கஸ்மைசிந்மஹஸே நம:" என்று நாராயணனே புண்டரீகாக்ஷனுகச் சொல்லியிருக்கிறுர்.

தமிழருள் பொதுநோக்குடையரான திருவள்ளுவரும், தாம் செய்த திருக்குறள் என்னும் நூலினுள்ளே "தாம் வீழ்வார் மென்றோட்டுயிலினினிதுகொல் தாமரைக்கண்ணுனுலகு" என்பதால் நிரதிசயானந்த போகப்ரதமான மோக்ஷலோகத்தை புண்டரீகாக்ஷனுடையதென்று சொல்லியிருக்கிறுர். கல்வியிற்பெரிய கம்பநாடரும் "தயரதன் மதலையென்பார் தாமரைக்கண்ணனென்பார்" என்பதால் வெளியிட்டிருக்கிறுர்.

புருஷஸூக்தம் நாராயணபரமென்பது ஸ்பஷ்டம்; போதாயந ஸ்ம்ருதியில் புருஷஸூக்தத்தை விஷ்ணு பூஜையில் உபயோகிக்கவேண்டியதென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த புருஷஸூக்தத்தில் 'ஸஹஸ்ர சீர்ஷா புருஷ:" என்று தொடங்கி "தமேவம் விதித்வா அதிம்ருத்யுமேதி" என்பதனுல் அந்த புருஷனுடைய ஜ்ஞானமே மோக்ஷத்துக்கு ஸாதனமென்றும் "நாராயண பரம் ப்ரஹ்ம" என்பதனுல் அந்த புருஷன் நாராயணன் என்றும், 'தஸ்யா:

சிகாயா மத்யே' என்கிற வாக்யத்தால் தஹரவித்யைக்கு நாராயணன் உபாஸ்யன் என்றும் சொல்லியிருப்பதால் மற்ற ப்ரஹ்ம வித்யை களுக்கும் நாராயணனே உபாஸ்யனென்று ஸித்தித்திருக்கிறது.

கீதையில் "புருஷஸ் ஸ பர: பார்த்த பக்த்யா லப்யஸ் த்வ நந்யயா" என்பதனுல் புருஷ சப்தவாச்யன் நாராயணனென்று சொல் லப்பட்டது. காளிதாஸ மஹாகவியும் "ஸ்ரீவத்ஸ லக்ஷ்மா புருஷச்ச ஸாக்ஷாத்" என்பதாகக் குமாரஸம்பவத்தில் சொல்லியிருக்கிருர். இப்படியே புருஷசப்தம் நாராயணபரம் என்பதற்கு அநேக ப்ரமா ணங்கள் காட்டத்தகும்; அவையெல்லாமிங்கே காட்டினுல் மிக விரியுமென்று விடப்பட்டன.

இப்படியே ஸுபாலோபநிஷத்திலும் மஹோபநிஷத்திலும் கடவல்லி முதலான உபநிஷத்துக்களிலும் நாராயணனே பரதத்வ மென்பது வ்யக்தம்.

— ஸ்ம்ருதி நிருபணம் —

இனி ஸ்ம்ருதி விஷயம் நிருபிக்கலாகும். "யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்" என்று சுருதியாலே ஆப்ததமராகச் சொல் லப்பட்ட வைவஸ்வதமநு தன்னுடைய ஸ்ம்ருதியில் ஆதியில் "ஆஸீதிதம் தமோபூதம்" என்று தொடங்கி "ஆபோநாரா இதி ப்ரோக்தா: ஆபோவை நரஸூநவ:, தாயதஸ்யாயநம் ப்ரோக்தம் தேந நாராயண: ஸ்ம்ருத:" என்பதனுல் ஜலமானது நரனுன ஈசுவரனிடத் தில்நின்றும் உண்டானதாகையாலே நாரம் என்று சொல்லப்படும்; அந்த நாரத்தை ஸ்தானமாக உடையவனுகையாலே நாராயண னென்று சொல்லப்படுவன் என்றும் "ஸோஹித்யாய சரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவிதா: ப்ரஜா:, மஹாபூதாதி வ்ருத்தௌஜா: ப்ராதுரா ஸித் தமோநுத:" என்பதனுல் தான் ஸங்கல்பித்து தன்னுடைய சரீரமாயுள்ள ப்ரக்ருதியைக்கொண்டு நாலுவிதங்களான ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கவேணுமென்கிற இச்சையுடையவனுய் மஹாபூதங்களுக் கெல்லாம் ஆதியான அஹங்கார தத்வத்தில் வ்யாபித்த ஸங்கல்பத்தை யுடையவனுய் ப்ரக்ருதியினுடைய தமஸ்த்வாவஸ்தையைப் போக்கு கிறவனுய்க்கொண்டு கார்யோன்முகனுக ஆனுன் என்று சொல்லி யிருப்பதால் நாராயணனே பரதத்வமென்றும் அவனே சேதனு சேதன சரீரியாய்க்கொண்டு ஸ்ருஷ்டிப்பதால் விசிஷ்டாத்வைதமே ஸித்தாந்தமென்று ஏற்படுகிறது. இந்த ஸ்ம்ருதிக்கு வ்யாக்யாதா

வான குல்லூகபட்டர் அத்வைதியாயிருந்தபோதிலும் இந்த சுலோக வ்யாக்யாநவஸரத்தில் 'அநேந க்ரந்தகாரேண த்ரிதண்டி வேதாந்தி மதமேவ ஆத்ருதம் பவதி'' என்ற வாக்கியத்தால் இந்த க்ரந்தகார ரான மநுவாலே த்ரிதண்டி வேதாந்திமதமான விசிஷ்டாத்வைதமே ஆதரிக்கப்பட்டதென்று சொல்லியிருக்கிறார்.

இப்படியே யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி, சாண்டில்யஸ்ம்ருதி முத லானவைகளில் நாராயணனே பரதத்வமென்றும் அவனே மோக்ஷ ப்ரதனென்றும் அவனையே பக்திப்ரபத்திகளால் உபாஸிக்கவேணு மென்றும் அப்படி உபாஸிக்குமவர்கள் பஞ்சகால பராயணர்களா யிருக்கவேணுமென்றும் சொல்லி அந்த பஞ்சகாலங்களுடைய ஸ்வரூபத்தையும் நிருபித்திருக்கிறது. இந்த விஷயம் மேலே ஸ்பஷ்ட மாக நிருபிக்கப்படும்.

— ஸ்ரீ ராமாயணத்தைக்கொண்டு நாராயண பாரம்ய நிருபணம் —

இனி இதிஹாஸங்களில் ப்ரதானமான ஸ்ரீ ராமாயணத்தில் ''அதிகம் மேநிரே விஷ்ணும் தேவாஸ் ஸர்ஷிகணாஸ் ததா'' என்பத னால் ருத்ரனுக்கும் விஷ்ணுவுக்கும் நடந்த யுத்தத்தில் ருத்ரனுடைய பராஜயத்தைக் கண்ட தேவர்களும் ரிஷிகணங்களும் விஷ்ணுவை அதிகனாக நினைத்தார்களென்றும் அயோத்யா காண்டத்தில் ''அர்த் திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதந:'' என்பதனால் தேவதைகளாலே ராவண வதத்துக்காக ப்ரார்த்திக்கப்பட்ட விஷ்ணு வானவர் சக்ரவர்த்தி திருமகனாக அவதரித்தார் என்றும் ''ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்'' என்பதனால் அப்படிப் பட்ட சக்ரவர்த்தி திருமகனுக்கு நாராயணனே ஆராத்யனென்றும், ஆரண்ய காண்டத்தில் கரவதானந்தரம் அகம்பநோக்தியில் நாரா யணனே ராமனாக அவதரித்தானென்பதை ஸூசிப்பித்திருப்பதாலும் கிஷ்கிந்தா காண்டத்தில் ''நிவாஸ வ்ருக்ஷஸ் ஸாதூநாம்'' ''த்வம் அப்ரமேயச்ச'' என்கிற சுலோகங்களாலும் ஸுந்தர காண்டத்தில் ''ப்ரஹ்மா ஸ்வயம்பூ:'' என்கிற சுலோகத்தாலும் பகவத்பாரம்யம் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தகாண்டத்தில் ராவணவதாநந்தரம் ''தமஸ: பரமோதாதா சங்கசக்ர கதாதர:'' என்று மந்தோதரி வார்த் தைகளாலும் ''பவாந் நாராயணோ தேவ:'' என்பது முதலான ப்ரஹ்மாவினுடைய வாக்யங்களாலும் உத்தரகாண்டத்தில் மாலி ஸுமாலி மால்யவான் இவர்களுடைய யுத்தத்தில் அவர்கள் ஏவிய

பாணங்கள் விஷ்ணுவினிடத்தில் லயமடைந்ததைப்பற்றிச் சொல்லும்போது அந்த விஷ்ணுவினிடத்தில் ப்ரளயகாலத்தில் ப்ரஜைகள் லயமடைந்ததுபோல என்று த்ருஷ்டாந்தங் காட்டியிருப்பதாலும் காலபுருஷன் ப்ரஹ்மாவாலே நியமிக்கப்பட்டவனைக்கொண்டு சக்ரவர்த்தி திருமகனைத் தன்னுடைச் சோதிக்கு எழுந்தருளவேணு மென்று பிரார்த்திக்கிற காலத்தில் "நாப்யா முத்பாத்ய மாமபி" "ப்ராஜாபத்யம் த்வயா கர்ம மயி ஸர்வம் நிவேசிதம்" என்பதனால் தேவரீருடைய திருநாபிகமலத்தில் என்னையுண்டாக்கி ப்ராஜாபத்ய மாகிற வ்யாபாரம் என்னிடத்தில் தேவரீரால் வைக்கப்பட்டதென்று ப்ரஹ்மாவின் வார்த்தையாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் நாராயணனே பரதத்வமென்பது ஸ்பஷ்டம்.

— மஹாபாரதாதிகளைக் கொண்டு நாராயண பாரம்ய நிருபணம் —

இனி பாரதத்துக்குப் பஞ்சரத்னமாகச் சொல்லப்பட்ட பகவத் கீதாதிகளில் நாராயணனே பரதத்வமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதுநிற்க, "ஆலோட்ய ஸர்வசாஸ்த்ராணி விசார்யச புந: புந:; இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயண: ஸதா" என்று சாந்திபர்வத்தில் ஸ்ரீ பிஷ்மராலே மோக்ஷதர்மத்தில் தர்மபுத்ரருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம் ஸர்வ சாஸ்திரங்களையும் நன்றாக ஆராய்ந்து அடிக்கடி யுக்திவிசாரமும் பண்ணி நாராயணனே த்யேயமான பரதத்வமென்று தெளியப்பட்டதென்கை.

இப்படியே ஸாத்விக புராணங்களிலும் தலையான விஷ்ணு புராணத்தில் மைத்ரேயர் "யன்மயம்ச ஜகத்ஸர்வம்" என்று தொடங்கி எவனிடத்தில் நின்றும் ஜகத்து உண்டாகிறதோ, எவனால் ரக்ஷிக்கப்படுகிறதோ, எவனிடத்தில் ப்ரளயகாலத்தில் லயமடைகிறதோ அவனைச் சொல்லவேணுமென்று ஸ்ரீ பராசர பகவானைப் பொதுவாகக் கேட்க புலஸ்தியருடைய வரப்ரஸாதத்தாலே தேவதா பாரமார்த்தியத்தை உள்ளபடி அறிந்தவராகச் சொல்லப்படுகிற ஸ்ரீ பராசர பகவான் "விஷ்ணோஸ் ஸகாசா துத்பூதம் ஜகத் தத்ரைவ ச ஸ்திதம் ஸ்திதி ஸம்யம கர்த்தாஸௌ ஜகதோஸ்ய ஜகச்சஸ:" என்று விஷ்ணுவே ஜகத்தினுடைய ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணுகிறவர் என்று அறுதியிட்டிருக்கிறார். இங்கே பொதுவாக ப்ரச்நம் பண்ணியிருக்கச்செய்தே கோல் விழுக்காடாகவே வ்யக்தி விசேஷத்தைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறபடியால் இதுவே உண்மையான

பரதத்வ விசார நிச்சயமாமென் றறியத்தக்கது. இப்படியன்றிக்கே கேட்போர் தமக்கு அபிமதமானதொரு வஸ்துவைப்பற்றிச் சிறப் பித்துக் கவிபாடித் தரச்சொல்லுவாரைப்போலே ஒரு வ்யக்தியைக் குறித்துச் சொல்லி அந்த வ்யக்திக்கு உத்கர்ஷத்தைச் சொல்லுகிற ஸம்ஹிதைகளைச் சொல்லவேணுமென்று கேட்க, அப்படியே அந்த வ்யக்திக்கு உத்கர்ஷத்தைச் சொல்லுகிற ராஜஸ தாமஸ புராணங்கள் ப்ரஸ்துத ப்ரஶம்ஸாபரமாகையால் பரதத்வ நிச்சய விஷயத்தில் ப்ரமாணமாகமாட்டாதென்பதும் கீழே சொல்லிய விஷயங்களை விரோதிக்கமாட்டாதென்பதும் அறியத்தக்கது.

இப்படியே பாஞ்சராத்ரத்திலும் நாராயணனே பரதத்வ மென்று சொல்லி அந்த நாராயணனுடைய ஆராதனார்த்தமாகவே ஆலய நிர்மாணம், ப்ரதிஷ்டை, பூஜாவிதி, உத்ஸவாதிகள் இவற்றை விசேஷித்துச் சொல்லியிருப்பதாலும் ஸ்பஷ்டமா யறியலாம்.

ஸ்ரீ பாஞ்சராத்ரம் மற்ற ஆகமங்கள்போலன்றியே முக்கிய மான ப்ரமாண சாஸ்திரமென்று முன்னமே நிரூபிக்கப்பட்டது அன்றியும் ஸூத்ரகாரரான வ்யாஸரே சாந்திபர்வத்தில் பாஞ்சராத்ர ப்ராமாண்யத்தை பஹுமுகமாக உபபாதித்திருக்கிறார்.

— மஹாகவிவாக் ப்ரதர்சனம் —

இனி மத்யஸ்தரான ஸம்ஸ்கிருத கவிகளில் சிறந்த காளிதாஸ மஹாகவியும், ரகுவம்சம் பதின்மூன்றும் ஸர்க்கத்தில் "தாம்தாம வஸ்தாம் ப்ரதிபத்யமாநம்" என்கிற சுலோகத்திலும் "நாபிப்ரரூடாம்பு ருஹாஸநேந" என்கிற சுலோகத்திலும் "விஷ்வக்ஸேநஸ் ஸ்வதநு மவிசத் ஸர்வலோக ப்ரதிஷ்டாம்" என்கிற சுலோகத்திலும் நாரா யணனே பரதத்வமென்று நிரூபித்திருக்கிறார். இந்த சுலோகங்கள் ராவணவதாநந்தரம் பிராட்டியைக் குறித்து சக்ரவர்த்தி திருமகன் சொல்லுகிற வார்த்தைகளாம். இவற்றின் அர்த்தம்—இந்த ஸமுத்ர மானது தன்னுடைய பெருமையாலே விஷ்ணுவினுடைய ரூபம் போலே இப்படிப்பட்டதென்றும் இவ்வளவுடையதென்றும் அறிய முடியாதபடி பலபடியாக எங்கும் வியாபித்திருக்கிறது என்பதும் ஸமுத்ரத்தில் தன்னுடைய நாபியிலுண்டான ப்ரஹ்மாவாலே ஸ்தோத்ரம் பண்ணப்படுமவராய்க் கொண்டு புருஷனை நாராயணன்

லோகங்களை ஸம்ஹரித்து சயனித்திருக்கிறார் என்பதும் விஷ்வக்ஸேநனை நாராயணன் ஸமஸ்த லோகங்களுக்கும் ஆதாரமான தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தில் அந்தர்ப்பவித்தான் என்பதுமாம்.

இனி மாகவியும் "ச்ரிய:பதி: ஸ்ரீமதி சாஸிதும் ஜகத் ஜகந்நிவாஸ:" என்பதால் ச்ரிய:பதியான நாராயணனே ஜகத்துக்கெல்லாம் ஆதாரனென்றும், ஜகத் ரக்ஷகனென்றும் சொல்லியிருக்கிறார். இன்னும் மூன்றாவது ஸர்க்கத்திலும் "ப்ரஜா இவாங்கா தரவிந்தநாபே:" என்பதால் பத்மநாபனான நாராயணனுடைய அங்கத்தில் நின்றும் ப்ரஜைகள் வெளிப்பட்டாற்போலே த்வாரகையில் நின்றும் ஸைன்யங்கள் வெளிப்பட்டதென்று திருஷ்டாந்தம் காட்டியிருக்கிறார்.

இனி நைஷத காவ்யத்தில் ஸ்ரீ ஹர்ஷகவியும் "அதிகத்ய ஜகத்யதீச்வராத்" என்கிற சுலோகத்தில் புருஷோத்தமனான நாராயணனே மோக்ஷப்ரதனென்றும் "ஶ்ரியஸ்ததாலிங்கனபூ:" என்கிற சுலோகத்தில் நாராயணன் ஸமஸ்தமான ஜீவர்களுக்கும் அந்தர்யாமியாயிருக்கிறானென்றும் சொல்லியிருக்கிறார்.

இப்படியே த்ராவிட கவிகளிலும் சிறப்புற்ற கம்பநாடர் விராதவதப்படலத்தில் "வேதங்களறைகின்ற" என்கிற பாட்டு முதல் "ஒப்பிறையும் பெறலரிய" என்கிற பாட்டு வரை சக்ரவர்த்தி திருமகனா யவதரித்த நாராயணனே பரதத்வமென்பதை வெளியிட்டார்.

அப்படியே கபந்தவதைப்படலத்திலும் "விண்ணினின்றவன்" என்ற பாட்டுத்தொடங்கி "மாயப்பிறவி மயல்நீக்கி" என்கிற பாட்டு வரையில் இந்த விஷயத்தை வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறார்; இப்படியே இன்னும் பலவிடங்களிலும் இந்த விஷயத்தை நிருபித்திருக்கிறார். அவைகளையும் கண்டுகொள்ளலாம்.

இன்னும் இதற்கநுகுணமான உபபத்திகளும் சில உண்டு. ஸர்வரும் அக்ஷராரம்ப காலத்தில் அஷ்டாக்ஷரத்தை முன்னிட்டுச் சொல்லுகையும், ஸந்தியாவந்தன முதலான நித்யகர்மாநுஷ்டானங்களில் அச்யுதாநந்த கோவிந்தாதி மந்த்ரங்களை யநுஸந்திப்பதும் கண்டுகொள்ளலாம். இப்படியாக நாராயணனே பரதத்வமென்பது நிருபிக்கப்பட்டது.

— லக்ஷ்மீ ஸ்வரூப சோதனம் —

அந்த நாராயணன் ச்ரிய:பதியென்பது "ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்கிற சுருதியால் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஸ்ரீ சப்தத்தாற் சொல்லப்பட்ட லக்ஷ்மியும் ஈசுவர தத்வத்தில் அந்தர்ப் பூதையென்றும், அவளுக்கு ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், உபாஸ்யத்வம், ஸர்வாந்தர்யாமித்வம் இவைகளுண்டென்றும் வடவாரியர்கள் நிரூபித்திருக்கிறார்கள். தென்னாசாரியர்கள் ஸம்ப்ர தாயத்தில் அவள் சேதனகோடியிலே அந்தர்பூதை யென்றும், ஈசுவரன் ஜகத்காரணமாமிடத்தில் இவள் ஸஹகாரிணியாயிருப்பவள் என்றும், மோக்ஷப்ரதாந விஷயத்தில் புருஷகாரபூதையாயிருப்பவள் என்றும் சொல்லுவர்கள். இதில் தென்னாசாரிய ஸம்ப்ரதாயஸ்தர் சொல்லும் விஷயங்களுக்கு உபபத்திகளும் இவையென்று அறிந்து கொள்ளும்படி இங்கு விவரிக்கப்படுகின்றன.

"காரணந்து த்யேய:" என்பது கொண்டு ஜகத் காரண வஸ்துவே த்யேயம் என்றும், அந்த ஜகத்காரண வஸ்துவும் ப்ரஹ்ம சப்தவாச்யமென்றும், அந்த ப்ரஹ்மசப்தவாச்யன் புருஷோத்தம னென்றும், அவனே மோக்ஷப்ரதனென்றும் சுருதிகளால் ஸ்ரீ பாஷ் யத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

ஆக ஜகத்காரணத்வம், ப்ரஹ்மசப்தவாச்யத்வம், மோக்ஷ ப்ரதத்வம் இவைகள் ஒன்றைவிட்டொன்று பிரியாதவைகளாம். அவற்றுள் ஜகத்காரணத்வம் உபாதாந நிமித்த ஸஹகாரி காரணத்வ ரூபமாக மூன்று வகையாயிருக்கும். இவற்றுள் ஈசுவரன் உபாதாந காரணமாயிருக்கையாவது ஸூக்ஷ்மாவஸ்தங்களான சேதநாசேத னங்களை சரீரமாகவுடைய ஸர்வேசுவரன் தானே ஸ்தூலாவஸ் தங்களான சேதநாசேதனங்களை சரீரமாக வுடையவனாயிருக்கை. ஆகையாலே கார்யரூபமாகவுமிருக்கும் உபாதனமாகிறான். புதிதாகத் தோன்றத்தக்கதாயும் தன்னைவிட்டுப் பிரியாததாயுமிருக்கிற தர்ம மாகிய அவஸ்தையை யுடைத்தாயிருப்பது உபாதானமாகையால் இந்த அவஸ்தைகள் சரீரங்களான சேதநாசேதனங்களின் வழியாக ஈசுவரனுக்கு வருவதால் உபாதாநத்வமும் கூடுகிறது.

இப்படியிருந்துள்ள உபாதாநத்வம் லக்ஷ்மிக்கு இல்லை; என் பதை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "ப்ரளயஸமய ஸூப்தம்" என்கிற சுலோகத்தில் வெளியிட்டிருக்கிறார். அந்த சுலோகம்—

"ப்ரளயஸமய ஸுப்தம் ஸ்வம் சரீரைகதேசம்
வரத சிதசிதாக்யம் ஸ்வேச்சயா விஸ்த்ருணோ:
கசிதமிவ கலாபம் சித்ரமாதத்ய தூங்வ:
அநுபிகிரி சிகேவ க்ரீடஸி ஸ்ரீஸமக்ஷம் ..." என்பதாம்.

(இதன் அர்த்தம்) ப்ரளய காலத்தில் தன்னுடைய சரீரத்தின் ஏகதேசமா யுள்ளொடுங்கியிருந்த சேதநாசேதனங்களை ஸ்வேச்சையாலே விஸ்தரித்துக்கொண்டு ஆண்மயிலானது தன்னுளொடுங்கிய தோகையை விரித்துக்கொண்டு பெண்மயிலின் முன்னே விளையாடுவதுபோல லக்ஷ்மியினுடைய ஸந்நிதியில் விளையாடுகிறீர் என்பதாம்.

இதனால் ஈசுவரனுக்கே சேதநாசேதனங்கள் சரீரமென்றும் லக்ஷ்மிக்கு சேதநாசேதனங்கள் சரீரமன்றென்றும் த்ருஷ்டாந்த ஸ்வாரஸ்யத்தால் வ்யக்தமாயிற்று. ஆண்மயிலுக்கே தோகையிருப்பதும் பெண்மயிலுக்குத் தோகையில்லாமையும் ப்ரத்யக்ஷமா யறியலாம்.

நிமித்த காரணத்வமும் "யஸ்யா வீக்ஷ்யமுகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்" என்கிற ஆழ்வான் ஸ்ரீஸூக்தியிலும் "ச்ரியை ஸமஸ்த சிதசித் விதாநவ்யஸநம் ஹரே:, அங்கீகாரிபிராலோகை: ஸார்த்தயந்த்யை க்ருதோஞ்ஜலி:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியிலும் இவளுடைய இங்கித பராதீனனாய்க்கொண்டு ஈசுவரனே ஜகத் ஸ்ருஷ்டியைப் பண்ணுகிறானென்று சொல்லப்படுவதால் இவளுக் கில்லையென்றேற்படுகிறது. மேலும் அஜ்ஞாதநிக்ரஹையாகையாலே நிக்ரஹகார்யமாகிய நாரகிய சரீரசிருஷ்டியில் கர்த்ருத்வம் கூடாததாயிற்று. இந்த விஷயத்தை நியாயஸித்தாஞ்ஜன வியாக்யானத்தில் திருப்புட்குழி ஸ்வாமி வெளியிட்டிருக்கிறார். அப்படியே மோக்ஷப்ரதத்வமும் சேதனன் பண்ணின அபராதங்களாலுண்டான நிக்ரஹத்தை அவனுடைய உபாஸநத்தால் போக்கி மோக்ஷத்தைக் கொடுக்கை யாகையாலே அந்த அபராதத்தாலுண்டான நிக்ரஹம் லக்ஷ்மிக்குக் கீழ்ச்சொன்ன ஹேதுவாலே ஸம்பவிக்கிறதில்லை.

மேலும் சேதனன் பண்ணுகிற உபாயாநுஷ்டானம் நிக்ரஹ நிவ்ருத்திக்கு மட்டும் ஸாதனமாவதல்லது ஸ்வாபாவிக ஜ்ஞான விகாஸரூபமான மோக்ஷத்துக்கு ஸாதனமல்லாமையாலே உபாஸ்யத்வமும் ஸம்பவியாது. இதற்கு அநுபந்தமுள்ள ப்ரஹ்மசப்த வாச்யத்வமும் 'ப்ரஹ்மசப்தேந புருஷோத்தமோபிதீயதே" என்கிற

ஸ்ரீபாஷ்ய ஸூக்தியால் புருஷோத்தமனான நாராயணனுக்கே யுள்ளதாவதன்றி நாரீணுமுத்தமையான லக்ஷ்மிக்குக் கூடாதென்பது ஸ்பஷ்டமாம்.

இந்த விஷயத்தை தத்வடீகையில் "ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே" என்பதன் வ்யாக்யானவஸரத்தில் "ப்ரஹ்மணீதி லக்ஷ்ம்யநிர்தேச:" என்கிற வாக்கியத்தால் ப்ரஹ்மசப்த வாச்யத்வம் லக்ஷ்மிக்கு இல்லை யென்பதை தேசிகன் ஸாதித்திருக்கிறார். இப்படியே ஸ்ரீதத்வ ஸித்தாஞ்ஜனத்திலும், ந்யாயஸித்தாஞ்ஜன வ்யாக்யானத்திலும் வ்யக்தமாகக் காணலாம்.

இனி ஸர்வாந்தர்யாமித்வமும் "யதா ஸர்வகதோ விஷ்ணு: ததைவேயம் த்விஜோத்தம" என்கிற ஸ்ரீ விஷ்ணுபுராண சுலோக வ்யாக்யானவஸரத்தில் எங்களாழ்வான் "இயம்ச சக்திவசாத்" என்றும், ஸ்வரூபதோ வ்யாப்தியில்லை யென்றும் ஸாதித்திருப்பதால் ஸ்வரூபத்தாலே ஸம்பவிக்கமாட்டாதென்பதாம்.

மேலும் ஒருவனே ஜகத்துக்குக் காரணம்; அவன் நிஸ்ஸமாப் யதிகன்; என்று சுருதி சொல்லியிருப்பதால் லக்ஷ்மிக்கு பரத்வம் சொல்லுகிற பக்ஷத்தில் ஈசுவரனுக்கு ஏகத்வம் ஸம்பவியாது; ஈசுவர த்வித்வம் ஏற்படும். ஈசுவரத்வித்வம் அநுபபந்நமாகையால் இவளும் சேதனகோடியில் சேர்ந்தவளாம்.

இவளுக்கு புருஷகாரத்வம் அஸாதாரண தர்மம். புருஷ காரத்வமாவது—ஸர்வேசுவரன் சேதனனுடைய அபராதத்தால் சீற்றம்கொண்டு சேதனனை நிக்ரஹிக்கும் காலத்தில் இவள் தன்னு டைய வால்லப்யத்தாலே நிக்ரஹத்தைப் போக்கி அவன் திருவுள்ள முகந்து சேதனனை யங்கீகரித்தருளும்படி பண்ணுகை. ஈசுவரனுக்கு சேதனனுடைய அபராத தர்சனத்தாலே அபிபூதங்களான க்ஷமா வாத்ஸல்யங்களை உத்புத்தமாக்குகை புருஷகார கிருத்யம். இப்படி யுள்ள புருஷகாரத்வம் ப்ரபத்தி வித்யையில் மட்டும் உண்டு. பக்தி ஸ்தலத்தில் அந்த நிக்ரஹ நிவ்ருத்திக்கு பக்தியே ஸாதனமாகையால் அங்கு புருஷகாராபேக்ஷையில்லை. ப்ராப்தி தசையில் இருவருமான சேர்த்தியில் கைங்கர்யம் ரஸிக்குமாகையால் கைங்கர்ய ப்ரதிஸம்பந் தித்வரூபமான சேஷித்வம் இருவரிடத்திலும் வ்யாப்தமாயிருக்கும். இவ்விஷயத்தை "உபயாதிஷ்டானஞ்சைகம் சேஷித்வம்" என்கிற பூர்வாசார்யர்கள் வாக்கியத்தாற் கண்டுகொள்வது.

இப்படியன்றிக்கே ஈசுவரத்வம், காரணத்வம் முதலானவைகள் உபயவ்யாப்தங்கள் என்று சொல்லும்பக்ஷத்தில் ஈசுவரனுக்கு தனித்து ஈசுவரத்வாதிகளில்லே. அப்படியே லக்ஷ்மிக்கும் இல்லே. "த்வைராஜ்யஸ்ய ஈச்வராபிமதத்வாந் ந தோஷ:" என்கிற கீதா பாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகா வாக்கியத்துக்கு வ்யாப்தமென்று சொல்லுவது விருத்தம்.

இப்படி உபாயாநுஷ்டான தசையில் புருஷகாரபூதையாயும் ப்ராப்தி தசையில் ப்ராப்யையாயும் இருக்கும் என்கிற விஷயத்தை பட்டர் அஷ்டசுலோகியில்,

"ஈசாநாம் ஜகதாமதீச தயிதாம் நித்யாநபாயாம் ச்ரியம்
ஸம்ச்ரித்யா ச்ரயணோசிதா கிலகுணஸ்யாங்க்ரீ ஹரே ராச்ரயே
இஷ்டோபாயதயா ச்ரியாசஸஹிதா யாத்மேச்வரா யார்த்தயே
கர்த்தும் தாஸ்ய மசேஷ மப்ரதிஹதம் நித்யந்த்வஹம் நிர்மம:"

என்கிற சுலோகத்தால் ஸர்வேசுவரனுக்கு தயிதையாயும், அத்தால் வந்த ஈசுவரத்வத்தையுடையவளாயுமிருக்கிற லக்ஷ்மியை புருஷகாரமாக ஆச்ரயித்து ஈசுவரனுடைய திருவடிகளே உபாயமாகப் பற்றுகிறேன். அப்படியிருந்துள்ள லக்ஷ்மியோடே கூடின ஸர்வேசுவரன் விஷயத்தில் ஸமஸ்த கைங்கர்யங்களும் செய்யக்கடவேன் என்று ஸாதித்தருளினர்.

த்வயத்தின் பூர்வகண்டத்தில் "ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம்" என்னுமிடத்தில் சரண சப்தார்த்தம் விசேஷணமான திருவடியில் அந்வயிப்பதுபோல் விசேஷணமாயுள்ள லக்ஷ்மியிடத்திலும் அந்வயிக்கும் என்பது அபாதிதமாயிருந்தால் பொருந்தும், கீழே சொல்லியபடி உபாயத்வாதிகள் பாதிதங்களாகையால் இங்கே பொருந்தாது. அது எப்படியென்றால், குடம் ப்ரமேயம் என்னுமிடத்தில் விசேஷணமான ப்ரமேயத்வம் கடத்துக்கு விசேஷணமான கடத்வத்திலும் அந்வயிப்பதுபோல குடம் த்ரவ்யம் என்னுமிடத்தில் விசேஷணமான த்ரவ்யத்வம் குடத்துக்கு விசேஷணமான கடத்வத்தில் எப்படி அந்வயிக்கமாட்டாதோ அப்படியே இங்கும் அந்வயிக்கமாட்டாதிருக்கிறது.

ஈசுவரனுக்கு திவ்யமங்கள விக்ரஹங்களும் குணங்களும் விசேஷணமா யிருந்தபோதிலும் உபாயமாகாமல் ஆச்ரித கார்யா

பாதகங்களாயும் ஆச்ரயண ஸௌகர்யா பாதகங்களாயும் ஆச்ரயண ருசி ஜனகங்களாயும் ஏற்படுகின்றதுபோல, பிராட்டியும் தனக்கு அஸாதாரண தர்மமாக ஏற்பட்ட புருஷகாரத்வத்தை அடைந்தவளாய்க்கொண்டு விசேஷணமாக அந்வயிக்கலாம். இப்படியாக பிராட்டி உபாயமாகாமல் புருஷகாரமாகிறபடியால் அநந்யோபாயத்வத்துக்கு விரோதம் வாராது. இப்படியிருக்கும் பக்ஷத்தில் ப்ராப்தி தசையில் பிராட்டி ப்ராப்யையாயிருப்பள் என்று சொல்லுவதால் அநந்யோபேயத்வத்துக்கு விரோதம் வாராதோ வென்னில், ப்ராப்திக்கு உத்தேச்யமாயிருக்கையாகிற உபேயத்வம் ஈசுவரனுக்கே யுள்ளது; பிராட்டிக்கு இல்லை. ஆதலால் அநந்யோபேயத்வத்துக்கு விரோதமில்லை.

ஆனல் த்வயத்தில் உத்தரகண்டத்தில் சொல்லுகிற ப்ராப்யத்வம் இவன் பண்ணுகிற கிங்கர வ்ருத்திக்கு உத்தேச்யமாயிருக்கையாகையாலே அப்படியுள்ள ப்ராப்யத்வம் பிராட்டிக்கு உண்டு. எப்படியென்றால், சித்ரகூடத்தில் "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா" என்கிற சுலோகத்தின்படி இருவருமான சேர்த்தியிலே செய்கிற கிங்கர வ்ருத்தி ரஸிப்பதுபோலே பிராட்டியை விட்டுப் பிரிந்து பம்பா பரிஸரத்தில் செய்கிற கிங்கர வ்ருத்தி ரஸிக்கமாட்டாதன்றே! கிங்கர வ்ருத்திக்கு உத்தேச்யமா யிருக்கையாகிற ப்ராப்யத்வம் பிராட்டிக்கு உபபந்நமே. இந்த விஷயம் லோகத்திலும் கண்டு கொள்ளலாம்.

ஒரு பர்த்ரு பார்யா விஷயத்தில் கிங்கர வ்ருத்தி செய்கிற அடிமையாளனுக்கு ப்ரதானன பர்த்தாவா யிருந்த போதிலும் கிங்கர வ்ருத்தி செய்வது இருவருக்குமே ஆவதுபோலே இதுவும் உபபந்நம். இந்த விஷயத்தை லோகதேசிகன் முமுக்ஷுப்படியில், "ஒருவன் ஆவண வோலை யெழுதும்போது க்ருஹிணிக்கென்றன்றே எழுதுவது; ஆகிலும் பணிசெய்வது க்ருஹிணிக்கிறே" என்றருளிச்செய்திருக்கிறார்.

இப்படியிருப்பதால் ஸ்ரீ பாகவதத்தில் நாலாவது ஸ்கந்தத்தில் ப்ருதுசக்ரவர்த்தி "அப்யாவயோரேக பதி:" என்கிற சுலோகத்தில் தன்னேடுகூட பிராட்டியையும் சேர்த்து இருவருக்கும் ஈசுவரனே பதி என்று சொல்லியிருக்கிறார். இந்த விஷயங்களை அநுஸரித்து பத்தாவது ஸ்கந்தத்தில் 10-60-34 ருக்மிணிக்கும் கிருஷ்ணனுக்கும்

நடந்த ஈர்மோக்ஷஸமயத்தில் "க்வாஹம் குணப்ரக்ருதி ரஜ்ஞு க்ருஹீத பாதா" என்ற ருக்மிணீ வாக்கியமான சுலோகத்துக்கு வ்யாக்யானம் பண்ணின வீரராகவாசார்யர், ஜ்ஞானமில்லாதவர்கள் என்னை ஸ்வதந்தரையாகவும் உபாயமாகவும் ஆச்ரயிக்கிறார்கள். ஜ்ஞானமுள்ளவர்கள் புருஷகாரமாகவே பற்றுகிறார்கள் என்று ஸாதித்திருக்கிறார். இவர் வடவாரியர்களில் ஒருவரென்பது வ்யக்தம்.

ஆனால் லக்ஷ்மீதந்த்ரம் முதலான ஸம்ஹிதைகளில் பிராட்டியை ஜகத்காரணமாகவும் மோக்ஷப்ரதையாகவும் சொல்லுகிற விஷயங்கள் "ஏகாத்விச்சாத்மிகா சக்திஸ் ஸர்வலோக குடும்பினீ" என்கிற சுலோகத்தின்படி ஈசுவரனுடைய இச்சைக்கு அபிமானி தேவதையாயிருக்கையாலும், ஈசுவரனோடு தனக்குண்டான ஐகரஸ்யத்தாலும் உபபந்நம். அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதையில் ஈசுவரனுடைய ஸங்கல்பத்துக்கு அபிமானி தேவதையாகச் சொல்லப்பட்ட ஸுதர்சனாழ்வானுக்கு ஜகத்காரணத்வம் முதலானவைகள் போலே இதுவும் கூடும்.

இப்படியிருக்க, தேசிகன் பிராட்டிக்கு உபாயத்வம், மோக்ஷப்ரதத்வம் முதலியவற்றை ரஹஸ்யத்ரயஸாரம் முதலான க்ரந்தங்களில் அருளிச்செய்திருப்பது கூடும்படி எங்ஙனேயென்னில்? சது; சுலோகி வியாக்யானத்தில் "பஞ்சஸ்வேதேஷு பக்ஷேஷு கச்சிதேக: ப்ரமாணவாந்" என்று கீழ் நிருபித்த பக்ஷத்தையும் அங்கீகரித்தருளியிருப்பதால் உபபந்நமாம். அஹோபில மடாதிபதியான ஒரு ஸ்வாமி 'புருஷகார மீமாம்ஸா' என்கிற க்ரந்தத்தில் தேசிகன் திருவுள்ளம் பிராட்டிக்கு புருஷகாரத்வமேயுள்ளது; உபாயத்வமில்லை என்பது தான் உண்மையாயுள்ளதென்பதை தேசிகனுடைய ஸூக்திகளைக் கொண்டே நிருபித்திருக்கிறார். ஆனாலும் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஸ்பஷ்டமாகப் பிராட்டிக்கு உபாயத்வம் முதலானவைகளுண்டு என்று உபபாதித்திருப்பதற்கு மூலம் இப்படியும் ஒரு நிர்வாஹமிருக்கலாம் என்கிற திருவுள்ளமே.

தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் ஏற்பட்ட இந்த விஷயத்துக்கு உபபத்தியை மட்டும் நிருபித்ததேயொழிய, மற்ற ஸம்ப்ரதாய விஷயத்தில் தோஷோத்காடனம் பண்ணவரவில்லை. ஸர்வஜ்ஞர்களான ஆசார்யர்களுடைய திருவுள்ளத்தில் அநேக நிர்வாஹ பேதங்கள் தோற்றியிருக்கலாம். கிஞ்சித்ஜ்ஞனான அடியேன் இந்த விஷயத்தை ப்ரஸ்தாவிக்க அர்ஹனல்லன். இந்த ஸம்ப்ரதாயத்தில்

ஏற்பட்ட அர்த்தங்கள் ஸமீசீனங்களல்லவென்று சிலர் நினைக்கவுங் கூடும். அந்த விஷயத்தை மாற்றவேண்டியதற்காகவே இவ்வளவு நிருபிக்கும்படி நேர்ந்தது.

இனி அந்த ஸம்ப்ரதாயத்திலும் இந்த விஷயத்தில் சில உபபத்திகள் அங்வாருஹ்ய நிருபிக்கப்படும். அதாவது சுருதியில் ஸ்ரீ ஸூக்தத்தில் மோக்ஷப்ரதத்வம் லக்ஷ்மிக்கு உண்டென்று சொல்லப் பட்டிருக்கிறது. திருவாய்மொழியில் "வேரிமாருத பூமேலிருப்பாள் வினைதீர்க்குமே", "பண்டைநாளாலே நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கொண்டு" என்கிற ஸூக்திகளால் பிராட்டிக்கு மோக்ஷ ப்ரதத்வமுண்டென்று தெரிகிறது. ஈசுவர த்வித்வதோஷ பரிஹாரமும் ஈசுவரனுக்குத் தான் பரதந்த்ரையா யிருந்துகொண்டே ஈசுவர கிருத்யத்தை நிர்வஹிப்பதால் ஏற்படுகிறது. ஈசுவரனையே சொல்லுகிற ப்ரகரணங்களிலும் இவள் ஈசுவரனுக்கு ஸ்வரூப நிருபகையாயிருப்பதால் இவளையும் சொல்லியதாகக் கொள்ளலாம். காரணத்வம் உபாயத்வம் முதலானவைகள் இருவரிடத்திலும் பர்யாப்தங்களென்று அவர்களில் சில ஆசார்யருடைய அபிப்பிராயம். பிராட்டிக்கு ப்ரஹ்ம சப்தவாச்யத்வமுண்டென்பதும் சிலரபிப்பிராயம். அங்ஙனன்றிக்கே காரணத்வம் முதலானவைகள் விசிஷ்டநிஷ்டமென்பர். விசிஷ்டமாவது விசேஷண விசேஷ்யங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகாது ஆகையால் விசேஷணமான பிராட்டிக்கும் காரணத்வம் முதலானவை உண்டென்பது சிலர் அபிப்பிராயம். காரணத்வம் ஸ்வரூப யோக்யதா ரூபமாயும் பலோபதாந ரூபமாயுமிருக்கும். அல்லது "பதிமாத்ர கோசரம்" என்கிற தேசிகன் ஸூக்திப்படி பிராட்டிக்கு காரணத்வமில்லையென்பது சிலர் அபிப்பிராயம். யதாஸம்ப்ரதாயம் கண்டுகொள்வது. இன்னும் இந்த விஷயத்தில் நிருபிக்க வேண்டிய விஷயங்கள் பலவுண்டு: அவற்றை யெல்லாம் விஸ்தர பயத்தால் நிறுத்திவிட்டேன். இனி ஈசுவர குணங்கள் நிருபிக்கப்படும்.

— பகவத்குண சோதனம் —

ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாகையாவது :— ஸமஸ்தங்களாயும், கல்யாணங்களாயுமுள்ள குணங்களையுடைய ஸ்வரூபத்தையுடையவனாயிருக்கை; கல்யாணங்களாகையாவது :– அநுகூலங்களாயிருக்கை. இப்படியுள்ள குணங்கள் ஸ்வரூப நிருபகங்களென்றும் நிருபித ஸ்வரூப விசேஷணங்களென்றும் இரண்டுவகையாயிருக்கும்.

அவற்றுள் ஸ்வரூப நிரூபகமாவது :— தனக்கு ஆசிரயமான தர்மி ஜ்ஞானத்துக்கு விஷயமாம்போது தானும் தோன்றிக்கொண்டே அந்த தர்மியிடத்துள்ள இதர வ்யாவ்ருத்தியைத் தெரிவிப்பதாயிருக்கும்; அது எதுபோலவென்னில்? குடம் ஜ்ஞானத்துக்கு விஷயமாம்போதெல்லாம் தானும் விஷயமாகி அக்குடத்திலுள்ள இதர வ்யாவ்ருத்தியை (பிறிதின் வேறுபாட்டை)த் தெரிவிப்பதாயுள்ள குவிந்த கழுத்துடைமை முதலான உறுப்பமைதிபோலே யுள்ளதாம்.

இப்படிப்பட்ட ஸ்வரூப நிரூபக குணங்களால் பிறிதின் வேறென்று தெரிவிக்கப்பட்டிருந்துள்ள வஸ்துவைப்பற்றியிருக்கிற ஸாதாரண குணங்கள் நிரூபித ஸ்வரூப விசேஷணங்களாம். அவை குவிந்த கழுத்துடைமையான உறுப்பமைதியாலே தெரிவிக்கப்பட்ட குடத்தைப்பற்றியிருக்கிற ரூப, பரிமாணாதி ஸாதாரண குணங்கள் போலே தர்மியை ஆசிரயித்திருக்கும் குணங்களாம்.

இவற்றுள், ஈசுவர ஸ்வரூப நிரூபகங்கள் :— ஜ்ஞானமும், ஆனந்தமும், அமலத்வமும், அநந்தத்வமும், உபாயத்வமும், உபேயத்வமும் முதலானவைகளாம். இப்படியே பிராட்டியும் ஸ்வரூப நிரூபகபூதையாயிருப்பள் ; க்ருபா, வாத்ஸல்ய, ஸௌசீல்ய, ஸௌலப்யாதிகள் நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள்.

இவற்றுள் "தவாநந்த குணஸ்யாபி ஷடேதே ப்ரதமேகுணா:" என்றும், "ப்ரக்ருஷ்டம் விஜ்ஞானம்" என்று தொடங்கி "குணாநாம் நிஸ்ஸீம்நாம் கணந விகுணாநாம் ப்ரஸவபூ:" என்றும், "நிர்லேப மங்கள குணௌக துகா: ஷடேதா:" என்றும் சொல்லுகிறபடியே மற்ற குணங்களுக்கு காரணங்களாயுள்ள ஜ்ஞான, சக்தி, பல, ஐசுவர்ய வீர்ய தேஜஸ்ஸுக்களாகிற ஆறு குணங்கள் ப்ரதானங்களாம்.

அவற்றுள் ஜ்ஞானமாவது :— ஏககாலத்தில் எல்லா வஸ்துக்களையும் இந்திரிய நியமமில்லாமல் ஸாக்ஷாத்கரிக்கைக்கு உறுப்பாயிருக்கும் ஸ்வயம்ப்ரகாசமான தர்மபூத ஜ்ஞானமாம்.

சக்தியாவது :— ஸமஸ்த காரியங்களுக்கும் தானே உபாதான காரணமாயிருக்கை. பலமாவது :— ஜகத்ஸ்ருஷ்டி முதலியன பண்ணும்போதெல்லாம் சிரமமில்லாமை.

ஐசுவர்யமாவது :— தனக்கு நியந்தா ஒருவருமின்றித் தானே ஸ்வதந்த்ரனுய்க் கொண்டு சேதனருடைய கர்மாநுகுணமாக ஜகத் ஸ்ருஷ்டியாதிகளைச் செய்கை. வீர்யமாவது :— தான் உபாதான காரணமாமிடத்தில் லோகத்தில் காணப்படுகிற ம்ருத்பிண்டாதிகள் போல் விகரிக்கையன்றிக்கே கார்யங்களுக்கு விகாரங்களை யுண்டு பண்ணுகை. அதாவது, கஸ்தூரிவாஸனையானது தான் விகரிக்காமல் தன்னோடு ஸம்பந்தித்த வஸ்துக்களுக்கு விகாரத்தை யுண்டு பண்ணுவது போலும் என்று சொல்லுவர்கள். (அல்லது, எள்ளுத் துவையலாகும்போது அதிலுள்ள எண்ணெய் தான் விகரியாமலே எள்ளுள்ளிருந்துகொண்டு எள்ளைத் துவையலாக விகரிப்பிப்பது போலும்என்றும் சொல்லலாம்.)

தேஜஸ்ஸாவது :— ஸ்ருஷ்டியாதி வ்யாபாரங்களில் ஸ்வதந்த்ரங்களாயுள்ள வேறு ஸஹகாரிகளை அபேக்ஷியாதிருக்கை; இதற்கு ப்ரமாணங்கள் ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும் பட்டர் அருளிச்செய்த ஸ்ரீ ரங்கராஜஸ்தவத்திலும் காணலாம். விஸ்தரபயத்தாலே இவ்விடத்தில் நிருபிக்கப்படவில்லை.

இனி, இவைகளில் ஜ்ஞானத்தினுடைய அவஸ்தா விசேஷங்களான க்ருபை முதலிய குணங்களின் ஸ்வரூபம் நிருபிக்கப்படும். க்ருபையாவது—ஸ்ரீபாஷ்யத்திலும் சுருதப்ரகாசிகையிலும் நிருபிக்கப்பட்டிருக்கிறபடி ஸ்வார்த்த நிரபேக்ஷையான பரது:க்காஸஹிஷ்ணுதையாம் : அதாவது—தனக்கொரு பிரயோஜனத்தை யபேக்ஷியாமல் ப்ராதிகூல்யமில்லாதவர்களுடைய துக்கத்தைப் பார்த்து ஸஹியாதிருக்கை ·ஸஹியாதிருக்கையாவது—அவர்களுடைய துக்கத்தை ப்ரதிகூலமாக நினைத்திருக்கை. நம்முடைய ஸித்தாந்தத்தில் ப்ரதிகூலத்வஜ்ஞானமே துக்கபதார்த்தமாகையால் பரது:க்க து:க்கித்வமே க்ருபையென்று ஏற்படுகிறது.

இதற்கு ப்ரமாணங்கள் :— ஸ்ரீ ராமாயணத்தின் அயோத்யா காண்டத்தில் பெருமாளுடைய குணங்களைச் சொல்லுகிற ப்ரகரணத்தில் "வ்யஸநேஷு மநுஷ்யாணும் ப்ருசம்பவதி து:க்கித:" என்பதனுல் மனுஷ்யர்களுக்கு து:க்கங்கள் ஸம்பவிப்பதால் தான் மிகவும் து:க்கத்தை யடைகிருன் என்றும், கிஷ்கிந்தாகாண்டத்தில் வாலிவதாநந்தரம் ஸுக்ரீவருடைய வ்யஸநத்தைப் பார்த்து "ஸஞ்ஜாத

பாஷ்ய: பரவிரஹந்தா ராமோ முஹூர்த்தம் விமநா பபூவ" என்ப தனுல் சத்துருக்களின் வீரதையை அழிக்கவல்ல ராமனும் கண்களி னின்றும் சோகபாஷ்பங்களை வடித்துக்கொண்டு வ்யஸனத்தால் ஒரு முஹூர்த்தகாலம் ப்ரஜ்ஞையற்றிருந்தான் என்றும். ஸுந்தர காண்டத்தில் "ஸ்த்ரீ ப்ரநஷ்டேதி காருண்யாத்" என்கிற சுலோ கத்தில் காருண்யத்தாலே தாபத்தை அடைகிறுன் என்றும் சொல்லப் பட்டன. பாலகாண்டத்திலும் கிரௌஞ்ச மிதுனத்தின் புமானை பக்ஷி வேடனுல் அடிபட்டதைப் பார்த்து வால்மீகிக்கு உண்டான துக்கமானது "ருஷே: தர்மாத்மந ஸ்தஸ்ய காருண்யம் ஸமபத்யத" என்று காருண்யமென்று சொல்லப்பட்டது. சுருதியிலும் ப்ரளய காலத்தில் ஜகத்து உபஸம்ஹ்ருதமாய் ஒடுங்கிய அளவில் தான் ஏகாகியாயிருப்பதால் ரதியில்லாமலிருக்கிறுன் என்பதுபற்றி "ஸ ஏகாகீ நரமேத" என்று சொல்லப்பட்டிருக்கிறது; அதாவது– அப்பொழுதில் அவனுக்கிருந்த கிருபையைச் சொல்லியபடியாயிற்று. மக்கண ஸம்ஹிதையில் "த்ரஷ்டும் ந ஸஹதே தேவி க்லிஷ்டாந் ஸ்வாந் பரிசாரகாந்" என்பதனுல் கிலேசத்தையடைந்த தன்னுடைய பரிசாரகர்களை பிராட்டி பார்க்க ஸஹிக்கமாட்டாள்; என்று சொல் லப்பட்டிருக்கிறது. அந்த ஸம்ஹிதையிலேயே "கருணுவிலமுகீ" என்பதால் கிருபையால் கண்ணீர்களுடனிருக்கிறுள் என்று சொல் லப்படுகிறது. அதுவுமன்றி "பகவத்குணதர்ப்பண"த்தில் "கரணம் காரணம் கர்த்தா விகர்த்தா" என்கிற சுலோக வ்யாக்யானவஸரத்தில் "கதம் அந்யதா பரது:க து:கித்வாதயோ குணு:ஸ்யு:" என்பதால் பரார்த்தங்களான சோகஹர்ஷங்கள் குணமாகலாமென்று சொல்லப் பட்டிருக்கிறது. நம்மாழ்வாரும் "ஆவாவென்று அருள்செய்து அடியேனெடுமானுன்" என்பதால் ஐயோவென்று கிருபை செய் தருளினுன் என அருளிச்செய்தார். திருமங்கையாழ்வாரும் "ஆவா வென்றடியேற் கிறையிரங்காய்" என்றருளிச் செய்திருக்கிறுர்.

ஆதலால் அவதாரங்களில் உண்டான யுத்தத்தில் சொல்லப் படுகிற சோகஹர்ஷங்கள் அபிநயமென்று சொல்லுவதுபோல் இதுவும் அபிநயமென்று சொல்லுவது கீழ்க்குறித்த ப்ரமாணங் களுக்குச் சேராது ஹேயப்ரத்யநீகனுயும் ஆனந்தமயனுயுமிருக்கிற ஸர்வேசுவரனுக்கு ஹேயமான து:க்கம் கூடாதென்பது ஸ்வார்த்த மாயும், கர்மக்ருதமாயும் உள்ளவற்றைப் பற்றியதாம். அப்படிக் கில்லாமல் இதையும் அபிநயமாகச் சொல்லும்பக்ஷத்தில் வஞ்சனை

கார்யமான அபிநயமும் லோகரீதியாய் ஹேயமாயிருப்பதால் அதுவும் கூடாது.

க்ருபை து:க்காபிநயமாத்ரமாயிருக்கும்பக்ஷத்தில் இப்படியிருந்துள்ள க்ருபை ஆச்ரயஜ்ஞேபயோகியா யிருக்கும்படி யெங்ஙனே கூடும்? ஆறுல் தேசிகன் "பர து:க்க நிராசிகீர்ஷா தயா" என்று அருளிச்செய்திருப்பது சக்தனுயிருக்குமவனுக்கு சக்யமான து:க்கநிராகரணத்தில் கீழ்நிருபிக்கப்பட்ட க்ருபையின் கார்யமான இச்சை, தானே யுண்டாகுமாகையாலே கார்யத்தை காரணமாக உபசரித்தருளிச் செய்தபடி. இப்படிக்கில்லாமல் பர து:க்க நிராசிகீர்ஷையே தயையென்று சொல்லும்பக்ஷத்தில் அந்த நிராசிகீர்ஷை அபிநிவேச கார்யமாகையால் அதுவும் ஹேயதயா அநுப்பந்நமாம். இத்தை அநுஸரித்தே ஆளவந்தார் "க்ஷணேபி தே யத்விரஹோதி துஸ்ஸஹ:" என்று அருளிச்செய்தார். பட்டரும் "தயாங்யேஷாம் து:க்கா ப்ரஸஹநம் அநங்யோஸி ஸகலே:" என்று அருளிச்செய்தார்.

— க்ருபையின் ஸஹேதுகத்வ நிர்ஹேதுகத்வ நிருபணம் —

இனி, இப்படியிருந்துள்ள க்ருபையினுடைய நிர்ஹேதுகத்வ ஸஹேதுகத்வங்கள் நிருபிக்கப்படுவனவாம்.

"அசிதவிசேஷிதாந்" இத்யாதி சுலோகத்தின்படி ஜகத் ஸ்ருஷ்டியில் ஏககாலத்தில் ஜீவர்களுக்குக் கரணகளேபர ப்ரதானம் பண்ணுகைக்கடியான கிருபை நிர்ஹேதுகை. "நாஸௌ புருஷகாரேண" இத்யாதி சுலோகத்தின்படி நிரங்குச ஸ்வாதந்த்ரியத்தாலே ஆழ்வார்போல்வாரிடத்தில் பண்ணும் கிருபையும் நிர்ஹேதுகை.

அப்படியன்றிக்கே ஈசுவரனிடத்தில் பண்ணும் ப்ரபத்தி அதிகாரி விசேஷணமாயிருப்பதாலும், அன்றிக்கே ஈசுவரனுடைய உபாயாந்தர ஸ்தான நிவேசத்துக்கு ஹேதுவாயிருப்பதாலும், ஈசுவரனே உபாயமாகையாலும், புருஷகாரபூதையான பிராட்டி ஸ்வாதந்த்ரியாபி பூதமான க்ருபாகுணத்துக்கு உத்தம்பனம் பண்ணுகையாலும் வ்யாஜஸாபேக்ஷமாயிருக்கும். பக்தி ஸ்தலத்திலும் 'ப்ராதிகூல்ய நிவ்ருத்தி மாத்ரேண அநந்தாபராதாநாத்ருத்ய ஸ்வப்ராப்தி ஹேதுஷு ருசிம் ஜநயதி" என்கிற ஸ்ரீபாஷ்யஸூக்தியின்படி ப்ராதிகூல்ய நிவ்ருத்தி ஸூசகமான உபாஸநாரம்பத்தாலே ப்ரீதனுன ஸர்வேசுவரனே "ததாமி புத்தியோகம் தம்" என்கிறபடியே உபாய

நிஷ்பத்தியைப் பண்ணிக்கொடுப்பதால் அங்கும் ப்ராதிகூல்ய நிவ்ருத்திரூப வ்யாஜஸாபேக்ஷமாயிருக்கும். குமார வேதாந்தாசார்யரும் "ஸ்வரூப ஸம்ஸ்தவௌ யஸ்யா: நிர்ஹேதுக ஸஹேதுகௌ" என்று அருளிச்செய்தார். இதன் அர்த்தம் ஸாமாந்யமாய் எல்லோருக்கும் பலப்ரதானத்தில் உபயுக்தையான க்ருபையினுடைய ஸ்வரூபம் நிர்ஹேதுகம்; அந்த க்ருபை பலோபதாநம் செய்யுமிடத்தில் ஸஹகாரிகளான உபாயங்களை அபேக்ஷித்திருக்குமென்பதாம். ஆகிலும் சில வியக்தி விசேஷங்களில் ஸஹகாரிகளையும் அபேக்ஷியாமல் பலத்தைக் கொடுக்குமென்பது கீழ்க்குறிக்கப்பட்ட ப்ரமாணங்களாலே வ்யக்தம்.

மேலும் திருமந்த்ரத்தில் அகாரத்தில் (அவ ரக்ஷணே) என்கிற தாதுவினுடைய அர்த்தமான ரக்ஷணம், காலாதிகளைக் குறிப்பிடாமையாலே ஸர்வகாலங்களிலும் ஸர்வப்ரகாரங்களாலும் ஒரு ஹேதுவையும் அபேக்ஷியாமல் நிகழ்வதென்று ஏற்படுகிறது. எல்லாவிடங்களிலும் ரக்ஷணம், ஸஹேதுகமாகவேயிருக்கும்; என்னும்பக்ஷத்தில் நிர்ஹேதுகமான ரக்ஷணம் அப்ரஸித்தமாகவேண்டும். பசு, பக்ஷிகளும் தந்தம் குழகன்று குஞ்சுகளை நிர்ஹேதுகமாகவே ரக்ஷிக்கக் காண்கையாலே நிர்ஹேதுகரக்ஷணம் ப்ரஸித்தமாயிருக்கிறது. மேலும் ப்ரஹ்ம சப்தார்த்த நிரூபணாவஸரத்தில் "ப்ருஹதி ப்ரும்ஹயதி தஸ்மா துச்யதே பரம் ப்ரஹ்ம" என்று சொல்லுகிறவிடத்தில் "ப்ரும்ஹயதி" என்கிற வித்தால் சேதநநிஷ்டமான ஜ்ஞானவிகாஸரூப மோக்ஷத்துக்குக் காரணம் என்று ஏற்படுகிறது. இவ்விடத்திலும் ஹேதுவைச் சொல்லாமையால் அந்த மோக்ஷகாரணமும் நிர்ஹேதுகமென்றே ஸித்திக்கிறது. ப்ரஹ்ம சப்தத்துக்கு ஆர்த்தமாக ஏற்படுகிற ஹேயப்ரத்யநீகத்வமும் ஆச்ரித விஷயத்தில் ஹேய நிவர்த்தகத்வரூபமாகையால் அதிலும் ஹேது ச்ரவணமில்லாமையாலே அநிஷ்ட நிவர்த்தகரூபமான அதுவும் நிர்ஹேதுகமாயிருக்கிறது.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை, லக்ஷ்மீதந்த்ரம் இவைகளில் அநுக்ரஹசக்தியாகிய க்ருபை சேதனன் விஷயத்திலுண்டாகிற காலம் தெரியாமையால் நிர்ஹேதுகமென்று சொல்லப்படுகிறது. மேலும் திருவாய்மொழியில் "இன்றென்னைப் பொருளாக்கி" என்கிற பாட்டினுடைய வ்யாக்யானாவஸரத்தில் திருக்குருகைப்பிரான் பிள்ளான்

திருப்பேர்நகரான் இன்று என்னை ஸ்வவிஷய திவ்யஜ்ஞானவானுக்கித் தன்னை என்னுள்ளே வைக்கைக்கு ஹேதுவென்? இதற்கு முன்பு இப்படிச் செய்யாதொழிகைக்கு ஹேதுவென்? என்று அவனை நான் கேட்கிறேன்; இதற்கு ஒரு உத்தரம் சொல்ல வல்லவனுகில் சொல்லு வான் என்கிருர்" என்று அருளிச்செய்திருப்பதாலும், நிர்ஹேதுக மென்றேற்படுகிறது. இன்னும் இதில் வக்தவ்யங்களான விஷயங் களை விஸ்தரபயத்தால் நிறுத்திவிட்டேன்.

—⁂ வாத்ஸல்யகுண நிருபணம் ⁂—

இனி வாத்ஸல்யகுணம் நிருபிக்கலாகும். வாத்ஸல்ய மென் பது:–வத்ஸஸ்ய இதம்–வாத்ஸம்; தத் லாதீதி–வாத்ஸலா; தஸ்யா: கர்ம-வாத்ஸல்யம் என்கிற வ்யுத்பத்தியால் அன்றீன்றகன்றினுடைய தோஷத்தை போக்கியமாகக் கொள்ளுகிற பசுவின் வியாபாரம்; என்ற அர்த்தமுடையதாயிருக்கிறது. அதாவது—அந்தக் கன்றி னுடைய தோஷம் பசுவுக்கு போக்கியமாயிருப்பதுபோலே ஆச்ரித ருடைய பூர்வாகங்களிலும் ப்ராமாதிகங்களான உத்தராகங்களி லும் அவர்ஜநீயங்களான சாரீரதோஷங்களிலும் ஈசுவரனுக்குள்ள போக்யதாபுத்தியே வாத்ஸல்யம் என்று சொல்லப்படுகிறது. அன்றி யும் வத்ஸம் லாதீதி–வத்ஸலா; வத்ஸலாயா: கர்ம - வாத்ஸல்யம் என்ற வ்யுத்பத்தியாலும் இந்த அர்த்தம் ஸித்திக்கிறது.

இந்த வாத்ஸல்யத்தினுடைய ப்ரதமாவஸ்தை, தோஷாநாதர ஹேதுவான ஸ்நேஹமாகவும்; உத்கடாவஸ்தை, தோஷங்களில் குணத்வபுத்தி பண்ணுகையுமாயிருக்கும். இப்படியே சுருத ப்ரகாசி கையில் "ஸம்பந்த விசேஷாந் விதேஷு ப்ரீதி:- ஸ்நேஹ:; யஸ்ய விபாகா:- அஸ்தாந பயசங்கித்வம் தோஷாநவபாஸ: தோஷேஷு குணத்வ புத்தி:" என்றும், இப்படியே ஸமந்வயாதிகரணத்தில் "தோஷேஷு குணத்வபுத்திர் வாத்ஸல்யம்; யதா மாதுர் வத்ஸே" என்றும், சரணுகதிகத்ய சுருதப்ரகாசிகையில் "யதா தேநோர் வத்ஸே" என்றும் சொல்லப்படுகிறது. இதற்கு அர்த்தம்:— ஸம் பந்தமுள்ள இடங்களில் ப்ரீதிபண்ணுகை ஸ்நேஹம்; அதினுடைய விபாகங்கள்:— அஸ்தாநேபயசங்கை, தோஷம் தோன்றுமை, தோஷங்களில் குணத்வபுத்தி என்னுமிவைகளே. எப்படி தாயான பசு தன் கன்றினிடத்தில் ப்ரீதியுடையதாயிருக்குமோ அப்படியே

ஈசுவரன் ஆச்ரிதரிடத்தில் இருக்குமிருப்பு வாத்ஸல்யமென்று சொல்லப்படும் என்பதாம். இப்படி ஜ்ஞானமில்லாத தேநுவை வாத்ஸல்யத்துக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லியபடியால் ஜ்ஞானமுள்ளவர்களுக்கும் ப்ரேமத்தினல் உண்டாகிற அஜ்ஞானத்தால் தோஷங்களில் குணத்வபுத்தி யுண்டாகுமென்பது பெறப்படுகிறது. இப்படியே "அவிஜ்ஞாதா ஸஹஸ்ராம்சு:" என்கிற ஸஹஸ்ரநாம பாஷ்யத்திலும், "யதோ தோஷாந் பக்தேஷ்விஹ வரத நைவா கலயஸி" என்பதிலும் வாத்ஸல்யத்தினுடைய ப்ரதமாவஸ்தையான தோஷாதர்சனம் சொல்லுகிறது.

இப்படியே ஆழ்வார்களும் "என்னடியாரது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்றும், "குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்" என்றும், "செய்தகுற்றம் நற்றமாகவே கொள்" என்றும் அருளிச்செய்திருக்கிறார்கள்.

ஸ்ரீராமாயணத்திலும் "தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத்" என்கிற சுலோகத்தில் 'யத்யபி' என்றதனல் தோஷாதர்சநமும் 'ஸ்யாத்' என்றதனல் தோஷபோக்யத்வமும் சொல்லப்பட்டன.

தேசிகனும் "ஔத்ஸுக்ய பூர்வ முபஹ்ருத்ய மஹாபராதாந்" என்கிற சுலோகத்தில் "ஆலிஹ்ய தாந் நிரவசேஷ மலப்த த்ருப்தி:" என்பதிலும் "பரந்யாஸச்சந்" என்கிற சுலோகத்திலும் தோஷபோக்யத்வமே வாத்ஸல்யமென்று அருளிச் செய்திருக்கிறார். ரங்கராமாநுஜ ஜீயரும், உபநிஷத் பாஷ்யத்தில் "அங்குஷ்ட மாத்ர: புருஷ: ...... ததோந விஜுகுப்ஸதே" என்கிறவிடத்தில் "ஆச்ரித தோஷாந் வாத்ஸல்யேந போக்யத்வேந ஸ்வீகரோதி" என்றருளிச் செய்திருக்கிறார். சுருதியிலும் "ஸம்யா ததே ப்ரஹ்மணேஷ: ரமதே தஸ்மிந்நுத ஜீர்ணேசயாநே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்– அவிவாதம் என்றும், ஸந்தி என்றும் சொல்லப்படுகிற ப்ரபத்தியை அநுஷ்டித்தவனுடைய ஜீர்ணமான சரீரத்தில் ரமிக்கிறன் என்பதாம். இந்த அர்த்தம் "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற பாட்டிலும் "மங்கவொட்டுன்" என்கிற பாட்டிலும் கண்டுகொள்ளலாம்.

இப்படியே பகவத்குண தர்ப்பணத்தில் "ஸஹி சிரபரிசியமாநேஷ்வபி சரணாகதேஷு கஸ்யாபி ஹேதோ: ஸத்ய: ப்ரஸூதேஷ்

விவ வத்ஸேஷு ஸஹுங்காரா: ஸபயஸ் ஸம்ஸ்நுத ஸ்நுவேதநா ஸிங்கர்த்தவ்யதாகுலா: தேநுவ இவ ஸம்ப்ராம்யதி" என்று சொல்லப் பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்—சிரபரிசிதர்களாயிருந்தபோதிலும் சரணாகதர்களிடத்தில் அன்றீன்றகன்றுகளிடத்தில் ஹுங்காரத் தோடே கிட்டியும் முலைக்கடுப்போடே கூடியும் இன்னது செய் கிறது என்று தெரியாமல் கலங்கியிருக்கிற பசுக்கள்போலே ப்ரமிக் கிறுன் என்பதாம். இதற்கு உதாஹரணமாக "அத்ய ஜாதந்து மலிநம் வத்ஸம் கௌரிவ யாவதி" என்கிற சுலோகத்தைக் கண்டுகொள்வது.

அப்படியே வாத்ஸல்யத்தாலே கஜேந்திராழ்வான் விஷயத் தில் தன்னுடைய சக்தியை மறந்து அரைகுலையத்தலைகுலைய ஸரஸ்ஸி னுடைய கரையில் ஈசுவரன் எழுந்தருளினதை ப்ரதிபாதிக்கிற "தேவீ ஹஸ்தாம்புஜேப்ய:" என்று துடங்கி பட்டர் அருளிச்செய்த சுலோகங்களிலும் காணலாம்.

மேலும் "யதிதமகணயித்வா துர்வஹம் ச்ரோணிபாரம், மதவி சரணலோபாத் ப்ரஸ்திதம் பத்மதாம்ரம்; அயமஹமபி வாஞ்சாம்ய ப்ரம்ருஜ்யேவ பாம்ஸூம், ஸுமுகி பததலம்தே சூடிதும் சும்பிதும் வா" என்றும் "ரதிஸமயே தருணீநாம் பூஷாஹாநிரபி பூஷணீபவதி" என்றும் சொல்லுகிற வாக்கியங்களிலும் கண்டுகொள்ளலாம். இதன் அர்த்தம்—என்னிடத்தில் வர விரும்பிய ஆசையால் வஹிக்கக் கூடாதிருக்கிற நிதம்ப பாரத்தையும் எண்ணுமல் பிரயாணம் புறப் பட்டு வருவதால் செந்தாமரை மலர்போற் சிவந்திருக்கிற உன் பாத தலத்தை நடந்துவரும்போது படிந்து கிடக்கிற தூளிகளைத் துடைக் காமலே சிரோபூஷணமா யணியவும் முத்தமிட்டுக் கொள்ளவும் இச்சிக்கிறேன் என்பதும், ரதிகாலத்தில் ஸ்த்ரீகள் ஆபரணமில்லாம லிருப்பதே அழகாகுமென்பதும் ஆம்.

இப்படி க்ஷுத்ரனுன சேதனனுக்கும் ஜ்ஞானமில்லாத தேநு வுக்கும் இருந்தால் பரமசேதனனுயும் பரமரஸிகனுயுமுள்ள ஸர்வேசு வரனுக்கு "ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்" என்றும், "ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தம்" என்றும், "அத்யர்த்த ப்ரியம் ஜ்ஞானினம் லப்த்வா" என்றும் சொல்லுகிறபடியே அத்யந்தாபிமதனுன ஜ்ஞானி விஷயத்தில் இப்படியிருப்பது கிம்புனர் ந்யாயஸித்தம். இப்படி யிருக்க, "நிகரில் புகழா" யென்று ஒப்பில்லாத குணமாகச் சொல்லப் பட்ட தோஷேஷு குணத்வபுத்தி ரூபமான வாத்ஸல்யத்தைத்

தோஷமென்று சொல்வது குணேஷு தோஷத்வபுத்தி கார்யம். ஆனால், தேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்திலும் சரணாகதிகத்ய பாஷ்யத்திலும் "யதா தேநோர் வத்ஸே" என்கிற சுருதப்ரகாசிகாகாரர் வாக்யத்தை யெடுத்துக்காட்டி "கேஷாஞ்சித் அதிவாத:" என்பதால் தோஷேஷு குணத்வபுத்தியாக வாத்ஸல்யத்தைச் சொல்லக்கூடாது என்று அருளிச்செய்திருப்பது கூடும்படி எங்ஙனே யென்னில், அவரே தயாசதகத்தில் "வாத்ஸல்யம் தோஷபோக்யத்வம்" என்று அருளிச்செய்திருப்பதாலும் அதை அநுஸரித்தே தத்ஸம்ப்ரதாயஸ்தரான ரங்கராமாநுஜ ஜியரும் உபநிஷத் பாஷ்யத்தில் அருளிச்செய்திருப்பதாலும் இப்படியிருந்துள்ள வாத்ஸல்யத்துக்கே அனேக ப்ரமாண உபபத்திகளிருப்பதாலும் அந்த பக்ஷத்தில் நைர்ப்பர்யமில்லாமையாலும் ப்ரௌடவாதமாமித்தனை.

தோஷ போக்யத்வம் வாத்ஸல்யமென்று சொல்லும் பக்ஷத்தில் போக்யமான தோஷத்தையே பண்ணும்படி நேரிடும் என்கிற தூஷணம் தோஷாதர்சனம் வாத்ஸல்யம் என்று சொல்லுகிற பக்ஷத்திலும் ஸமானம். பூர்வாக விஷயத்திலும் ப்ராமாதிகமான உத்தராகத்திலும் அவர்ஜநீயமான சாரீரதோஷத்திலும் ஏற்படுகிற குணத்வபுத்தி அதிப்ரேம கார்யமாகையால் தோஷமாகாது "திருமாலிருஞ்சோலைமலையே" என்கிற பாட்டில் உகந்தருளின நிலங்களில் பண்ணும் விருப்பத்தை ப்ராக்ருதமாயும் ஹேயமாயுமிருந்துள்ள ஆழ்வாருடைய விக்ரஹைக தேசத்தில் பண்ணுகிறான் என்று இருப்பது கண்டுகொள்வது. இப்படியிருப்பதால் ஆழ்வாருடைய சரம விக்ரஹத்தை பொலிந்துநின்றபிரான் ஸந்நிதியிலேயே திருப்பள்ளிப்படுத்தியிருப்பதும். கோயிலில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய சரம விக்ரஹத்தை பெருமாளுடைய வஸந்த மண்டபத்தில் திருப்பள்ளிப்படுத்தியிருப்பதும். திருமழிசைப்பிரானுடைய சரம விக்ரஹத்தை ஆராவமுதாழ்வான்ஸந்நிதிக்கு ஸமீபத்தில் திருப்பள்ளிப்படுத்தியிருப்பதும் கண்டுகொள்ளலாம். அப்படியே திருமலையிலும் அனந்தாழ்வான் சரம விக்ரஹத்தைத் திருப்பள்ளிப்படுத்தின இடத்துக்கு திருவேங்கடமுடையான் ஸம்வத்ஸரம் தோறும் எழுந்தருளி ஸ்ரீ சடாரி ஸாதித்து வருவதும் கண்டுகொள்ளலாம்.

இப்படியாக ப்ரமாணங்களாலும் அநுஷ்டானத்தாலும் உபபத்தியாலும் ஸ்நேஹத்தினுடைய உத்கடாவஸ்தையான வாத்ஸல்யம் நிரூபிக்கப்பட்டது.

— பகவத் ஸௌசீல்ய நிரூபணம் —

இனி, ஸௌசீல்யமாவது :— உயர்ந்தவன் இழிந்தவனோடே கலக்கும்போது புரையற்றிருக்கை. புரையற்றிருக்கையாவது :— தன்னுடைய உயர்த்தியும் தன்னையடைந்தவனுடைய தாழ்வும் பாராட்டாமை. ஸ்ரீ ராமாயணத்தில் ராவணவதாநந்தரம் ப்ரஹ்மாதிகள் "பவாந் நாராயணோ தேவ:" என்று பெருமாளுடைய உயர்த்தியைச் சொல்ல பெருமாள் அதை விரும்பாமல் "ஆத்மாநம் மாநுஷம் மந்யே ராமம் தசரதாத்மஜம்" என்பதால் தன்னை தசரத குமாரனை ஒரு மனுஷ்யனென் றெண்ணுகிறேன் என்று அருளிச் செய்கையாலும், ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் கோவர்த்தநோத்தாரணாநந்தரம் "தேவோ வா" இத்யாதி சங்கித்துச் சொல்லியவற்றை விரும்பாமல் "நாஹம் தேவோ ந கந்தர்வ:" "அஹம்வோ பாந்தவோ ஜாத:" என்பவற்றால் நான் தேவனுமல்லன்; கந்தர்வனுமல்லன்; உங்களுக்கு பந்துவாக வந்து பிறந்தவன் என்று கண்ணன் அருளிச் செய்தமையாலும் இந்த ஸௌசீல்யகுணம் விளங்கும்.

— ஸௌலப்ய நிரூபணம் —

இனி, ஸௌலப்யமாவது :-கண்ணுக்கு விஷயமாகாத தன்னை ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்குகை. இந்த குணம் விபவத்திலும் அர்ச்சாவதாரத்திலும் காணலாம். விக்ரஹகுணங்கள் காந்தி ஸௌகுமார்யாதிகள். ஈசுவரனுக்கு விக்ரஹம் உண்டென்பதற்குப் பிரமாணம் "ய ஏஷோந்த ராதித்யே ஹிரண்மய: புருஷோத்ருச்யதே தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீக மேவ மக்ஷிணீ" என்றும், 'நீலதோயத மத்யஸ்தா" என்றும், "ஆதித்ய வர்ணம் தமஸஸ்து பாரே" என்றும் சொல்லுகிற சுருதிகளும் ஸ்மிருதிதிஹாஸ புராணங்களுமாம். ஈசுவரனுக்கு சரீரமில்லை என்று சுருதிகள் சொல்லியது கர்ம நிபந்தனமான சரீரமில்லையென்பதை உபபாதித்தபடி. இன்னும் இவைகளுடைய நிரூபணம் மேலேவரும்.

— ஸர்வசேஷித்வாதி நிரூபணம் —

ஸர்வசேஷியாயிருக்கையாவது :— ஸமஸ்தங்களான சேதநாசேதனங்களையும் தன்னுடைய அதிசயாதானத்துக்கு உறுப்பாக விநியோகிக்கைக்கு ஹேதுவான ஸம்பந்த விசேஷம் ஸ்வாமித்வமாவது:— சேதனர்கள் விமுகர்களான தசையிலும் அவர்களுடைய

ஸத்தாஸ்தித்யாதிகளைத் தான் அவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்தும் மற்றும் அவர்கள் மாதாபித்ராதிகளுக்கு அந்தர்யாமியாயிருந்தும் நிர்வஹிக்கைக்கு உறுப்பான ஸம்பந்த விசேஷம்: இந்த விஷயமும் மேலே நிரூபிக்கப்படும்.

— ஸர்வகர்ம ஸமாராத்யத்வ நிருபணம் —

இனி, ஸர்வகர்ம ஸமாராத்யனுகையாவது:— சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் விதிக்கப்பட்டிருக்கிற நித்ய நைமித்திக காம்ய கர்மங்களுக்குத் தானே ஆராத்யனுயிருக்கை. ஆனுல் அக்னீந்த்ராதி தேவர்களை உத்தேசித்துப் பண்ணுகிற கர்மஸ்வரூபம் ஈசுவரனுக்கு ஆராதனமாம்படி எங்ஙனேயென்னில்? அக்னி இந்திராதி தேவதைகள் ஈசுவரனுக்கு சரீரபூதர்களாகையாலும், தான் சரீரியாகையாலும் சரீரத்தைப்பற்றி ஏற்படுகிற ஆராதனங்கள் சரீரிக்கே யாகையாலே ஈசுவரனுக்கு ஆராதனமாகலாம். சேதனர்கள் அந்தர்யாமியான ஈசுவரனுக்கு கர்மம் ஆராதனமென்றறியாமல் அக்னி இந்திராதி தேவர்களுக்கே ஆராதனமாகச் செய்தபோதிலும் பர்யவஸாநத்தில் ஈசுவரனுக்குச் செய்த ஆராதனமாகவே இருக்கிறது. எப்படியெனில்? தேஹமே ஆத்மாவென்று நினைத்திருக்கிற மனிதன் தேஹத்துக்குப் பண்ணும் உபலாளனுதிகளாலுண்டான ஸுகம் அந்த தேஹாபிமானியான ஆத்மாவினிடத்தில் பர்யவஸிப்பதுபோல பர்யவஸிக்குமென்றறியத்தக்கதாம். இந்த விஷயத்தை, "யே யஜந்தி பித்ருந் தேவாந் ப்ராஹ்மணுந் ஸஹுதாசநாந், தேபி மாமேவ கௌந்தேய யஜந்த்ய விதி பூர்வகம்" என்று கீதாசார்யன் அருளிச்செய்தான். இதனர்த்தம்:- யார் யார் பித்ருக்களையும் தேவர்களையும் அக்னியோடே கூடிய பிராமணர்களையும் என்னை யுத்தேசியாமலே ஆராதிக்கிருர்களோ அவர்களும் அங்கங்கு அந்தர்யாமியாய் நின்ற என்னையே ஆராதித்தவராகிருர்கள் என்பதாம்.

— மோக்ஷப்ரதத்வ உபாயத்வாதி நிருபணம் —

இனி, நிரதிசய புருஷார்த்தரூப மோக்ஷப்ரதனுகையாவது:— எல்லாவற்றிற்கும் மேலான புருஷார்த்தமான மோக்ஷத்தை ஈசுவரனே கொடுப்பதாக ப்ரமாணங்களிருப்பதால் ஈசுவரனே மோக்ஷப்ரதனுகிறன். ப்ரமாணங்கள் "நாந்ய: பந்தா அயநாய வித்யதே" "மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" இத்யாதி வாக்யங்களாம். நைஷ

த்தில் ஸ்ரீ ஹர்ஷகவி, "அதிகத்ய ஜகத்யதீச்வராத் அத முக்திம் புருஷோத்தமாத் தத:" என்பதால் புருஷோத்தமனான நாராயணனே மோக்ஷப்ரதனென்பதைச் சொல்லியிருக்கிறார். இந்த விஷயம் புருஷார்த்த நிரூபணத்தில் விசதமாக நிரூபிக்கப்படும்.

இனி, உபாயமாகையாவது:–ஈசுவரன் மோக்ஷத்தைக் கொடுப்பவனும் மோக்ஷரூப பலத்துக்கு ஸாதநமும் தானாயிருக்கை. அதில், உபாயத்வமாவது ஈசுவரனுக்கும் பக்தியாத்யுபாயங்களுக்கும் ஸாதாரணமாயிருக்கும். அது எப்படியென்னில் உபாயத்வம் பல ஸாதநத்வரூபம்; பக்த்யாதிகள் பலத்துக்குக் கரணமாயிருந்து ஸாதனமாகின்றன. ஈசுவரன் பலப்ரதனாகையாலே பல ஸாதனமாகிறான். அங்ஙனமன்றிக்கே ஈசுவரனே பலப்ரதனாயும் பலகரணமாயுமிருக்கிறான். அதற்கு ப்ரமாணங்கள்:– "மாதா பிதா ப்ராதா நிவாஸ: சரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:" என்கிற இதில் சரண சப்தம் "உபாயே க்ருஹ ரக்ஷித்ரோ:" என்கிறபடி பலப்ரதத்வத்தைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற பல கரணத்வபரமாயிருக்கிறது; இப்படியே த்வயத்திலும் சரம சுலோகத்திலும் இருக்கிற சரண சப்தம் கீழ்க் குறித்த சுலோகத்தின்படி பலகரணத்வபரமாயிருக்கிறது; நாராயண சப்தத்தில் அயனசப்தமானது கரணே ல்யுடந்தமாகையால் "ஈயதே இதி-அயனம்" என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு ப்ராப்தி கரணத்வத்தைச் சொல்லுகிறது; ஸ்ரீ ராமாயணத்தில் "சரண்யம் சரணஞ்ச த்வாம் ஆஹுர் திவ்யாமஹர்ஷய:" என்று சரண்ய சப்தத்தாலே பலப்ரதத்வத்தையும், சரண சப்தத்தாலே பலகரணத்வத்தையும் சொல்லியிருக்கிறது. ஸஹஸ்ரநாமத்தில் "யோகோ யோக விதாம் நேதா" என்கிற சுலோகத்தில் "யோக:" என்கிற சப்தத்தால் "யுஜ்யத இதி-யோக:" என்கிற வ்யுத்பத்தியைக்கொண்டு ப்ராப்தி கரணத்வம் சொல்லப்பட்டதாக பட்டர் வியாக்யானம் செய்தருளியிருக்கிறார். அப்படியே "கரணம் காரணம் கர்த்தா" என்னுமிடத்திலும் கண்டுகொள்ளத் தக்கது. ஸூத்ரகாரரும் "உபபத்தேச்ச" என்கிற ஸூத்ரத்தால் பல கரணத்வத்தையும் "பலமத உபபத்தே:" என்கிற ஸூத்ரத்தால் பலப்ரதத்வத்தையும் தனித்து நிரூபித்திருக்கிறார். "உத தமாதேசம ப்ராக்ஷ்ய:" என்கிற சுருதி வாக்கியத்தின் ஆதேச சப்தார்த்த விசாரத்தில் "கஞ்ப்ரத்யயமானது, காரகாந்தரங்களை அபேக்ஷியாமையாகிற கரணத்துக்குள்ள ஸாதகதமத்வம் கர்த்தாவுக்கு மிருப்பதால், கர்த்தாவைக் கரணமாக விவக்ஷித்துச்

சொல்லியபடி." என்று வேதார்த்த ஸங்க்ரகத்திலும் "சாந்தோக்யே கேசிதாஹு:" என்கிற நடாதூர் அம்மாள் அருளிச்செய்த சுலோகத்திலும் சொல்லியிருப்பதால் ப்ரஸாதந கரணத்வம் ஈசுவரனுக்கு உண்டென்று ஏற்படுகிறது. ப்ரஸாதநமாவது:— ஹிதப்ரவர்த்தனமாகையால் அதுவும் அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக இஷ்டப்ராபகத்வ ரூபமாகையால் அது பலகரணத்வ பர்யவஸிதமாம். திருவாய்மொழியிலும் "சரணமாகுந் தனதா ளடைந்தார்க்கெல்லாம், மரணமானால் வைகுந்தம் கொடுக்கும்பிரான்" என்று பலப்ரதத்வத்தையும், பலகரணத்வத்தையும் பிரித்தருளிச்செய்திருக்கிறார். தேசிகனும் "தேவ: ஸ்ரீமாந் ஸ்வஸித்தே: கரணம்" என்று பலகரணத்வத்தை யருளிச்செய்திருக்கிறார். ஸ்ரீபாகவதத்திலும் "த்வமகரண ஸ்வராடகில காரக சக்திதர:" என்று கரணகாரகசக்தி ஈசுவரனுக்கு உண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக பலத்துக்குக் கரணமும்' பலப்ரதனும் ஈசுவரனே ஆகிறான்.

— ஈச்வரனுடைய ஃபலகரணத்வ ஸமர்த்தநம் —

ஆனால் ஈசுவரன் பலத்துக்குக் கரணமாகும் பக்ஷத்தில் பக்தி ப்ரபத்திகளை சாஸ்த்ரங்களில் பலத்துக்குக் கரணங்களாக விதித்திருப்பது கூடும்படி எங்ஙனே யென்னில், ப்ரபத்திஸ்தலத்தில் ப்ரபத்தி ப்ரதிபந்தகாபாவ ரூபமாயும் அதிகாரி விசேஷணமாயும் இருப்பதால் ஈசுவரனே பலகரணமாகிறான். பக்திஸ்தலத்திலும் ப்ராதிகூல்ய நிவ்ருத்திமாத்ரத்தைக்கொண்டே ப்ரீதனான ஸர்வேசுவரன் "ததாமி புத்தியோகம் தம்" என்கிற வசனப்படி பக்திநிஷ்பத்தியைப் பண்ணிக்கொடுக்கிறான் என்று ஏற்படுவதால் அவனுடைய க்ருபாபலமான பக்தி க்ருபாஜனிகையாக மாட்டாது; ஆனால் "உபாஸீத" "த்யாயீத" என்கிற விதிக்கு அர்த்தம் என்னென்னில் விதிக்கு க்ருபாதிஸாத்யத்வமே அர்த்தமாகையாலும், இஷ்டஸாதநத்வம் பாதகமில்லாதவிடத்தில் ஆக்ஷேபலப்யமாகையாலும், கேவலக்ருதி ஸாத்யத்வத்தையே சொல்லுவதாம். அங்ஙனமன்றிக்கே, ஸ்வயம் ப்ரயோஜனமான ஈசுவரமுகோல்லாஸமாகிற இஷ்டத்துக்கு ஸாதனமென்றும் சொல்லலாம். இந்த விஷயத்தை சுருதப்ரகாசிகையில் ரக்ஷணோந்முகனான ஈசுவரனுக்கு பக்த்யுத்கமரூபமென்று அருளிச்செய்திருக்கிறார். அப்படியன்றிக்கே பக்திக்கு உபாயத்வமே விஹிதமாயிருந்ததேயாகிலும் "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்கிற கீதா

சுலோகத்தின்படி சேதனனுடைய ருசிக்கு அநுகுணமாக பக்தியும் உபாயமாக இருக்கிறது.

ஆனுல், சுருதிக்கு பரமதாத்பர்யம் ஈசுவரனுடைய பலகரணத்வத்திலேயாம். அதுவரையில் இவன் வருவதற்காக வழியேற்படுத்தினபடி. அது எப்படிபோலென்ருல், தேஹாத்மாபிமானியாயிருக்கிறவனுக்கு ஐஹிகபலமான மழை முதலியவற்றை ஸாதித்துக் கொடுக்கிற யாகத்தை விதித்தாற்போலேயும், தேஹாதிரிக்தன் ஆத்மா ஒருவன் உளன்; அவன் ஸ்வதந்த்ரன் என்று இருப்பார்களுக்கு ஸ்வர்க்காதி ஸாதனமான யாகத்தை விதித்தாற்போலேயும், ஸ்வாதந்த்ரியத்தை விட்டு தேவதாந்தர சேஷத்வத்துக்கு இசைந்தவர்களுக்கு தேவதாந்தர ஸாயுஜ்ய ஸாதனமான உபாயத்தை விதித்தாற்போலேயும், பகவத் சேஷத்வ பாரதந்த்ரியங்களே ஸ்வரூபமென்றும் மோக்ஷமே புருஷார்த்தமென்றும் அறிந்தவனுக்கு அந்த சேஷத்வ பாரதந்த்ரியாநுகுணமாக தத்ஸாதநமான பக்தியை விதித்தது. தான் சரீரபூதனுகையாலே தன்னுடைய ரக்ஷணத்தில் தனக்கு யோக்யதை இல்லாமையாகிற அத்யந்த பாரதந்த்ர்யத்தை அறிந்தவனுக்கு அதற்குத் தன்னை யுபாயமாக ஸ்வீகரிக்கையாகிற ப்ரபத்தியை விதித்தது

— தர்மஜிஜ்ஞாஸா என்றதில் தர்மஸப்தார்த்த நிருபணம் —

அதுநிற்க, பூர்வமீமாம்ஸையில், "அதாதோ தர்ம ஜிஜ்ஞாஸா" என்கிற ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட தர்மபதம் "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்கிறபடியே ப்ரஹ்மபரமாகையாலும், பூர்வமீமாம்ஸையும் உத்தரமீமாம்ஸையும் ஏகசாஸ்த்ரமாகையாலும், உத்தர மீமாம்ஸையில் ஏற்படும் ப்ரஹ்ம விசாரத்துக்கும் ஸாதாரண ப்ரதிஜ்ஞாபரமென்று சுருதப்ரகாசிகையில் நிருபித்திருக்கிறபடியால் அந்த தர்ம சப்தார்த்தமான உபாயம் ஸர்வேசுவரன் என்று ஸித்திக்கிறது. ஆனுல் சுருதப்ரகாசிகையில் த்ரவ்யதேசங்கள் ஃபலகரணமன்றியிருந்தாலும் உபகரணமாயும் அதிகரணமாயுமிருப்பதால் தர்ம சப்தார்த்த மாவனபோல ஈசுவரனும் பலப்ரதனுகையாலே தர்ம சப்தார்த்த மாகலாமென்று நிருபித்திருப்பதால் பலகரணத்வம் ஸித்திக்க மாட்டாதென்னில், கீழ்நிருபித்தபடி கரணத்வம் ஸித்தித்திருப்பதால் அந்த கரணத்வத்தோடே கூட பலப்ரதத்வமடியாக ஏற்படுகிற

தர்மத்வமும் உண்டென்று ஸித்திப்பதல்லது கரணத்வ நிஷேதத்தில் தாத்பர்யம் கொள்ள இடமில்லை. இப்படிச் சொல்லாத பக்ஷத்தில் மற்ற இடங்களில் கரணத்வத்தை உபபாதிக்கிற வாக்கியத்தோடு விரோதிக்கும்.

— இல்லறமில்லேல் பாசுரப்பொருள் விளக்கம் —

மேலும் திருமழிசைப்பிரான் நான்முகன் திருவந்தாதியில். "இல்லற மில்லேல் துறவறமில்" என்கிற பாசுரத்தில் ப்ரவ்ருத்தி தர்மமன்றாகில் நிவ்ருத்தி தர்மமாகச் சொல்லப்படுவதும் தர்மமில்லை; நல்லறமாவதும், நாலு வேதங்களாலும் சொல்லப்படுகிற தபஸ்ஸும் நாராயணனேயாம். இம்முடிபை அன்றென்று மறுப்பவர் ஒருவரு மில்லை; ப்ராமாணிகரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது; என்று அறுதியிட்டிருப்பதாலும் பலகரணத்வரூபமான உபாயத்வம் ஈசுவர னுக்கே யுள்ளதென்பது ஸித்தம்.

— ஸர்வேச்வரனே உபாயமென்பதன் நிர்மாணம் —

இங்ஙனமன்றிக்கே, உபாயமென்பது அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் கரணமாயிருப்பதைச் சொல்லுமதாகையால் அநிஷ்ட நிவ்ருத்திக்குக் கரணம் பக்தியாதிகள்; இஷ்ட ப்ராப்திக்குக் கரணம் ஸர்வேசுவரன், ஆதலால் பக்தியாதிகள் கரணமென்பதற்கும் ஈசுவரன் கரணமென்பதற்கும் விரோதமில்லை. ஆனால் ஸ்ரீ பாஷ்யத் தில் "அவித்யாநிவ்ருத்திரேவ மோக்ஷ:" என்றும் இஷ்டப்ராப்தி யென்பது "பாவாந்தர மபாவ:" என்கிற ந்யாயத்தாலே அவித்யா நிவ்ருத்தியே யாகையால் தனித்து இஷ்டப்ராப்தி யென்பது இல்லை என்றிருப்பதால் இந்த வ்யவஸ்தை கூடாதென்னில், அப்படியிருந் தாலும் அவித்யாநிவ்ருத்திக்கு அநந்தரபாவியாய் வருகிற அநுபவம் "பாவாந்தர மபாவ:" என்கிற ந்யாயத்தாலே அவித்யாநிவ்ருத்தியாகச் சொன்னாலும் அதற்கு அநந்தரம் வருகிற அனுபவ கைங்கர்யங்கள் அவித்யாநிவ்ருத்தி யாகாமையாலும், அவைகள் ஸ்வாபாவிகங்களா யிருந்தபோதிலும் "இச்சாத ஏவ தவ விச்வ பதார்த்த ஸத்தா" என் கிறபடியே ஸர்வேசுவரனுடைய இச்சையாலே ஸித்தங்களாகையால் ஸர்வேசுவரன் கரணமென்று சொல்லலா மென்னில், அநிஷ்ட நிவ்ருத்திபோல் ஆகந்துகமன்றியே ஸ்வாபாவிகங்களாகையால்

ஸர்வேசுவரனுக்கு ஸத்தையை நிர்வஹிக்கையாகிற ப்ரயோஜகத்வ மொழிய கரணத்வம் ஏற்படாது.

அப்படி கரணமாகச் சொன்னாலும் கீழ் உதாஹரிக்கப்பட்ட ப்ரமாணங்களில் சரணசப்தம் "ச்ரு ஹிம்ஸாயாம்" என்கிற தாது பாடத்தின்படி அநிஷ்டநிவ்ருத்தியிலும் ஶரணமென்று ஏற்படு மாகையால் அப்படிச் சொல்வது ப்ரமாணவிருத்தம்.

ஆனால் ஸாராஸ்வாதிநியில் இப்படி நிருபிக்கப்படுகிறது. இவைகளில் ஏற்படுகிற ஸ்வாரஸ்யாஸ்வாரஸ்யத்தை ப்ராஜ்ஞர்கள் நிருபித்துக்கொள்க.

உபேயமாகையாவது—ஸர்வேசுவரனே ப்ராப்த்யுத்தேச்யனு யும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தியாயுமிருக்கை; ப்ராப்தியுத்தேச்யத்வம் ஸர்வேச்வர மாத்ரநிஷ்டம். கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வம் ஸர்வேசு வரனிடத்திலும் பிராட்டியிடத்திலும் பர்யாப்தம். இந்த விஷயம் கீழே நிருபிக்கப்பட்டது.

— ஸர்வேச்வரனுடைய பரவ்யூஹாதி விவரணோபக்ரமம் —

இப்படியிருந்துள்ள ஸர்வேசுவரன் பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சாவதாரம் என்கிற ஐந்து ப்ரகாரங்களை யுடை யவனாயிருப்பன்.

அவற்றுள் பரனாயிருக்கையாவது—அப்ராகிருதமான நித்ய விபூதியில் சுத்தஸத்வமயமான விக்ரஹத்தை யுடையவனாயும், ஷாட் குண்ய பரிபூர்ணனாயும், லக்ஷ்மீ பூமி நீளாதி மஹிஷீஜன ஸமேதனு யும், அனந்த கெருட விஷ்வக்ஸேநாதி நித்யர்களாலும் முக்தர்களா லும் பரிசரித சரணயுகளனாயும், அனந்த போகபர்யங்கத்தில் எழுந் தருளியிருக்குமிருப்பு.

— வ்யூஹஸ்திதி நிருபணம் —

வ்யூஹமாவது—அந்த விக்ரஹத்தில் நின்றும் உத்பன்னங்க ளான வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்த ரூபங்களை யுடையவனாய்க்கொண்டு ஆமோதாதி லோகங்களிலும் க்ஷீராப்தி யிலும் எழுந்தருளியிருக்குமிருப்பு. இவற்றுள் வ்யூஹ வாஸுதேவ ஸ்வருபர் ஷாட்குண்ய பரிபூர்ணராயிருப்பர். மற்ற மூவர்களிடத்தி லும் இரண்டிரண்டு குணங்களே ப்ரகாசிக்கும்.

— விபவாவதார நிரூபணம் —

விபவமாவது—வ்யூஹத்தில் அநிருத்தனிடத்தில் நின்றும் உண்டான ராமகிருஷ்ணாதி ரூபங்களையுடையவனாயிருக்குமிருப்பு. இவைகள் பூர்ணாவதாரமென்றும் ஆவேசாவதாரமென்றும் இரண்டு வகையாயிருக்கும். அவற்றுள் பூர்ணாவதாரமாவது—அவதார விக்ரஹங்களில் ஜீவத்வாரா அதிஷ்டாதாவாயிருக்கை யன்றிக்கே தானே அதிஷ்டாதாவாயிருக்கை. ஆவேசாவதாரமாவது—விக்ரஹத்துக்கு அதிஷ்டாதாவான ஜீவனிடத்தில் விக்ரஹ விசிஷ்ட ஸ்வரூபத்தாலும் கேவல சக்தியாலும் ஆவேசித்துக்கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு. பூர்ணாவதாரம் ராமகிருஷ்ணாத்யவதாரங்கள்; ஆவேசாவதாரங்கள் பரசுராம, பலராமாத்யவதாரங்கள். சக்தியாவேசரூபங்கள் ப்ரஹ்ம ருத்ராதிகள் வ்யாஸார்ஜுநாதிகள். இவைகளில் பூர்ணாவதாரமான ராமகிருஷ்ணாதி விக்ரஹங்கள் அப்ராகிருதங்கள்.

— அந்தர்யாமி நிரூபணம் —

அந்தர்யாமியாயிருக்கையாவது—ஸமஸ்த சேதனர்களுடைய ஸ்வரூபங்களிலும் அசேதனங்களிலும் சேதனத்வாராவும், ஸாக்ஷாத்தாகவும் பிரத்தியேகம் பரிஸமாப்யவர்த்தியா யெழுந்தருளியிருக்குமிருப்பு. இது எதுபோலென்னில் ஜாதி பதார்த்தம் ஒன்றாகவேயிருந்தாலும் வ்யக்திகள் தோறும் பிரத்யேகம் பரிஸமாப்யவர்த்தியாயிருக்குமாப்போலே யென்க. இந்த விஷயம் "ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்" என்கிற ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் வேதாந்த தீபத்தில் ஸ்ரீ பாஷ்யகாரரால் ஸ்பஷ்டமா யருளிச்செய்யப்பட்டிருக்கிறது. அந்தர்யாம்யதிகரண சுருதப்ரகாசிகையில் "ய: ப்ருதிவ்யாம் திஷ்டந் ய ஆத்மநி திஷ்டந்" என்று ப்ரதிபர்யாயம் யத் சப்தத்தைப் பிரயோகித்திருப்பது பகவத் ஸ்வரூபம் வஸ்துக்கள் தோறும் பூர்ணமாயிருக்குமென்பதை ஜ்ஞாபிக்கைக்காக என்றும், இப்படியே வேதார்த்த ஸங்க்ரஹ சுருதப்ரகாசிகையிலும் சொல்லப்பட்டதென்றும் அறியலாம். ந்யாயஸித்தாஞ்ஜநத்தில். அத்ரவ்ய பரிச்சேதத்தில் ஜ்ஞானம் நிரவயவத்ரவ்ய மாகையால் ப்ரத்யேகம் த்ரவ்யங்களில் பூர்ணமாக ஸம்பந்தித்திருக்குமென்றும், இப்படியே ஈசுவர ஸ்வரூபமும் வஸ்துக்கள் தோறும் ஜாதிபோல் பூர்ணமாக வர்த்திக்கு மென்றும், இப்படியே பாஷ்யகாரர் வேதாந்த தீபத்தில் அருளிச்செய்திருக்கிறார் என்றும் தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். அன்றியும் க்ருத்ஸ்ந

ப்ரஸக்தி அதிகரண ச்ருதப்ரகாசிகையிலும் "சரீர்யம்சஸ்ய ப்ரதி வஸ்து பரிஸமாப்ய வர்த்தித்வாத்" என்றே நிருபிக்கப்பட்டிருக் கிறது.

— ரஹஸ்யத்ரய ஸாரோக்தி நிர்வாஹம் —

இப்படியிருக்க, ரஹஸ்யத்ரயஸாரத்தில் "ஈசுவர ஸ்வரூபம் வஸ்துக்கள் தோறும் பூர்ணமாக வர்த்திக்குமென்றால் பேதாபேத வாதம்போல் விருத்தஸமுச்சய மேற்படும். ஆகையால் அது அநுப பந்நம்" என்று தேசிகன் அருளிச்செய்திருப்பது அங்வாருஹ்ய வாத மாகக் கொள்ளத்தக்கது. சாஸ்த்ரத்தாலேயே அறிய வேண்டிய அர்த்தங்களில் யுக்தி விரோதம் கூடாதென்பது "சுருதேஸ்து சப்த மூலத்வாத்" என்கிற ஸூத்ரத்திலும், ஸ்ரீபாஷ்யத்திலும் பலவிடங் களிலும் காணலாம். இப்படியே நிரவயவத்ரவ்யங்களில் அந்த:ப்ர தேசமில்லாமையால் அந்தர்வ்யாப்தியில்லை யென்றும், விபுத்ரவ்யங் களில் பஹி:ப்ரதேசமில்லாமையால் பஹிர்வ்யாப்தி கூடாதென்றும் சொல்லுவது "அந்தர்பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ் ஸ்தித:" "ய ஆத்மநி திஷ்டந் ய ஆத்மநோ அந்தர:" என்கிற சுருதி வாக்கியங் களால் ப்ரமாண விருத்தமாம். ப்ரமாண பலத்தால் ஈசுவர வ்யா பநத்துக்கு யோக்யமான அந்த:ப்ரதேசமும் பஹி:ப்ரதேசமும் உண்டென்றே கொள்ளவேணும். இந்த விஷயத்தை ச்ருதப்ரகாசி கையில் "ய ஆத்மநி திஷ்டந்" என்கிற வித்தால் "வேத்யாம் அக்நிஸ் திஷ்டதி" என்னுமாப்போலே பஹிர்வ்யாப்தியைச் சொல்லுகிற தென்றும் "ஆத்மநோந்தர:" என்கிற வித்தால் "திலே தைலம் திஷ்டதி" என்னுமாப்போலே அந்தர்வ்யாப்தியைச் சொல்லுகிற தென்றும் அருளிச்செய்திருக்கிறார். இங்ஙனமன்றிக்கே "அங்குஷ்ட மாத்ர: புருஷ:" என்கிற சுருதியின்படி உபாஸகாநுக்ரஹார்த்தமாக ஹ்ருதயகமலத்தில் விக்ரஹ விசிஷ்டனாக இருக்குமிருப்பும் அந்தர் யாமியவஸ்தையில் ப்ரகாரபேதமாயிருக்கும். இந்த விஷயம் 'ஹ்ருத் யபேக்ஷயா து மநுஷ்யாதிகாரத்வாத்" என்கிற ஸூத்ரத்திலும், "நிறைந்தவன்பழி" "வெள்ளைச்சுரிசங்கொடு ஆழியேந்தி" என்கிற பாசுரங்களுடைய வ்யாக்யானங்களிலும் கண்டுகொள்வது.

— அர்ச்சாவதார ப்ரஸ்தாவம் —

இனி அர்ச்சாவதாரம் பிரஸ்தாவிக்கப்படும். அர்ச்சையாவது, "அர்ச்சா பூஜாப்ரதிமயோ:" என்கிறபடி பிரதிமையென்று சொல்

லப்படும். பிரதிமையாவது—தான் ஆராதிக்க வேண்டியதற்காகவும் அந்யர்களுடைய உஜ்ஜீவனத்துக்காகவும் ஸ்வர்ண ரஜதாதி திரவ்யங்களைக்கொண்டு தனக்கு அபின்னமாயுள்ள விக்ரஹ ஸஜாதீயங்களாக ஏறியருளப் பண்ணியிருக்கிற விக்ரஹங்களில் ப்ரதிஷ்டா விசேஷங்களாலும் ஸ்வஸங்கல்பத்தாலும் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஸமஸ்த கல்யாணகுண விசிஷ்டனுய்க்கொண்டு எழுந்தருளியிருக்குமிருப்பு. இந்த விக்ரஹங்கள் ப்ராகிருத த்ரவ்யங்களால் ஏற்பட்டிருந்தபோதிலும் "தமருகந்ததெவ்வுருவம் அவ்வுருவம்தானே" என்கிறபடியாலும், "ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:" என்கிறபடியாலும், "ந பூதஸங்க ஸம்ஸ்தாந:" என்கிறபடியாலும், ஈசுவரனுடைய ஸங்கல்பத்தாலே அப்ராகிருதங்களாகவே யிருக்கும். எப்படி விபவத்தில் விக்ரஹங்கள் ப்ராகிருத ஸஜாதீயங்களாயிருக்கச் செய்தேயும் அப்ராகிருதங்களென்று ப்ரமாண வலத்தால் கொள்ளுகிறோமோ அப்படி இந்த அர்ச்சாவிக்ரஹங்களும் அப்ராகிருதங்கள் என்று கொள்ளத் தட்டில்லை.

இங்ஙனன்றிக்கே "பிம்பாகிருத்யாத்மநா பிம்பே ஸமாகத்யாவதிஷ்டதே" என்கிறபடியே அந்த விக்ரஹங்களில் தத்ஸஜாதீயங்களான அப்ராக்ருத விக்ரஹங்களுடன் பாலும் நீரும் கலந்தாற்போல் எழுந்தருளியிருக்குமென்பது தேசிகன் திருவுள்ளம். எப்படியிருந்தபோதிலும் இந்த அர்ச்சா விக்ரஹங்களில் ஸர்வஜன ஸாதாரணமாகவே ஸேவை ஸாதிக்கிற கிரமமில்லாமல் சில ஜ்ஞானாதிகர்களுக்கும், அவர்களுடைய கடாக்ஷத்துக்கு விஷயமாயிருக்கிற சிலர்களுக்கும், இப்பொழுது ஸேவை ஸாதிக்கிற ப்ரகாரத்தைக் காட்டிலும் விலக்ஷண ஸௌந்தர்யனுய்க்கொண்டு ப்ரத்யக்ஷ விஷயமாகிறன். இந்த விஷயத்தை மணவாளமாமுனிகள் "சிலர்க்கு அழகாலே பிறக்கும்" என்கிற ஸ்ரீ வசனபூஷண ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் அர்ச்சையில் காதாசித்கமாக விக்ரஹ ஸாக்ஷாத்கார முடையவர்களென்று அருளிச்செய்திருக்கிறர்: இதில் அர்ச்சையில் என்றும் காதாசித்கமென்றும் இருப்பதால் விலக்ஷண ஸௌந்தர்யாவிஷ்காரம் உண்டென்றே கொள்ளவேணும். இந்த விஷயம் பிள்ளையுறங்காவில்லி தாஸர் பூர்வாவஸ்தையில் தன்னுடைய பார்யை வெய்யிலில் வருகிறபோது அவளுக்குத் தாம் நடைபாவாடை விரித்துக்கொண்டு வாராநிற்க. எம்பெருமானுர் கண்டருளி இப்படிச் செய்வதேன்? என்று கேட்க, இவளுடைய கண்ணழகுக்கு வெய்யிலின் தாபத்

தால் வாட்டம் வருமென்று செய்தேன் என்று சொல்ல, அப்படி யாகில் இது தன்னிலும் விலக்ஷணமான கண்ணழகைப் பார்ப்பீர் வாரும் என்று அவரை அழைத்துக்கொண்டு போய்ப் பெரிய பெருமாளுடைய திருக்கண்ணழகை ஸேவிக்கப் பண்ணுவிக்க, அதுமுதல் அவர் விஷயாந்தர வைராக்யமுள்ளவராய் பகவத் விஷயத்தில் விசேஷமான பரிவுடையவராயிருந்துகொண்டு எப்பொழுதும் பெருமாளுடைய திருமேனி ரக்ஷகராகவே யெழுந்தருளியிருந்தார் என்று ஐதிஹ்ய மேற்பட்டிருக்கிறது.

ஆகையால் இப்போது ஸேவை ஸாதிக்கிற ப்ரகாரமில்லாமல் விலக்ஷண ஸாக்ஷாத்காரம் உண்டென்று ஏற்படுகிறது. இப்படியே தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீஸூக்தியில் 'போதரேயென்று சொல்லிப் புந்தியிற் புகுந்து தன்பால் ஆதரம் பெருகவைத்த அழகன்' என்பதாலும் இந்த விஷயம் ஸ்பஷ்டம். பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்திலும் ஆழ்வான் வரதராஜ ஸ்தவத்திலும் மற்றுள்ள ஸூக்திகளிலும் பெருமாளுடைய விக்ரஹ ஸௌந்தர்யவர்ணனம் செய்திருப்பதற்கு நிபந்தனம் விலக்ஷண ஸௌந்தர்ய ஸாக்ஷாத்காரமே தவிர வேறில்லை. அதிசயோக்தி யென்று சொல்லுமது பகவத் விஷயத்தில் அநுபபந்நம்.

— அர்ச்சாவதார ப்ரபேதங்கள் —

இந்த அர்ச்சாவதாரங்கள் ஸ்வயம் வ்யக்தமென்றும், ஆர்ஷமென்றும், தைவமென்றும், ஸைத்தமென்றும், மாநுஷமென்றும் பல ப்ரகாரபேதங்களை உடைத்தாயிருக்கும். இது, பரார்த்தம்.

இங்ஙனன்றிக்கே தங்கள் தங்கள் க்ருஹங்களிலும் ஸ்வார்த்தமாக ப்ரதிஷ்டிதங்களாயிருக்கும்.

இப்படியான அர்ச்சாவதாரங்கள் கீழே நிரூபித்த பரவ்யூஹாதிகள் போலன்றிக்கே ஆச்ரயணத்துக்கு அத்யந்தோபயுக்தமான ஸௌலப்ய பூர்த்தியிருப்பதால் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் இவற்றைப் போரவிரும்பியிருப்பர்கள். பாஞ்சராத்ரத்திலும் "ஜ்யாயாம்ச் சைவோத்தரோத்தர:" என்று மிக மேலானதாகச் சொல்லப்பட்டது. இப்படி இந்த அர்ச்சாவதார வைபவம் பல ப்ரமாணங்களாலும் ஸித்திக்கும். ஸ்ரீராமாயணத்தில் இக்ஷ்வாகுகுல ராஜாக்களுக்கு ஆராதநீயமான மூர்த்திவிசேஷம் அர்ச்சாவதாரம் என்றறியலாம்படி

"ஸஹபத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயண முபாகமத்; அலங்கார விதிம் க்ருத்ஸ்நம் காரயாமாஸ வேச்மநி:" என்றும், "ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோ: சிச்யே நரவராத்மஜ:" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ பாகவதத்திலும் பலராமனுடைய தீர்த்தயாத்திரையில், "ஸ்ரீரங்காக்யம் மஹாபுண்யம்" என்றும், ஏகாதச ஸ்கந்தத்தில் அர்ச்சாவிக்ரஹ ப்ரதிஷ்டை முதலானதும் வ்யக்தமாகச் சொல்லியிருக்கிறது. இன்னும் ப்ரமாணோபந்யாஸங்கள் பண்ணுவதை விஸ்தரபயத்தால் நிறுத்திவிட்டேன். இப்படி ஈசுவரதத்வம் நிரூபிக்கப்பட்டது.

— இனி ஹிதமென்று சொல்லப்படும் உபாயஸ்வரூப நிரூபணம். —

உபாயமாவது-தான் அடையவேண்டிய நிரதிசய புருஷார்த்தமான மோக்ஷத்துக்கு ஸாதனமாக அநுஷ்டிக்கப்படுமவையான கர்மயோகம், ஜ்ஞானயோகம், பக்தியோகம், ப்ரபத்தி, தேசவாஸம், திருநாமஸங்கீர்த்தனம், அவதார ரஹஸ்யஜ்ஞாநம் முதலானவைகள்.

இவை மோக்ஷத்துக்கு ஸாதநமாகையாவது-மோக்ஷப்ரதனான ஈசுவரனுக்கு இவனுடைய அபராதத்தாலுண்டான நிக்ரஹத்தை மாற்றி ப்ரஸன்னனும்படி செய்து பலப்ரதானத்துக்கு உபயுக்தமான ஸங்கல்பத்தை உண்டாக்குகை.

இப்படியாக ஈசுவர ப்ரஸாதத்துக்கு ஹேதுவாகையாலே இவ்வுபாயங்கள் கரணமென்று வ்யவஹரிக்கப்படும். கீழ் நிரூபித்தபடி ஈசுவரனே கரணமாகிறபடியால் இவைகளைக் கரணமென்பது ஔபசாரிகமாகையால் வ்யாஜோபாயங்களாம்.

வ்யாஜமாகையாவது—அந்யார்த்தமாக அநுஷ்டிக்கப்படுமது ப்ரஸங்காத் உத்தேச்ய விஷயத்துக்கு உபகாரகமாயிருக்கு மிருப்பு. இங்கு "மாதா பிதா ப்ராதா" என்கிற ப்ரமாணத்தின்படி ஸர்வவித பந்துவாயிருக்கிற ஸர்வேசுவரன் விஷயத்தில் ஸ்வதஸ்ஸித்தமாய் ஸ்வயம் ப்ரயோஜனமாய்ச் செய்யப்படுமிவை நிக்ரஹ நிவ்ருத்திக்கு ப்ரயோஜனமாகின்றன. அதாவது "நெற்செய்யப் புல்தேயுமாப் போலே" தன்னடையே கழியச் செய்வது.

இப்படியிருக்க, வஸ்துஸ்திதியை அறியாமல் உபாய புத்த்யா அநுஷ்டித்தாலும் கார்யகரமாகத் தட்டில்லை; அப்படிச் செய்கிறவன்

ஈசுவரனுக்கு அத்யந்தாபிமதனல்லன். இந்த விஷயம் ஸ்ரீபாஷ்யத்தில் சுருதப்ரகாசிகை லகுஸித்தாந்தத்தில் "ப்ரியதம ஏவஹி வரணீயோ பவதி" என்கிற இடத்தில் "ஸ்வய முபஸ்திதஸ்ய ஸ்வீகார ஏவ" என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயம் மேல் விசதமாய் நிருபிக்கப்படும்.

இப்படியிருந்துள்ள கர்மயோகாதிகள் ஸ்வயம் ப்ரயோஜன ப்ரீதி ஸாதனங்களான கைங்கர்யங்கள். இவைகளை பலஸாதநமாக புத்தி பண்ணுமல் பலமாகவே நினைக்கவேணும். அப்படியன்றிக்கே ஸாதனபுத்தி பண்ணுவது பார்யையானவள், பர்த்ரு சுச்ருஷைக்குப் பலத்தை யபேக்ஷித்தாற் போலேயும், புத்ரன் மாத்ரு சுச்ருஷைக்குப் பலத்தை அபேக்ஷித்தாற் போலேயும் இருக்குமாகையால் ஈசுவரனுக் கும் தனக்கும் உண்டான நிருபாதிக ஸம்பந்தத்துக்குக் கொத்தையா மித்தனை.

— கர்மயோக நிருபணம் —

இனி கர்மயோகம் நிருபிக்கப்படும். கர்மயோகமாவது—நித்யங் களாயும், நைமித்திகங்களாயும் உள்ள கர்மங்களை பலத்தை அபேக்ஷி யாமல் கேவல பகவதாராதனமாக அநுஷ்டிக்கை.

— ஜ்ஞானயோக நிருபணம் —

இனி ஜ்ஞாந யோகமாவது—இப்படியிருந்துள்ள கர்மயோகா நுஷ்டானத்தாலே ரஜஸ்தமஸ்ஸுக்கள் நிவ்ருத்தங்களாய் ஸத்வம் தலையெடுத்து நிர்மலமான அந்த:கரணத்தை உடையவனுக்கு ஆத்மா வலோகன ஸாதனமாக ஏற்படுகிற ஜ்ஞாந விசேஷம். இப்படியிருந் துள்ள கர்மயோக ஜ்ஞானயோகங்கள் பக்திக்கு அங்கங்களாகவே நிருபிக்கப்படுகின்றன. கீதையில், இவை ஸ்வதந்த்ரோபாயங்களாகச் சொல்லப்பட்டுள்ளன. ஸ்ரீபாஷ்யத்தில் கர்மயோக ஜ்ஞானயோகங் களுக்கு ஸ்வாதந்திரிய நிஷேதம் சொல்லவில்லை. ஆதலால் இரண்டு பக்ஷங்களும் உபபந்நங்கள்.

— பக்தியோக நிருபணம் —

இனி, பக்தியாவது—கர்மயோக ஜ்ஞாநயோகங்களை அங்கங்க ளாகவுடையதாய் "அநுவித்ய விஜாநாதி; விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர் வீத" என்கிற ப்ரமாணத்தின்படி அத்யயனத்தாற் போந்த ஸம்ஸ்

கிருத வேதார்த்த ஜ்ஞானமடியாக வருகிற தைலதாராவதவிச்சிந்ந ஸ்மிருதி ஸந்ததி ரூபமாய் தர்சனஸமாநாகாரமாய் ப்ரீதிரூபமாயிருப்ப தொரு ஜ்ஞான விசேஷம்.

இந்த பக்தி ஸ்மிருதிஸந்ததி ரூபமாயிருந்தாலும், பாவநா ப்ரகர்ஷத்தாலே ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாகப் பரிணமிக்கிறது. பக்திக்கு விஷயமான பகவத்ஸ்வரூபரூபகுணங்கள் நிரதிசயாநுகூலங் களாயிருப்பதால் ப்ரீதிரூபாபந்நமாகும்.

— பக்தியோகாதிகாரி நிருபணம் —

இப்படியிருந்துள்ள பக்தியில் த்ரைவர்ணிகர்களுக்கே அதி காரமுண்டு. அப்படியன்றிக்கே ஆசார்யருடைய அநுக்ரஹ விசே ஷத்தாலே, நாரதருடைய உபதேசத்தால் த்ருவனுக்குக் கிடைத்தாற் போலே வருகிற பக்தி ஸர்வாதிகாரரையாம். இந்த பக்திக்கு அவரவர் வர்ணங்களுக்கு உசிதங்களான தர்மங்கள் அங்கங்கள். இந்த விஷயம் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகையில் "ஸ்த்ரியோ வைச்யா ஸ்ததா சூத்ரா:" என்கிற சுலோக வ்யாக்யான முடிவிலும், தத்வமுக்தா கலாபத்தில் 'பும்பிஸ் ஸித்தாதிகாரை:" என்கிற சுலோகத்திலும் தேசிகரால் அருளிச்செய்யப்பட்டிருக்கிறது. உபநிஷத் பாஷ்யத்தில் நாரதருக்கு பூர்வம் சூத்ர ஜன்மாவிலே ருஷிகள் அநுக்ரஹத்தாலே பக்தியோகம் ஏற்பட்டிருப்பதால் பக்தி ஸர்வாதிகாரை யென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனமன்றிக்கே ஸர்வேசுவரனுடைய நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷத்தாலே "மயர்வறமதிநலமருளினன்" என்கிறபடியே ஆழ் வார்களுக்குக் கிடைத்திருக்கிற பக்தியுமொன்றுண்டு.

ப்ரபந்நர்களுக்கு "பகவந் பக்திமபி ப்ரயச்ச மே" "ஸ்தாநத்ர யோதித பரபக்தி யுக்தம்மாம் குருஷ்வ" என்கிறபடியே உண்ணு கைக்குப் பசிபோலே அநுபவ உபகரணமாய் வருகிற பக்தியும் ஒன்றுண்டு. இந்த பக்திக்கு பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்திகளாகிற அவஸ்தாபேதங்கள் உண்டாகும்.

— பரபக்தி பரஜ்ஞான பரமபக்தி நிருபணம் —

இவற்றுள் பரபக்தியாவது— தர்சன ஸமாநாகாரமான ஜ்ஞான விசேஷம். பரஜ்ஞானமாவது—இதிலும் விசதமான ஸங்க

மாவஸ்தாபந்நமான ஜ்ஞான விசேஷம். பரமபக்தியாவது—இப்படி மானஸாநுபவம் செல்லாநிற்கச்செய்தே பாஹ்யஸம்ச்லேஷத்தில் அபேக்ஷை பிறந்து அது பெறுவிடில் தரிக்கவரிதான அவஸ்தா விசேஷம்.

இப்படியான பக்தி நம்மாழ்வாருக்குத் திருவிருத்தம் முதல் "திருமாலிருஞ்சோலைமலை" என்கிற திருவாய்மொழியளவும் பரஜ் ஞான கர்ப்ப பரபக்தியாயிருக்கும். "சூழ்விசும் பணிமுகில்" பரஜ்ஞான தசாபந்நமாயிருக்கும்; "முனியே நான்முகனில்" பரம பக்தி தசையை அடைந்திருக்கும்.

உபாஸகர்களுக்கு சரமசரீராவஸானத்தில் இப்படியான தசைகள் பிறக்கும். ப்ரபந்நர்களுக்கும் அப்படியே. இப்படியன் றிக்கே "பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்த்தனம்" என்கிறபடியே யதாவஸ்திதமான சாஸ்த்ர ஜ்ஞானத்துக்கு ஸாதனமான விசுவா ஸாதிகையான பக்தியுமுண்டு. இந்த விஷயம் "மந்த்ரே தத்தேவதா யாஞ்ச ததா மந்த்ரப்ரதே குரௌ, த்ரிஷு பக்திஸ்ஸதாகார்யா ஸாஹி ப்ரதம ஸாதநம்" என்கிற சுலோகத்திலும் கண்டுகொள்க. "ஜ்ஞா தும் த்ரஷ்டுஞ்ச தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப" என்கிற கீதா சுலோகத்திலும் ஸ்பஷ்டம்.

இந்த பக்தி "உத்தர பூர்வாகயோ ரச்லேஷ விநாசௌ" என் கிற ஸூத்ரத்தின்படி உபாஸனத்துக்கு முன்பு பலோன்முகமாகாம லிருந்துள்ள பூர்வாகங்களையும், ப்ராமாதிகங்களாய் வருகிற உத்தரா கங்களையும் நிவர்த்திப்பிக்கும். அப்படியல்லாமல் புத்திபூர்வகமாக உத்தராகங்கள் நேர்ந்தால் அது ப்ராயச்சித்த விநாச்யமாகும்; அதுவும் பக்தியாலாம். பலோன்முகமான ப்ராரப்த கர்மாவின் அவஸானத் தில் மோக்ஷத்தைப் பண்ணிக் கொடுக்கும்.

மோக்ஷதசையில் இந்த பக்தியே போஜனத்துக்கு க்ஷுத் துப்போலே பரபக்தி, பரஜ்ஞான, பரமபக்திகளாகிற அவஸ்தைகளை யுடையதாய்க் கொண்டு அநுபவோபகரணமாயும் பல பூதையாயு மிருக்கும்.

இங்ஙனமன்றிக்கே அவதார ரஹஸ்ய ஜ்ஞானத்தை அங்க மாகவுடைய பக்தியோகம் "த்யக்த்வா தேஹம் புநர்ஜன்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்கிற கீதையின்படி ப்ராரப்த சரீராவஸா

நத்தில் ப்ரபத்தியைப்போல் பலத்தைக் கொடுக்கும். இந்த பக்தி ஸர்வ பாபங்களுக்கும் நிவர்த்தகையாயிருந்தபோதிலும் ப்ரஹ்மவிதபசாரம் நேர்ந்தால் பலப்ரதாநோபயுக்தமாகமாட்டாது. இந்த விஷயமும் ஸ்ரீபாஷ்யாதிகளில் ஸ்பஷ்டம்.

இந்த பக்திக்கு விஷயமாயிருக்கிற பகவத் ஸ்வரூப ரூபகுண விபூதிகள் நிரதிசயாநுகூலங்களாக விருக்கிறபடியால் இதுவும் ப்ரீதிரூபையாகவும், பலரூபையாகவுமிருக்கும். இந்த விஷயம் "ஸ்மர்யமாணாத்யர்த்த ப்ரியத்வேந ஸ்வயமப்யத்யர்த்த ப்ரிய:" என்று ஸ்ரீ பாஷ்யத்தில் அநுக்ரஹிக்கப்பட்டது.

ஸ்ரீ பாஷ்யத்தில் பலாத்யாயத்தில் பக்தியை நிரூபித்திருக்கிறதும் இதைப்பற்றியதாம். இந்த விஷயம் சுருதப்ரகாசிகையில் வ்யக்தம். ஆதலால், "சேமுஷீ பக்திரூபா" என்று பிரார்த்திக்கப்பட்டது. விஷ்ணுபுராணத்திலும், "யா ப்ரீதி ரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ, த்வா மநுஸ்மர தஸ் ஸாமே ஹ்ருதயாந் மாபஸர்ப்பது", என்று ப்ரஹ்லாதனால் ப்ரார்த்திக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஆழ்வார்களும் பலவிடங்களில் ப்ரார்த்திக்கிறார்கள். இத்தை ஸாதனமாக்குவது பசிக்குண்ணும் பாலையே மருந்தாக்குவதுபோலு மிருப்பதொன்று. அந்த ஸாதனத்வமும் ஸ்வயம்ப்ரயோஜன ப்ரீதிஸாதனத்வரூபம். அதவா, ஜாநாதி, இச்சதி, யததே கரோதி என்கிற கிரமத்தில் பகவததிசயாதாயக கிருதி ஸந்ததி ரூபமான பலத்தில் இச்சாபரபர்யாய ரூபமான அபிநிவேசமாய்க்கொண்டு திருஷ்டவிதயா ஸாதனமாயிருக்கும்.

இப்படியன்றிக்கே அதிருஷ்டவிதயா மோக்ஷஸாதனமாக்குவது பர்த்ருபோகத்தை பார்யை வயிறுவளர்க்கைக் குறுப்பாக்குமாப்போலே யிருப்பதொன்று. ஆதலால் இந்த பக்திக்கு பலத்வாகாரமே ஸ்வாபாவிகம். ஸாதநத்வாகாரம் சேதனனுடைய புத்தியால் ஆரோபிதம். ஸ்ரீபாஷ்யத்தில் இதை ஸாதனமாக நிரூபித்திருப்பது அத்வைதமத நிராஸ தாத்பர்யத்தாலே. அதாவது—அத்வைதிகளால் வாக்யார்த்த ஜ்ஞானமானது மோக்ஷஸாதனமாக ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதால் அந்த வாக்யார்த்த ஜ்ஞானத்தைக் காட்டிலும் வேறுபட்டிருக்கிற பக்திரூபாபந்ந ஜ்ஞானமே மோக்ஷ ஸாதனமாமென்று பிரதிபாதித்தபடி; பக்திக்கு ஸாதனத்வ ஸ்தாபனத்தில் தாத்பர்யமில்லை. ஸ்ரீபாஷ்யம் ஸாத்ய பக்திபரமென்றே ஈட்டில்,

"வீடுமின்முற்றவும்" ப்ரவேசத்தில் வ்யவஹரிக்கப்பட்டிருக்கிறது. ஸாதநபக்திபரமாக நிரூபிப்பது சரமசுலோகத்துக்கு அங்கப்ரபத்திபர நிர்வாஹம்போலே.

இந்த பக்திக்கு ப்ரபத்தி அங்கமாயிருக்கும். கர்மயோகாசக்த னுக்கு கர்மயோகஸ்தானத்தில் ப்ரபத்தி அநுஷ்டிப்பதும் ஒன்றுண்டு; அப்படியே ஜ்ஞானயோகாசக்தனுக்கு ஜ்ஞானயோகஸ்தானத்தில் ப்ரபத்தி யனுஷ்டிப்பதுமொன்றுண்டு. அப்படியே பக்தியினுடைய நிஷ்பத்திக்காக ப்ரபத்தி யனுஷ்டிப்பது மொன்றுண்டு. இந்த விஷயத்தை "மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே" "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யேத்" என்று கீதாசார்யன் அருளிச்செய்தான். "ப்ரபந்நா தந்யேஷாம் நதிசதி முகுந்தோ நிஜபதம் ப்ரபந்நச்ச த்வேதா" என்று தேசிகனும் அருளிச்செய்தார்.

இப்படியிருந்துள்ள பக்தியோகத்தை அநுஷ்டிக்கிறவன் நித்யங்களாயும் நைமித்திகங்களாயுமுள்ள கர்மாக்களை பக்திக்கு அங்கங்களாகவே அநுஷ்டிக்கக்கடவன். அந்தக் கர்மாக்களை "விஹிதத்வாத் ......" என்கிற ஸூத்ரத்தின்படி விஹிதபுத்தியால் அநுஷ்டிக்கக் கடவனல்லன். அப்படி விஹிதத்வ புத்தியால் அநுஷ்டிக்கிறவன் முமுக்ஷுவல்லாத புபுக்ஷுவான சேதனனே. பக்தியோக நிஷ்டனுக்கு கர்மாக்களை பக்திக்கு அங்கமாகவே அநுஷ்டிக்கவேணுமென்பதற்கு ப்ரமாணம், "ஸஹகாரித்வேந ச" "அக்நிஹோத்ராதிது தத்கார்யாயைவ தத் தர்சநாத்" என்ற ஸூத்ரங்களாம். இவற்றின் அர்த்தம். பக்தியோகநிஷ்டன் பக்தியோகங்களுக்கு ஸஹகாரியாக நித்யநைமித்திக கர்மாக்களை அநுஷ்டிக்கக்கடவன்; அக்நிஹோத்ரம் முதலான நித்ய நைமித்திக கர்மாக்கள் பக்தியோக நிஷ்பத்திக்காகவே ஏற்பட்டவைகள் என்பதாம்.

அப்படி ப்ரமாணமிருப்பதால் பக்தியோகநிஷ்டன், விஹிதத்வபுத்தியால் அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் யோகதசையில் நித்ய நைமித்திகங்களுக்கு லோபம் வருவதால் ப்ரத்யவாயம் ஏற்படும், அப்படி ப்ரத்யவாயம் ஏற்படும் பக்ஷத்தில் "ஸந்த்யாஹீநோ அசுசிர் நித்யம்" என்கிறபடியே பக்தி யோகாநுஷ்டானத்துக்கு அநர்ஹனாகவே ஆவன். அங்கபுத்த்யா அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் அங்கியான பக்தியோகத்தினுடைய அநுஷ்டானத்துக்கு விரோதமில்லாமலிருக்கிறகாலத்தில் அநுஷ்டிக்கப்படவேண்டியதாகையால் இந்த தோஷம்

வாராது. இந்த விஷயத்தை சுருதப்ரகாசிகையில் "அங்க்யவிரோதேந அங்கமநுஷ்டேயம்" என்றும், யோகதசையி லேற்படுகிற நித்ய நைமித்திக கர்மலோபத்தால், ப்ரத்யவாயம் ஏற்படாதென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் விஹிதத்வ புத்த்யா அநுஷ்டித்தாலும் யோகதசையில் ஏற்படுகிற நித்ய நைமித்திக கர்மலோபத்துக்கு "யோகமேவ நிஷேவேத" என்கிற ப்ரமாணத்தின்படி மேல் அநுஷ்டிக்கப்படுகிற பக்தியோகமே ப்ராயச்சித்த மாகுமென்றால் அந்த பக்தியோகம் அபுத்திபூர்வமாக ஏற்படுகிற பாபத்துக்கு ப்ராயச்சித்தமாகுமே யல்லது, யோகதசையில் புத்திபூர்வமாகச் செய்யப்படுகிற கர்மலோபங்களுக்கு ப்ராயச்சித்தமாக மாட்டாது. இதையும் அபுத்தி பூர்வகம் என்று சொல்லும்பக்ஷத்தில் இந்த கர்மலோபத்துக்கு ஹேதுவான பக்தியோகத்தைத் திரும்பவும் அநுஷ்டிக்கவே கூடாது.

ஆதலால் பக்தியோகநிஷ்டன் நித்ய நைமித்திக கர்மாக்களை அங்கங்களாகவே அநுஷ்டிக்கக்கடவன். விஹிதபுத்த்யா அநுஷ்டிக்காமையால் யோகதசையி லேற்படுகிற நித்ய நைமித்திக கர்மலோபத்தால் ப்ரத்யவாயம் ஏற்படமாட்டாது.

ப்ரபன்னன் இந்த கர்மாக்களை கைங்கர்யபுத்த்யா அநுஷ்டிக்கக்கடவன். இதன் நிருபணம் ப்ரபத்தி நிருபணத்தில் விசதிகரிக்கப்படும். பக்தியோகநிஷ்டனுக்கு விஹிதத்வாகாரம் த்யாஜ்யம். அங்கத்வாகாரம் உபாதேயம். ப்ரபன்னனுக்கு விஹிதத்வாகாரமும் அங்கத்வாகாரமும் த்யாஜ்யம்; கைங்கர்ய த்வாகாரமே உபாதேயம்.

— பக்தியோக ப்ரபேத நிருபணம் —

இப்படி பக்தி ஸ்வரூபம் நிருபிக்கப்பட்டது. இந்த பக்தி, சாந்தோக்யம் முதலான உபநிஷத்துக்களில் அந்தந்த ப்ரகரணங்களில் சொல்லப்படுகிற அந்தந்த குணங்களோடு கூடிய ப்ரஹ்ம ஸ்வரூப விஷய பேதத்தாலேயும், ஸத்வித்யை முதலாகவுள்ள அநேக வித்யா பேதத்தாலேயும் வேறுபட்டிருக்கும். இப்படி பஹுப்ரகாரமான பக்திக்கு விஷயபேதமிருந்த போதிலும் "விகல்போ விசிஷ்ட பலத்வாத்" என்கிற ஸூத்ரத்தின்படி அபரிச்சின்ன ப்ரஹ்ம விஷயக அநுபவ ரூபமான மோக்ஷபலம் ஏகரூபமாயிருப்பதால் பல பேதமில்லை. இப்படி ஏகரூபமாயிருந்துள்ள பலத்துக்கு ஸத்வித்யை

முதலான வித்யைகள் அக்நியைக் குறித்து அரணிக்கட்டையும், நெருப்புக் கல்லும்போலே தனித்தனி காரணங்களாம்; குடத்துக்கு தண்டசக்கரங்கள் போலே இரண்டும் சேர்ந்து ஒன்றுபட்ட கார ணங்களாகா.

இப்படி வித்யைகளுக்கு ப்ரத்யேகம் காரணத்வ மிருக்கை யாலே அவை வேறுபட்ட பலவாக வழங்கப்படும். இப்படி அபரிச் சின்ன ப்ரஹ்மவிஷயக அநுபவரூபமான பலம் ஒரேபடியாயிருப்ப தால் நித்யர்களுக்கும், முக்தர்களுக்கும், ஈசுவரனுக்கும் பிராட்டிமார் களுக்கும் ஆனந்தத்தில் தாரதம்யமில்லை. ஆனாலும் அந்தந்த வித்யை களில் உபாஸ்யதயா விஹிதங்களான குணங்களே அநுபாவ்யங் களாம். அப்படி உபாஸனத்தில் விஷயமல்லாத குணங்கள் அநுபாவ்ய மாகாவாம். இந்த விஷயம் "யதாக்ரது ரஸ்மிங் லோகே புருஷோ பவதி" "தம் யதாயதோபாஸதே ததைவ பவதி" என்கிற சுருதி களில் விளங்கும். இவற்றின் அர்த்தம், யாவனொருவன் எப்படிப் பட்ட குணத்தோடு கூடிய ப்ரஹ்மோபாஸநத்தைப் பண்ணுகிறானோ அவன் அப்படிப்பட்ட குணத்தோடு கூடிய ப்ரஹ்மவிஷயகமான அநுபவத்தை அடைகிறான் என்பதும் ப்ரஹ்மத்தை எந்தப்ரகார முடையதாக உபாஸிக்கிறானோ? அந்தப்ரகாரமுடையதாகவே அநு பவிக்கிறான் என்பதுமாம்.

இப்படியே ஸ்ரீ பாஷ்யத்திலும் சுருதப்ரகாசிகையிலும் திருக் குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்த ஆறுயிரப்படியிலும் விளங் கும். ஸ்ரீபாஷ்யத்தில் மூன்றாவது அத்யாயம் மூன்றாவது பாதத்தில் "ஏக ஆத்மந: சரீரே பாவாத்" 'வ்யதிரேகஸ் தத்பாவ பாவித்வாத்" என்கிற ஸூத்ரங்களில் சேதனன் ப்ரஹ்மஸ்வரூபத்தை உபாஸிக்கும் போதும், அந்த ஸ்வரூபத்துக்கு விசேஷணமான தன்னை யுபாஸிக் கும்போதும் தன்னுடைய அபஹதபாப்மத்வாதி குணங்களோடு கூடிய ஸ்வரூபத்தையே உபாஸிக்கக்கடவன். அந்த அபஹதபாப் மத்வாதி விசிஷ்ட ஸ்வரூபமே அநுபாவ்யமாயிருப்பதால். என்று அநுபாவ்யமாயிருப்பதே உபாஸ்யமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே கார்யாதிகரணத்தில் "அப்ரதீகாலம்பநாந்நயதீதி" என்கிற ஸூத்ரத்தில் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கு ப்ரஹ்மப்ராப்தியும் அபுநராவ்ருத்தியும் சொல்லப்பட்டிருப்பதால் ப்ரஹ்மாத்மக ஸ்வாத் மோபாஸநமே ஏற்படவேண்டுமென்று ப்ராப்யாநுகுணமாக உபா ஸநம் விதிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே வேதாந்ததீபத்திலும்

சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ஜந்மாத்யதிகரண சுருதப்ரகாசிகையில் "விபூதே:ச ஜிஜ்ஞாஸ்யாந்தர்பாவ உபாஸா த்ரைவித்ய தத்க்ரது ந்யாயாப்யாம் ஸேத்ஸ்யதி" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு அர்த்தம், உபயவிபூதி விசிஷ்டப்ரஹ்மத்தையே அடையவேண்டுமாகையால் அதுவே உபாஸ்யமாகவேணும் என்று தத்க்ரது ந்யாயத்தாலேயும், "உபாஸாத்ரைவித்யாத்" என்கிற ஸூத்ரத்தாலேயும் ஸித்திக்கிறது என்பதாம். அப்படி "ஈக்ஷதிகர்ம வ்யபதேசாத் ஸ:" என்கிற ஸூத்ரத்தில் த்யாநமும் ஈக்ஷணமும் ஏகவிஷயகமென்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே ஆறாயிரப்படியில் நாலாவதுபத்து இரண்டாந் திருவாய்மொழியில் "கோதில வண்புகழ் கொண்டுசமயிகள். பேதங்கள் சொல்லிப் பிதற்றும்பிரான் பரன்" என்கிற பாட்டின் வியாக்யாநவஸரத்தில், ஓரோர் குணவிசேஷத்தை அனுபவித்தால் இந்த குணமல்லது மற்றொன்றறியேன் என்று அந்த குணத்துக்குத் தோற்று அடிமையாயிருக்கும் திவ்ய புருஷர்களாலே இதராநுபூதகுணங்களைக் காட்டிலும் ஸ்வாநுபூத குணத்துக்கு வைலக்ஷண்யத்தை விவசராய்க்கொண்டு பரஸ்பரம் சொல்லிப் பிதற்றப்படுகிற என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி அநேக ப்ரமாணங்களால் உபாஸ்ய குணங்களே அநுபாவ்யங்களென் றறியத்தகும். இப்படிச் சொல்லும்பக்ஷத்தில் "ஸர்வம் ஹ பச்ய:பச்யதி ஸர்வமாப்நோதி ஸர்வச:" என்கிற சுருதியில் சேதனன் முக்திதசையில் ஸர்வ குணங்களையும் ஸாக்ஷாத்கரிக்கிறான் என்றும், அனுபவிக்கிறானென்றும் சொல்லுகிறபடியால் இது கூடும்படி யெங்ஙனேயென்னில், இந்த ஸர்வசப்தம் 'ஸர்வேப்யோ தர்சபூர்ண மாஸௌ" என்னுமாப்போலே உபாஸ்யகுண ஸமுதாய பரமாம். அல்லது ஸர்வவித்யாநுயாயியான அநந்தத்வத்தில் ஸாமாந்ய ரூபேண ஸர்வகுணங்களும் விஷயமாகையால் ஸர்வகுணங்களும் உபாஸ்யங்களாயும் அநுபாவ்யங்களாயு மிருக்கலாம். அங்ஙனமன்றிக்கே, எந்த உபாஸனத்தில் எந்த குணங்கள் ப்ரகாரங்களாயும் விசேஷ்யங்களாயுமிருக்கும் அந்த குணங்கள் உபாஸநரூபமான அநுபவதசையில் ப்ரகாரங்களாயும் விசேஷ்யங்களாயுமிருக்கும் என்றும் சொல்லலாம். இந்த விஷயம் வேதாந்ததீபத்தில் "ஏகஆத்மந: சரீரே பாவாத்" என்கிற ஸூத்ர வ்யாக்யாநவஸரத்தில் 'அந்யதா ப்ராப்ய உபாஸ்யயோ: ப்ரகாரபேதாத் யதாக்ரதுர ஸ்மிந்நிதி விருத்யதே" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் அனந்தகருட விஷ்வக்ஸேநாதிகளுக்கு வ்யவஸ்தி தங்களாயுள்ள கைங்கர்யங்களில் மற்ற நித்யர்களுக்கும் முக்தர்களுக்கும் ஸகல கைங்கர்யங்களும் செய்ய யோக்யதையிருப்பதால் அதிகாரமிருந்தபோதிலும் பகவத் ஸங்கல்ப விசேஷத்தாலே ருசியில்லாமலிருந்தபோதிலும் எல்லாருக்கும் ஸ்வாமியான பகவத் விஷயத்தில் அந்தந்த அதிகாரிகளால் செய்யப்படும் கைங்கர்யங்களாலுண்டான பகவந்முகோல்லாஸாநுபவ ஜனிதாநந்தம் ஐகரஸ்யத்தாலே எல்லாருக்கும் ஸமமாயிருப்பதால் ஆனந்தஸாம்யம் ஏற்படுவதுபோலே அநுபவ விஷயத்திலும் அந்தந்த குணவிசிஷ்ட ப்ரஹ்மோபாஸந ஜந்ய பகவத் ஸங்கல்பத்தாலே அந்தந்த குணவிசிஷ்ட ப்ரஹ்மாநுபவம் ஏற்பட்டாலும் கீழ் நிருபித்தபடி ஃபல தாரதம்யம் இராது.

அநுபாவ்யகுணங்கள் ப்ரத்யேகம் அபரிச்சிந்நங்களாகையாலே மற்ற குணங்களில் நெஞ்சு செல்ல ப்ரஸக்தியில்லாமையால் உபாஸ்ய குணங்களே அநுபாவ்யங்களாகலாம். ஆதலால் ஸர்வஜ்ஞதைக்கும் குறைவில்லை. இப்படியான ப்ரகாரத்தாலேதான் பெரியாழ்வார் முகப்பில் ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களில் திருவுள்ளம் செல்ல, ஜ்ஞானசக்திகளில் அறிவு செல்லாது மங்களாசாஸநத்தில் ப்ரவர்த்தித்திருப்பதாலும், அப்படியே நித்யவிபூதியில் திருவனந்தாழ்வான், "ஆங்காரவார மதுகேட்டழலுமிழும்" என்கிற பாட்டின்படி ஈசுவரனுடைய ஜ்ஞானசக்திகளில் அறிவு செல்லாமல் அஸ்தாநே பயசங்கையைப் பண்ணுகிறாரென்று சொல்லப்பட்டிருப்பதாலும், இதை அனுஸரித்தே பட்டரும் "ஸ்நேஹாத் அஸ்தாந ரக்ஷா வ்யஸநிபிரபயம் ஸங்கசக்ராசார் முக்யை:" என்று அருளிச்செய்திருப்பதாலும், அந்தந்த வித்யைகளில் உபாஸ்யங்களாக ஏற்பட்ட குணங்களே அநுபாவ்யம் என்னுமிது உபபன்னமாம்.

ஆனால் தேசிகன் "உபாஸித குணாதேர்யா ப்ராப்தாவப்ய பஹிஷ்க்ரியா, ஸா தத்க்ரது நயக்ராஹ்யா நாகாராந்தர வர்ஜநம்" என்று அருளிச்செய்திருப்பது கீழ் நிருபித்தபடி ஸாமாந்யரூபமாகவாவது, ப்ரதி ஸ்வீகாரரூபமாகவாவது எல்லா குணங்களும் அநுபாவ்யங்களாயிருப்பதால் விரோதமில்லை.

இப்படியிருந்துள்ள பக்தி ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ரமான ஸ்வரூபத்துக்கு விருத்தையன்று. (ஆகையால் ஜ்ஞானமுள்ள

வர்களுக்கும் அரிதிலடையத்தக்க பக்தியுள்ளவர்களுக்கும் ப்ரபத்தியில் அதிகாரம் உண்டாகத் தடையில்லை.) ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ரமாயிருக்கையாவது "யஸ்யாத்மா சரீரம்" என்கிற சுருதி ப்ரகாரம் சேதநஸ்வரூபம் ஈசுவரனுக்கு சரீரமாகையால் அந்த சரீர ரக்ஷணம் சரீரியான ஈசுவரனுக்கே ப்ராப்தமாயிருக்கையாலே ஸ்வ ரக்ஷணே ஸ்வாந்வயஸூசகமான உபாயாநுஷ்டானத்தில் ப்ராப்தியில்லாமை. அப்படியன்றிக்கே கேவல பரதந்த்ரமாயிருக்கையாக வைத்து அவன் விதித்த உபாயத்தை அவன் கொடுத்த கர்த்ருத்வ சக்தியைக்கொண்டு அநுஷ்டிக்கை எனினுமாம்.

இவற்றுள் கீழ் நிருபித்த அத்யந்த பாரதந்த்ரியமே சேதனனுக்கு நிஷ்க்ருஷ்ட ஸ்வரூபம். இந்த விஷயத்தைத் திருக்குருகைப் பிரான்பிள்ளான் "தன்னாலவரும் நன்மை விலைப்பால்போலே; அவனாலவரும் நன்மை முலைப்பால்போலே" என்று அருளிச்செய்திருக்கிறார். இங்ஙனமன்றிக்கே ஸ்வதந்த்ரராய்க்கொண்டு செய்யும் உபாயாந்தரங்களை "மதிராபிந்து மிச்ரமான சாதகும்ப மய கும்ப கத தீர்த்த ஸலிலம்போலே அஹங்கார மிச்ரமான உபாயாந்தரம்" என்று தியாஜ்யகோடியில் அருளிச்செய்திருக்கிறார். உபாயாந்தர நிஷ்டனுக்கு உபாயாந்தர ப்ரவ்ருத்தி பராதீந கர்த்ருத்வ ஜ்ஞானமடியாகவே வந்திருப்பதால் அஹங்கார மிச்ரமான என்கிற இடத்தில், ஆனால் என்று கூட்டி யத்யர்த்தமாகச் சொல்வது பொருந்ாது.

இந்த அத்யந்த பாரதந்த்ரியம் திருமந்த்ரத்தில் நம: சப்தத்தால் ஏற்படுகிற அநந்ய சரணத்வரூபம். அந்த அநந்ய சரணத்வமும் கீழ் நிருபித்தபடி உபாயாந்தராநுஷ்டானத்துக்கு யோக்யதையில்லாமை. இப்படியிருந்துள்ள அநந்ய சரணத்வத்தை ப்ரபத்திக்கு அதிகாரமாக "அநந்ய சரணத்வாதே: அதிகாரஸ்ய ஸித்தயே, தாரஸ்ய நமஸ: சோபெள ஸாரெள தேசிக தர்சிதெள" என்று தேசிகன் அருளிச்செய்தார்.

இந்த அர்த்தத்தை நம்மாழ்வாரும் பெரியதிருவந்தாதியில் "நெறிகாட்டிநீக்குதியோ நின்பால்கருமா, முறிமேனிகாட்டுதியோ" என்றருளிச்செய்தார். இதன் அர்த்தம், நளன் தமயந்திக்கு வழி காட்டினாற்போல் உபாயாந்தரங்களைக்காட்டி உன்னைவிட்டு நீங்கும்படி செய்கிறாயோ? அல்லது உன்னுடைய திருமேனியை நீயே நான் காணும்படி செய்கிறாயோ? என்பது. "யமேவைஷ வ்ருணுதே

தோ லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் " என்று சுருதியிலும் வ்யக்தமாகச் சொல்லப்பட்டது. இந்த சுருதி ஈசுவரனுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்துக்கு ப்ரமாணம் என்பது ஸுஸ்பஷ்டம். "உபபத்தேச்ச" என்கிற ஸூத்ர வ்யாக்யாநாவஸரத்தில் பாஷ்யகாரர் "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் " என்றும். "அநந்யோபாயத்வ ச்ரவணாத் " என்றும் அருளிச்செய்திருக்கிறார். திருமந்த்ரத்தில் இருக்கும் நம: சப்தத்திற்கு அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதையில் "பாதோ நகார உத்திஷ்ட:" என்கிற சுலோகத்தாலே ஈசுவரனே உபாயமென்று வ்யக்தமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியே ப்ரபத்திக்கு அதிகாரிகளை விதிக்கிற "இதம் சரணமஜ்ஞாநாம்" என்கிற சுலோகத்தில் "இதமேவ விஜாநதாம்" என்று விஜாநத் சப்தத்தாலே ஈசுவரனுக்கு அத்யந்த பரதந்த்ரம் சேதன ஸ்வரூபம் என்கிற ஜ்ஞானமுடையவனுக்கு என்று அர்த்தம் விவக்ஷிதமாகையால் பாரதந்த்ரிய ரூபஸ்வரூப ஜ்ஞாநமுடையவர்களுக்கு ப்ரபத்தியில் அதிகாரம் என்று ஏற்படுகிறது. ஆனால் "விஜாநதாம்" என்கிற இடத்தில் உபாயாந்தர விஷயத்தில் ஜ்ஞானவான்களாயிருந்தும் அதை அனுஷ்டிக்க சக்தியில்லாதவர்கள் என்று அர்த்தம் சொல்லவேணும். அப்படி அர்த்தத்தை விவக்ஷிக்காமலிருந்தால் விசேஷ ஜ்ஞானமுள்ள வ்யாஸாதிகள் பக்தியோக நிஷ்டர்களாகவேயிருப்பதால் அந்த அர்த்தம் அநுபபந்நமாகும் என்னில் "விஜாநதாம்" என்கிற இடத்தில் அசக்தியைச் சொல்லும்பக்ஷத்தில் அது லக்ஷ்யார்த்தமாகும். வாச்யார்த்தம் உபபந்நமாமிடத்தில் லக்ஷணை கூடாதாகையால் அந்த லக்ஷ்யார்த்தம் அநுபபந்நமாம். வ்யாஸாதிகள் அதிகாரி புருஷர்களாகையால் அந்த அதிகாராரம்பக ப்ராரப்த கர்மாவினுடைய ப்ராபல்யத்தாலே ப்ரபத்தியி லிழிந்தார்களில்லை. ஆதலால் ப்ரபத்த்யுபதேசத்துக்கு உபயுக்தமான ஜ்ஞாநாதிக்யம் இருந்தபோதிலும் அநுஷ்டாநௌபயிகமான ஜ்ஞானபூர்த்தி இல்லையென்பதை அவசியம் அங்கீகரிக்கவேணும். அங்ஙனமன்றிக்கே பக்த்யாத்யநுஷ்டான ஜ்ஞானசக்தி பரிபூர்ணர்களான அர்ஜுனன் நாதமுனிகள் போல்வார்கள் ப்ரபத்தியை அனுஷ்டிக்க ப்ரஸக்தியில்லை.

ஆனால் விளம்பாக்ஷமதையாலே ப்ரபத்தியில் இழிந்தார்களோ வென்னில் அவதார ரஹஸ்ய ஜ்ஞாநாங்க பக்தியோகாநுஷ்டானத்

தால் அந்த சரீராவஸானத்திலேயே "த்யக்த்வா தேஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்கிற ப்ரமாணத்தின்படி பலம் ஏற்படுகிறபடியால் ப்ரபத்தியில் இழிய ப்ரஸக்தியில்லை. ஆனால் அசக்தர்களுக்கு அதிகாரம் இந்த சுலோகத்தில் எந்த பதத்தால் ஏற்படுகிறதென்னில் "இதம் சரண மஜ்ஞாநாம்" என்கிறவிடத்தில் "அவித்யாத:" என்கிற பட்டர் ஸ்ரீஸூக்தியின்படி வித்யாபாவவான் களைச் சொல்லுகையாலே "த்வே வித்யே வேதிதவ்யே" என்கிற சுருதியின்படி சாஸ்த்ர ஜந்யஜ்ஞானத்தையும் பக்திரூபாபந்ந ஜ்ஞா னத்தையும் வித்யாசப்தம் சொல்லுகையாலே அசக்தியாலும் சாஸ்த்ர பர்யுதாஸத்தாலும் ஏற்படுகிற வித்யாபாவத்தைச் சொல்லுகிறபடி யால் சக்தியாலேயே இந்த அஜ்ஞபதமானது அசக்தர்களையும் சாஸ்த்ர பர்யுதஸ்தர்களையும் சொல்லுமாகையாலும் "விஜாநதாம்" என்கிற இடத்தில் லாக்ஷணிகமாக அசக்தியைச் சொல்லுமதிற்காட் டில் இவ்விடத்தில் அசக்தியைச்சொல்லுவதே ஸ்வரஸமாகையாலும் விஜாநதாமென்கிற பதம் அத்யந்த பாரதந்த்ரிய ஜ்ஞானமுடையவர் களையே சொல்லுவதென்பது உசிதம். இந்த சுலோகத்துக்கு வ்யாக் யானரூபமாக நடாதூரம்மாள் அருளிச்செய்த "ஸத்ருசோபாய வை துர்யம் ஸாக்ஷாத் பகவதோ விதந், ஸர்வஜ்ஞ: சரணம் யாதி யோக மார்க்க பராங்முக:" என்கிற சுலோகத்தில் விஜாநதாம் என்கிற பதத்திற்கு அர்த்தமாக. பகவானுடைய ஸத்ருசோபாய வைதுர்யத் தை அறிந்த ஸர்வஜ்ஞனாயிருக்கிறவன் யோகமார்க்கத்தில் பராங்முக னாய்க்கொண்டு ஈசுவரனையே சரணமாக அடைகிறானென்று திருவுள் ளம்பற்றியபடியாலும் "யோகமார்க்க பராங்முக:" என்று சொல்லு கையாலே பக்த்யநுஷ்டானத்தில் சக்தியிருக்கச் செய்தேயும் அந்த அநுஷ்டானத்தில் அநாதரம் தோற்றுகையாலும் ஸத்ருசோபாய வைதுர்ய மென்கிறவிடத்தில் ஈசுவரனுக்கு ஸத்ருசமான உபாய மில்லை: ஈசுவரனே உபாயம்: அந்த உபாய ஸ்வீகாரத்தைத் தவிர வேறு உபாயத்தை அநுஷ்டிக்கக் கடவனல்லன் என்று அர்த்தம் ஏற்படுவதால் "விஜாநதாம்" என்கிற பதமானது ஸ்வரூப விருத் தத்வஜ்ஞானமுடையவர்களையே சொல்லுகிறது.

இப்படியே பட்டர் ஸ்ரீஸூக்தியிலும் 'அவித்யாதோ தேவே பரிப்ருடதயா வா விதிதயா" என்கிறவிடத்தில் "பரிப்ருடதயா விதி தயா" என்கிற இது விஜாநத் பதத்துக்கு அர்த்தமாக ஏற்படுகிறபடி யால் அந்த விஜ்ஞானம் ஸர்வேசுவரன் பரிப்ருடன் என்கிற ஜ்ஞான

மாகிறது. அந்த பரிப்ருடத்வமும் ஸர்வப்ரகாரத்தாலும் உத்கர்ஷத்தைச் சொல்லுகிறபடியால் அதில் அநந்ய ஸாத்யத்வமும் உத்கர்ஷமாகையால் அந்த அநந்ய ஸாத்யத்வ ஜ்ஞானமுள்ளவனுக்கு இதரோபாய ப்ரவ்ருத்தி கூடாமையால் அந்த விஜாநத் பதத்தில் ஏற்படுகிற ஜ்ஞானமும் இதனுடைய பலிதார்த்தமான ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமாகவே இருக்கிறது.

மேலும் ப்ரதமாசார்யையான பிராட்டி ஸர்வசக்தையாயிருக்கச்செய்தேயும் பெருமாளுக்கு அத்யந்த பாரதந்த்ரிய ரூபமான ஸ்வரூப ஜ்ஞானமுடையவளாகையாலே "நத்வா குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹ தேஜஸா" என்கிற சுலோகத்தின்படி ராவண நிரஸநத்தில் ப்ரவர்த்திந்தாளில்லை. மேலும் "நரஸ்ய புத்தி தௌர்பல்யாத் உபாயாந்தர மிஷ்யதே" என்கிற சுலோகத்தில் உபாயாந்தர ஸ்வீகாரத்துக்குக் காரணம் புத்தி தௌர்ப்பல்யமென்று சொல்லப்படுகிறது. இந்த புத்தி தௌர்ப்பல்யமானது புத்தியினுடைய சாஞ்சல்யம்; அதாவது—சேதனஸ்வரூபம் பகவதத்யந்த பாரதந்த்ரிய மென்கிற ஜ்ஞானம் அப்ராமாண்ய சங்காக்ரஸ்தமாயிருக்கை. இப்படிச் சொல்லாமல் ஒருவன் அசக்தனுயிருந்தபோதிலும் துராசாரவசத்தால் உபாயாந்தரத்தில் அதிகாரமுண்டு என்று சொல்லும்பக்ஷத்தில் தௌர்ப்பல்ய சப்தம் ப்ரமபரமென்று சொல்லுவது அநுபபந்நமாகையாலும் அசக்தன் துராசையால் உபாயாந்தரத்தில் ப்ரவர்த்தித்தால் அசக்தியாலேயே உபாயாந்தரத்தில் நின்றும் நிவ்ருத்தனுய் விடுவதாலும் விதிக்கு ப்ரயோஜனமுமில்லை; அசக்த சப்தாத்யாஹாரதோஷமும் ஏற்படும். விசேஷஜ்ஞர்களான வ்யாஸாதிகளுக்கு ஜ்ஞாநமாந்த்யத்தைச் சொல்லுமதிற்காட்டிலும் அத்யாஹாரதோஷம் ஸஹ்யம் என்று சொல்லில், அதற்கு உத்தரம் கீழே சொல்லப்பட்டது. மேலும் அவர்கள் சாஸ்த்ர ப்ரதாநாதிகளால் ஜ்ஞானமுள்ளவர்களாயிருந்தபோதிலும் உபகாரகராவர்களேயன்றி உத்தாரகர்களாகார். ஆகையாலேதான் நம்முடைய குருபரம்பரையிற் சேர்ந்தார்களில்லை. ஆழ்வாராசார்யர்கள்போலே விசேஷித்து கௌரவ்யராகவுமில்லை. "தஸ்மை நமோ முநிவராய பராசராய" என்று ஆளவந்தார் அருளிச்செய்ததும் கேவலோபகாரகத்வ ப்ரயுக்தம்.

அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதையிலும் "அநைச்வர்யாத் ஸ்வபாவஜாத்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் அநைச்வர்ய

மென்பது ஈச்வரத்வாபாவம்; அதாவது ஸ்வாதந்த்ரியாபாவ ரூப மான பாரதந்த்ரியம். ஸ்வபாவஜம் என்கையாலே அது ஸ்வரூப ப்ரயுக்தமென்று பெறப்படுகிறது. தேசிகனும் "ஸ்ரீரங்கேசுவர யாவ தாத்ம நியதத்வத் பாரதந்த்ரியோசிதா" என்று ப்ரபத்தி யாவதாத்ம நியதமான பாரதந்த்ரியத்துக்கு உசிதை என்று அருளிச்செய்தார். உபாயாந்தராநுஷ்டான யோக்யதையில்லாமையாகிற பாரதந்த்ரியம் அசக்தியாலே யேற்படலாமேயென்னில், அப்போது 'யாவதாத்ம நியத' என்றருளிச் செய்யவேண்டுவதில்லை. இந்த சுலோகத்தி னுடைய வ்யாக்யானத்தில் அவர் குமாரரான நயனாராசார்யர் "பக்திஸ்து கேவல பாரதந்த்ரியோசிதா, ப்ரபத்திஸ்து குருபாயா சக்தே: அத்யந்த பாரதந்த்ரியோசிதா" என்று அருளிச்செய்திருக்கிறார்.

குருபாயாசக்திக்குக் காரணம் கீழ் நிரூபிக்கப்பட்ட அத்யந்த பாரதந்த்ரிய ஜ்ஞானமுமாகலாம். தேசிகன், ஸ்வாதிகார விருத்த மென்று பக்தியை அருளிச்செய்திருக்கிறார்; அந்த அதிகாரமும் "அநந்ய சரணத்வாதே ரதிகாரஸ்ய ஸித்தயே" என்கிற சுலோகத்தின் படி திருமந்த்ரைகதேசமான நம: சப்தத்தின் அர்த்தமாயுள்ள அநந்ய சரணத்வரூபமான உபாய பாரதந்த்ரியம் என்று ஏற்படுகிறது. ஸ்வரூபபரமான திருமந்த்ரத்தில் நம: சப்தார்த்தமாயிருக்கிற அநந்ய சரணத்வமும் ஸ்வரூபமாகையால் அந்த அநந்ய சரணத்வம் ஜ்ஞாய மானமாய்க்கொண்டு ப்ரபத்திக்கு அதிகாரமாகிறது.

அப்படியன்றிக்கே அசக்த்யா ப்ராப்தமான அநந்யசரணத்வத் தைச் சொல்லுகிறதென்பது அநுபபந்நம். ஆகவே பக்தி, கீழ்க் குறிக்கப்பட்ட ஸ்வரூபத்துக்கு விருத்தையென்றும் ப்ரபத்தி ஸ்வ ரூபத்துக்கு அநுரூபை யென்றும் ஏற்படுகிறது. இதைப்பற்றியே "நார்ஹந்தி சரணஸ்த்தஸ்ய கலாம் கோடிதமீமபி" என்று சரணாகதி நிஷ்டனை உத்கிருஷ்டனாகச் சொல்லியிருக்கிறது.

அப்படியல்லாமல் பக்தி சக்தாதிகாரை, ப்ரபத்தி அசக்தாதி காரை என்று சொல்லும்பக்ஷத்தில் ப்ரபத்தி கௌணோபாயமாக ஏற்படுவதால் முக்யமான வாருணஸ்நானத்தில் அசக்தனாயிருக்கிற வனுக்குக் கௌணமான மந்த்ரஸ்நானமும் உத்கிருஷ்டமென்று ஏற்படும். மேலும் முக்யோபாயத்தில் அசக்தனாயிருக்குமவன் கௌணோபாயத்தை அநுஷ்டித்தபின்பு சக்தியுண்டாகில் முக்கியோ பாயத்தை அநுஷ்டித்தால் ப்ரத்யவாயமில்லையென்பது சாஸ்த்ரஸித்த

மாயிருக்க, கௌஞ்ஜோபாயமான ப்ரபத்தியை அநுஷ்டித்தபின்பு சக்தியுண்டாகி பக்தியை அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் "நிஷ்ட்டயா ஹீயதே நயா" என்கிற சுலோகத்தின்படி ப்ரத்யவாயம் ஏற்படுவதாகச் சொல்லுவதும் விருத்தமாம்.

ஆனால் உபாயாந்தராநுஷ்டானத்தில் அசக்தனுயிருக்குமவன் உபாயாந்தரமான பக்தியை அநுஷ்டிக்க எனக்கு சக்தியில்லை, நீயே அந்த பக்திஸ்தானத்தில் நின்று எனக்குப் பலத்தைக் கொடுக்க வேணுமென்று குருபாய பரஸமர்ப்பணத்தைப் பண்ணினபடியால் ஈசுவரன் பக்திஸ்தானத்தில் நின்று பலத்தைக் கொடுக்கிறான்: ஆதலால் இவன் குருபாய பரஸமர்ப்பணம் பண்ணினபின்பு உபாயாந்தர ஸ்தானுபத்தியாகிற அதிசயம் ஈசுவரனுக்கு ஏற்படுகிறது. இவனுக்கு சக்தியுண்டாகி பக்தியை அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் ஈசுவரனுக்கு ஏற்பட்ட உபாயாந்தர ஸ்தாநாபத்தியாகிற அதிசயம் போய்விடுகிறபடியால் ஈசுவரனுக்கு அதிசயத்தைப் பண்ணுகையாகிற சேஷத்வ ரூபமான ஸ்வரூபத்துக்கு ஹாநி ஏற்படுகிறபடியால் ப்ரபத்தி யநுஷ்டித்தபிறகு சக்தியுண்டானலும் பக்தியை அநுஷ்டிக்கக் கடவனல்லன். அப்படி யநுஷ்டித்தானகில் அவனுக்கு ப்ராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லும்பக்ஷத்தில். பல கரணத்வ ரூபமான உபாயத்வம் அசேதனத்துக்கே யுள்ளதாகையால் அந்த அசேதன தர்மமான உபாயத்வத்தை ஈசுவரனுக்குச் சொல்லும் பக்ஷத்தில் அபசாரமாம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபாயாந்தர ஸ்தாநாபத்தியை அதிசயமாக்குவது எங்ஙனே ?

ஆனாலும் உபாயாந்தர ஸ்தாநாபத்தி என்பதற்கு அர்த்தம் சேதனன் குருபாய பரத்தை ஸமர்ப்பித்த பிறகு அந்த குருபாய பரத்தை அங்கிகரித்து தான் ரக்ஷிக்கிறேன் என்கிற ஸங்கல்பத்துக்கு ஈசுவரன் ஆச்ரயமாகவே இது ஈசுவரனுக்கு அதிசயமாகையால் சேதனன் பக்தியை அநுஷ்டித்தால் அந்த ஸங்கல்பத்துக்கு ஹாநி யுண்டாவதால் சேதனனுடைய சேஷத்வ ரூபமான ஸ்வரூபத்துக்கு ஹாநி ஏற்படும். ஆகையால்தான் பக்தியநுஷ்டானத்தில் ப்ராயச்சித்த விதி யேற்பட்டிருக்கிறது என்று சொல்லுவதும் உபபந்நமன்று.

குருபாய பரஸமர்ப்பணம் என்பது குருபாயத்தை யநுஷ்டிக்க சக்தனல்லேன் என்கிற ஜ்ஞானவிசேஷமன்றி வேறு பரம் தனித்திருப்பதாகவும் அந்த பரத்தில் தன்னுடைய ஸ்வத்வம்

நிவ்ருத்தமாகி ஈசுவரனுக்கு ஸ்வத்வத்தை யுண்டாக்குகையாகிற ஸமர்ப்பணமாகாது; தான் அசக்தியாலேயாதல், ஸ்வரூப விருத்த ஜ்ஞானத்தாலேயாதல் பக்தியநுஷ்டானத்தில் ஏற்படுகிற யோக்யதை யில்லாமையை அறிந்து, அந்த அறிவை முன்னிட்டு தன்னுடைய ரக்ஷணத்தில் தான் அநர்ஹனுயிருப்பதை ஜ்ஞாபித்து, நீயே ரக்ஷகனுக வேணுமென்கிற ப்ரார்த்தனையே குருபாய பரஸமர்ப்பண மென்னப் படும். இந்த குருபாய பரஸமர்ப்பணமும் இவனுக்கு அதிகாரமாகவே யமைகிறது. அல்லாமல் உபாயமாகும் பக்ஷத்தில் இதுவே ரக்ஷாபர மாகும். அப்பொழுது ரக்ஷாபர ஸமர்ப்பண ஸ்வரூபத்திற்கு ஹாநி ஏற்படும். ஆகையால், தான் அத்யந்த பரதந்த்ரனுை தன்னுடைய ரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாமல் அவனை நிரபேக்ஷ ரக்ஷகனுக அத்யவ ஸித்து அப்படியே ப்ரார்த்திப்பது ப்ரபத்தியென்று சொல்லவேணும். எப்படியிருந்தாலும் உபாயாந்தர ஸ்தாநாபத்தியாகிற அதிசயத்திற்கு உபாயாந்தராநுஷ்டானம் பஞ்ஜகமென்று சொன்னுலும் பக்தியநுஷ் டானம் சேஷத்வ ஸ்வரூபத்துக்கு விருத்தமென்றே ஏற்படுகிறது. அதிகாரவிருத்தமென்று சொன்னபோதிலும் அநந்ய சரணத்வ ரூப மான உபாய பாரதந்த்ரியம் ஜ்ஞாயமானமாய்க்கொண்டு அதிகாரமாக ஏற்படுகிறபடியால் அந்த அநந்ய சரணத்வ ரூபமான பாரதந்த்ரியமும் ஸ்வரூப பரமான திருமந்த்ரத்தில் மத்தியமபதமான நம: சப்தத்துக்கு அர்த்தமாகையால் அந்த அநந்ய சரணத்வமும் ஸ்வரூபமே ஆதலால் ஸ்வஞ்ச தத் ரூபஞ்ச ஸ்வரூபம் என்று ஸ்வாஸாதாரண தர்மமான அநந்ய சரணத்வத்திற்கு உபாயாந்தரம் விருத்தமாகையால் உபாயாந் தரம் ஸ்வரூப விருத்தமென்னத் தட்டில்லை.

இதை யநுசரித்தே தேசிகனும் "ஆர்த்தேஷ்வாசுபலா" என் கிற சுலோகத்தில் பக்திக்கும் ப்ரபத்திக்கும் வ்யாவ்ருத்தி சொல்லு கிறவிடத்தில் "ஸ்ரீரங்கேச்வர யாவதாத்ம நியதத்வத் பாரதந்த்ரியோ சிதா" என்பதில் "யாவதாத்ம நியத" என்று பாரதந்த்ரியத்தை யருளிச்செய்து அந்த பாரதந்த்ரியத்துக்கு ப்ரபத்தி உசிதையென்றும் பக்தி அநுசிதையென்றும் அருளிச்செய்திருக்கிறுர். இனி இவற்றின் வக்தவ்ய விசேஷங்கள் பலவாயிருப்பதால் விஸ்தரபயத்தால் நிறுத்தி விட்டேன்.

இனி, பக்தி ஸ்வரூப விருத்தை யென்னுமிடத்தில் அநந்ய சரணத்வ ரூபமான உபாய பாரதந்த்ரியமாகிற ஸ்வாஸாதாரண தர்மத்

திற்கு விருத்தையென்று ஏற்படுகிறபடியால் அந்த விரோதமானது இப்படிப்பட்டதென்று நிரூபிக்கப்படுகிறது. "ந ஸ்த்ரீ ஸ்வாதந்த்ரிய மர்ஹதி" என்று ஸ்த்ரீக்கு உள்ள பாரதந்த்ரியமானது அவளுக்கு பும்வத்பாவ மேற்பட்டால் அது நிவ்ருத்தமாமாப்போலேயும் அக்நிக்குள்ள தாஹக சக்தியானது மணிமந்த்ரங்களுடைய ஸாந்நித்யத்தில் நிவ்ருத்தமாமாப்போலேயும் உபாயாந்தர ப்ரவ்ருத்தியும் நிவ்ருத்தமாம். பாரதந்த்ரியம் ஸ்வரூபாநுபந்தியானாலும் அதனுடைய பலோபதாந சக்தியானது ஸ்வாதந்த்ரிய மேற்படும் பக்ஷத்தில் நிவ்ருத்தையாகலாம். அன்றிக்கே தான் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயத்திற்கு அநர்ஹன் என்கிற ஜ்ஞானமுண்டானால் ஸ்வரக்ஷணே ஸ்வாந்வய ஸூசகமான உபாயாந்தர ப்ரவ்ருத்தி ஸம்பவியாதாகையால் அதைப் பற்றியும் ஸ்வரூப விருத்தை என்றும் சொல்லலாம். அதன்றி நித்யமான ஆத்ம ஸ்வரூபத்துக்கு விருத்தை யென்பது அர்த்தமன்று. ஆனால் பக்தியை உபாயமாக விதிக்கும் சாஸ்த்ரங்களுக்கு ப்ராமாண்யம் எங்ஙனேயென்னில், ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமில்லாத அதிகாரிகளைக் குறித்து பக்திவிதி ஏற்பட்டபடியால் அவர்கள் விஷயத்தில் ப்ரமாணமாகலாம். "த்ரைகுண்ய விஷயா வேதா:" என்கிற ப்ரமாணத்தின்படி குணாநுகுணமாக புபுக்ஷுக்களுக்கும் முமுக்ஷுக்களுக்கும் உபாயத்தையும் பலத்தையும் விதிக்கிறதாகையாலே ப்ராமாண்ய ஹாநியில்லை.

உபாயாந்தர த்யாகபூர்வகமான ஸித்தோபாய ஸ்வீகாரத்துக்கு ஹேதுவான ஸ்வரூப யாதாத்ம்ய ஜ்ஞாநவத் விஷயத்தில் ஈசுவரனுக்கு அத்யந்தாபிமதியிருப்பதாலே அவர்களும் மீண்டு உபாயாந்தரத்தில் ப்ரவர்த்தித்தால் ஈசுவரனுடைய அத்யந்தாபிமதிக்கு நாசமேற்படுவதாலே தாத்ருசாபிமதி கடிதமான ஸ்வரூப நாசமேற்படுவதால் நாச்யநாசகபாவ ரூபமான விரோதம் உபபந்நம்.

இப்படியாக பக்தி ஸ்வரூப விருத்தையாகையாலே திருமந்த்ரத்தால் சிக்ஷிதமான ஸ்வரூபத்தை யுடையவனுக்கு அந்த ஸ்வரூபத்துக்கு அநுரூபமாக ஈசுவரனையே உபாயமாக வரிக்கையே ப்ராப்தமாகும். நாட்டார் ஊர்வசீ ஸாலோக்யத்துக்காக ஸாதநாநுஷ்டானம் பண்ணுநிற்கச் செய்தேயும், தானாகவே மேல்விழுந்த ஊர்வசியைப் பார்த்து அர்ஜுனன் வ்ருத்த ப்ரபிதாமஹி யென்று நமஸ்கரித்த ஜிதேந்த்ரியனாயிருக்க, பக்தி யநுஷ்டானத்தில் அசக்தனென்று

சொல்லுமது அநுபபந்நமாகையால் அவனுடைய ப்ரபத்தி அதிகார மாக ஏற்பட்டது ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமேயன்றி வேறில்லை. இனி ப்ரபத்தியின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படும்.

— ப்ரபத்திஸ்வரூப நிரூபணம் —

இனி ப்ரபத்தியின் ஸ்வரூபம் நிரூபிக்கத்தொடங்கி முதலில் அது சுருதி, பாஞ்சராத்ரம் இதிஹாஸம் புராணங்கள், ஸ்மிருதிகள், ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகள், அவைகளை யனுஸரித்த பூர்வா சார்ய ஸூக்திகள், உபபத்தி, அநுஷ்டானம் என்னுமிவற்றால் ஸித்திக்கிறதென்று நிரூபிக்கலாகும்.

சுருதியில், கடவல்லியிலுள்ள த்வயோபநிஷத்தில் த்வயமென் னும் மந்த்ரசேஷத்தை விசதமாக ப்ரதிபாதிக்கிறபடியால் அதில் சொல்லப்பட்டிருக்கிற "சரணம் ப்ரபத்யே" என்ற வாக்யத்தால் சரணவரண ரூபமான ப்ரபத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே சுவேதாசுவதரோபநிஷத்தில் "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" என்று தொடங்கி "முமுக்ஷுர்வை சரண மஹம் ப்ரபத்யே" என்னுமளவாக, யாவனொருவன் ப்ரஹ்மாவை முதலில் சிருஷ்டித்தானோ? யாவனொருவன் ப்ரஹ்மாவுக்கு வேதங்களை யுபதேசித்தானோ? அப்படிப்பட்ட ஸர்வேசுவரனை மோக்ஷத்தில் இச்சையுடைய நான் சரணமாக அடைகிறேன் என்று சரண்மடைத லாகிய பிரபத்தி சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றுள் சரணமடைய வேண்டும் என்று விதிக்கப்படாமலிருந்தபோதிலும் மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு ஈசுவரனையே சரணமடைதலாகிய ப்ரபத்தி அநுஷ்டிக்கத் தக்கதாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் மோக்ஷத் தில் இச்சையுடையவன் அதற்கு ஸாதனமான ப்ரபத்தியை அநுஷ் டிக்க வேண்டும் என்னும் விதியானது அர்த்தத்தாலே ஸித்தித்திருக் கிறது.

இப்படியே அர்த்தவாதங்களிலும் மந்த்ரங்களிலும் விதிவாசக மான ஏவல்வினை முதலிய கட்டளையிடும் சொற்க ளில்லாதிருந்த போதிலும் விதி அர்த்தத்தால் ஸித்திக்குமென்பது பூர்விக சாஸ்த்ரங் களால் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே "தஸ்மாதபிவத்யம் ப்ரபந்நம் ந ப்ரதி ப்ரயச்சந்தி" என்கிற சுருதியிலும் ஸித்தவந் நிர்த்

தேசத்தால் (சித்தித்ததுபோல் வைத்துப்பேசும் பேச்சால்) விதியில்லா திருக்கச்செய்தேயும் அது அர்த்தத்தால் ஸித்தித்திருக்கிறது.

இன்னும் இவ்வளவிலமையாமல் "ஓம் இத்யாத்மாநம் யுஞ்ஜீத" என்பதில் 'யுஞ்ஜீத' என்னும் ஏவல்வினையான கட்டளைச் சொல்லாலே வெளிப்படையாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனல் 'யுஞ்ஜீத' என்று யோகத்தைச் சொல்லுகிற விது ப்ரபத்தியை எவ்வாறு சொல்லுமெனில்? மேல் "தஸ்மாத் ந்யாஸமேஷாம்" என்று யோகபர்யாயமாக ந்யாஸத்தைச் சொல்லியிருப்பதால் ந்யாஸமென்பது பரந்யாஸமாகிய ப்ரபத்தியாகையால் இந்த யுஞ்ஜீத என்ற யோகசப்தமும் ப்ரபத்தியைச் சொல்லியதே யாம்.

இப்படியே "த்ர்யம்பகம் யஜாமஹே" என்கிற மந்த்ரமும் ப்ரபத்திபரமாக ஸர்வஜ்ஞ ஸம்ஹிதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றல் 'இச்சை' என்றும் 'ஜ்ஞப்தி' என்றும் 'க்ரியை' என்றும் சொல்லப்படுகிற மூன்றும் லோகத்துக்கு மாதாக்கள். இந்த மாதாக்களையுடைய ஜகத்துக்குப் ப்ரியனுயுள்ள ஸர்வேசுவரனிடத்தில் ஆத்மஹவிஸ்த்யாகமாகிற யாகத்தைச் செய்கிறோம். அந்த யாகத்தைச் செய்தபடியால் உர்வாருகத்தின் பழமானது தன்னுடைய கட்டில்நின்றும் எப்படி எளிதாக விடுபடுகிறதோ அப்படியே நாமும் மிருத்யுவில்நின்றும் எளிதாக விடுபடுகிறோம்; என்ற பொருளுடையதாக ஆத்மஹவிஸ்த்யாகம் சொல்லப்பட்டிருப்பதால் அறியலாம்.

இப்படியே "அக்நே நய ஸுபதாராயே" என்கிற மந்த்ரத்தாலும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்—உத்க்ருஷ்டமான ஸ்தானத்தை அடைவிக்கிற ஸர்வேசுவர! உன்பொருட்டு உன்னுடைய புத்தியாலே மிகையாக நினைக்கப்படுகிற 'நம:' என்கிற உக்தியையுடைய ப்ரபத்தியைப் பண்ணுகிறோம். அப்படி ப்ரபத்தி பண்ணிய எங்களை அர்ச்சிராதி மார்க்கத்தாலே மோக்ஷைசுவர்யத்தின் பொருட்டு நித்யவிபூதியிற் சேர்க்கவேணும்; இதற்குத் தடையாயிருந்துள்ள பாபத்தைப் போக்கவேணும் என்பதாம். இங்கு 'நம:' என்று ப்ரபத்தி ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதும் அறியலாம். இப்படியே "யஜ்ஞேந யஜ்ஞ மயஜந்த தேவா: தாநி தர்மாணி ப்ரதமாந்யாஸந்" என்கிற சுருதியால் யஜ்ஞஸாதனமான ஆத்மாவாலே யஜ்ஞ

சொல்லுமது அநுபபந்நமாகையால் அவனுடைய ப்ரபத்தி அதிகார மாக ஏற்பட்டது ஸ்வரூப விருத்தத்வ ஜ்ஞானமேயன்றி வேறில்லை. இனி ப்ரபத்தியின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படும்.

— ப்ரபத்திஸ்வரூப நிரூபணம் —

இனி ப்ரபத்தியின் ஸ்வரூபம் நிரூபிக்கத்தொடங்கி முதலில் அது சுருதி, பாஞ்சராத்ரம் இதிஹாஸம் புராணங்கள், ஸ்மிருதிகள், ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகள், அவைகளை யனுஸரித்த பூர்வா சார்ய ஸூக்திகள், உபபத்தி, அநுஷ்டானம் என்னுமிவற்றால் ஸித்திக்கிறதென்று நிரூபிக்கலாகும்.

சுருதியில், கடவல்லியிலுள்ள த்வயோபநிஷத்தில் த்வயமென்னும் மந்த்ரசேஷத்தை விசதமாக ப்ரதிபாதிக்கிறபடியால் அதில் சொல்லப்பட்டிருக்கிற "சரணம் ப்ரபத்யே" என்ற வாக்யத்தால் சரணவரண ரூபமான ப்ரபத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே சுவேதாசுவதரோபநிஷத்தில் "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" என்று தொடங்கி "முமுக்ஷுர்வை சரண மஹம் ப்ரபத்யே" என்னுமளவாக, யாவனொருவன் ப்ரஹ்மாவை முதலில் சிருஷ்டித்தானோ? யாவனொருவன் ப்ரஹ்மாவுக்கு வேதங்களை யுபதேசித்தானோ? அப்படிப்பட்ட ஸர்வேசுவரனை மோக்ஷத்தில் இச்சையுடைய நான் சரணமாக அடைகிறேன் என்று சரண்மடைதலாகிய பிரபத்தி சொல்லப்பட்டிருக்கிறது. இவற்றுள் சரணமடைய வேண்டும் என்று விதிக்கப்படாமலிருந்தபோதிலும் மோக்ஷத்தில் இச்சையுடையவனுக்கு ஈசுவரனையே சரணமடைதலாகிய ப்ரபத்தி அநுஷ்டிக்கத் தக்கதாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால் மோக்ஷத்தில் இச்சையுடையவன் அதற்கு ஸாதனமான ப்ரபத்தியை அநுஷ்டிக்க வேண்டும் என்னும் விதியானது அர்த்தத்தாலே ஸித்தித்திருக்கிறது.

இப்படியே அர்த்தவாதங்களிலும் மந்த்ரங்களிலும் விதிவாசகமான ஏவல்வினை முதலிய கட்டளையிடும் சொற்க ளில்லாதிருந்த போதிலும் விதி அர்த்தத்தால் ஸித்திக்குமென்பது பூர்விக சாஸ்த்ரங்களால் அங்கிகரிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே "தஸ்மாதபிவத்யம் ப்ரபந்நம் ந ப்ரதி ப்ரயச்சந்தி" என்கிற சுருதியிலும் ஸித்தவந் நிர்த்

தேசத்தால் (சித்தித்ததுபோல் வைத்துப்பேசும் பேச்சால்) விதியில்லா திருக்கச்செய்தேயும் அது அர்த்தத்தால் ஸித்தித்திருக்கிறது.

இன்னும் இவ்வளவிலமையாமல் "ஓம் இத்யாத்மாநம் யுஞ்ஜீத" என்பதில் 'யுஞ்ஜீத' என்னும் ஏவல்வினையான கட்டளைச் சொல்லாலே வெளிப்படையாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் 'யுஞ்ஜீத' என்று யோகத்தைச் சொல்லுகிற விது ப்ரபத்தியை எவ்வாறு சொல்லுமெனில் ? மேல் "தஸ்மாத் ந்யாஸ மேஷாம்" என்று யோகபர்யாயமாக ந்யாஸத்தைச் சொல்லியிருப்ப தால் ந்யாஸமென்பது பரந்யாஸமாகிய ப்ரபத்தியாகையால் இந்த யுஞ்ஜீத என்ற யோகசப்தமும் ப்ரபத்தியைச் சொல்லியதே யாம்.

இப்படியே "த்ர்யம்பகம் யஜாமஹே" என்கிற மந்த்ரமும் ப்ரபத்திபரமாக ஸர்வஜ்ஞ ஸம்ஹிதையிற் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் 'இச்சை' என்றும் 'ஜ்ஞப்தி' என்றும் 'க்ரியை' என்றும் சொல்லப்படுகிற மூன்றும் லோகத்துக்கு மாதாக்கள். இந்த மாதாக்களையுடைய ஜகத்துக்குப் ப்ரியனுயுள்ள ஸர்வேசுவர னிடத்தில் ஆத்மஹவிஸ்த்யாகமாகிற யாகத்தைச் செய்கிறோம். அந்த யாகத்தைச் செய்தபடியால் உர்வாருகத்தின் பழமானது தன் னுடைய கட்டில்நின்றும் எப்படி எளிதாக விடுபடுகிறதோ அப் படியே நாமும் மிருத்யுவில்நின்றும் எளிதாக விடுபடுகிறோம்; என்ற பொருளுடையதாக ஆத்மஹவிஸ்த்யாகம் சொல்லப்பட்டிருப்பதால் அறியலாம்.

இப்படியே "அக்நே நய ஸுபதாராயே" என்கிற மந்த்ரத்தா லும் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்—உத்க்ருஷ்டமான ஸ்தானத்தை அடைவிக்கிற ஸர்வேசுவர! உன்பொருட்டு உன்னு டைய புத்தியாலே மிகையாக நினைக்கப்படுகிற 'நம:' என்கிற உக்தியையுடைய ப்ரபத்தியைப் பண்ணுகிறோம். அப்படி ப்ரபத்தி பண்ணிய எங்களை அர்ச்சிராதி மார்க்கத்தாலே மோக்ஷைசுவர்யத்தின் பொருட்டு நித்யவிபூதியிற் சேர்க்கவேணும்; இதற்குத் தடையா யிருந்துள்ள பாபத்தைப் போக்கவேணும் என்பதாம். இங்கு 'நம:' என்று ப்ரபத்தி ப்ரதிபாதிக்கப்பட்டிருப்பதும் அறியலாம். இப் படியே "யஜ்ஞேந யஜ்ஞ மயஜந்த தேவா: தாநி தர்மாணி ப்ரதமாந் யாஸந்" என்கிற சுருதியால் யஜ்ஞஸாதனமான ஆத்மாவாலே யஜ்ஞ

ரூபியான ஈசுவரனை தேவர்கள் பஜித்தார்கள்; அந்த தர்மங்களே முதன்மையான தர்மங்களாயின என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு "அபஜந்த" என்று கிரியையாகச் சொல்லப்பட்ட யாகமும் ப்ரபத்தியாமென் றறியத்தக்கது.

இப்படியே "அம்ருதஸ்யைஷ ஸேது:" "யஸ்மிந்த்யௌ:" என்று சொல்லிக்கொண்டுபோய் "தமேவைகம் ஜாநத ஆத்மாநம்" "அந்யாவாசோவிமுஞ்சத" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம்—கீழ் ஸர்வாதாரனாகச் சொல்லப்பட்ட பரமாத்மா ஒருவனையே மோக்ஷத்துக்கு உபாயமென்று அறியுங்கள்; வேறு உபாயாந்தரங்களான வாக்குக்களை விட்டுவிடுங்கள்; என்பதாம். இதனால் உபாயாந்தரங்களைவிட்டு ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாகிற சரணாகதி சொல்லப்பட்டதாயிற்று.

இப்படியே "கோர்ஹஹி ஸ்பர்த்திதும் ப்ரஹ்மண" என்பதால் ஸர்வேசுவரனோடே அவிவாத ரூபமாயுள்ள ப்ரபத்தியை யாவனொருவன் பண்ணுவானோ என்று வினவிக்கொண்டு அவனுக்கு பலம் சொல்லப்பட்டிருக்கிறது.

இவ்வாறாக ப்ரபத்தியைப்பற்றிச் சொல்லும் சுருதிகள் இன்னும் பலவுள்ளன. அவைகளையெல்லாம் இங்கு எடுத்துக்காட்டினால் மிக விரியுமாகையால் இம்மட்டோடு நிறுத்திக்கொண்டு மற்றவற்றை ஆராய்வோம்.

இனி ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் லக்ஷ்மீதந்த்ரம் அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை முதலியவற்றுள் நன்றாக விரித்துச் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளில் விளங்கக் காணலாம். அப்படியே ருக்வேதத்தில் நின்றும் பிரிந்ததான ஜிதந்தே ஸ்தோத்ரத்திலும் ப்ரபத்தி விஷயமான நிருபணங்கள் கண்டுகொள்ளலாம்.

"வேதவேத்யே பரே பும்ஸி" என்கிற சுலோகத்தின்படி வேதத்தின் ப்ராதுர்ப்பாவ விசேஷமான ஸ்ரீராமாயணத்தில் ஆதி முதல் அந்தமளவும் ப்ரபத்தி நிருபிக்கப்பட்டிருக்கிறது. அதில் முதலாவது பாலகாண்டத்தில் தேவதைகள் ராவண வதத்தின்பொருட்டு ஸர்வேசுவரன் விஷயத்தில் ப்ரபத்தி பண்ணினதாகச் சொல்லப்பட்டது. அடுத்த அயோத்யா காண்டத்தில் சித்ரகூடத்தில் பரதாழ்வான் "சேஷ்யே புரஸ்தாச்சாலாயா:" என்று பெருமாள் அயோத்தியைக்கு எழுந்தருள வேண்டுமென்று ப்ரபத்தி பண்ணியிருப்பது காணலாம்.

அடுத்த ஆரண்ய காண்டத்தில் "தே வயம் பவதா ரக்ஷ்யா: கர்ப்பபூதாஸ்தபோதநா:" என்கிற இடத்தில் "கர்ப்பபூதா:" என்பதினால் தம்முடைய ரக்ஷணத்தில் தங்களுக்கு யோக்யதையில்லையென்பதையும் தெரிவித்துக்கொண்டு எங்களை ரக்ஷிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறபடியால் ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டு ருஷிகள் ரக்ஷாபர ஸமர்ப்பணம் பண்ணியிருக்கிறபடியாலும் அடுத்த கிஷ்கிந்தா காண்டத்தில் "க்ருதாபராதஸ்யஹிதே" என்கிற சுலோகத்தில் மஹாராஜனைப் பார்த்துத் திருவடி, திரக்கழிய அபராதம் பண்ணின உமக்கு இளையபெருமாள் விஷயத்தில் அஞ்சலி ரூபமான ப்ரபத்தி பண்ணுகையொழிய வேறு வ்யாபாரமில்லையென்று சொல்லியிருப்பதாலும் ஸுந்தரகாண்டத்தில் பிராட்டி திருவடியினிடத்தில் அருளிச்செய்த காகவ்ருத்தாந்தத்தாலும் த்ரிஜடை பிராட்டி விஷயத்தில் ராக்ஷஸிகளை சரணாகதி பண்ணும்படி உபதேசித்திருப்பதாலும் யுத்த காண்டத்தில் விபீஷணாழ்வான் பெருமாளிடத்தில் பண்ணின சரணாகதியை விஸ்தரித்து ப்ரதிபாதித்திருப்பதாலும் ஸ்ரீராமாயண முழுவதும் சரணாகதி ப்ரதிபாதகமாயிருப்பது கண்டுகொள்ளத்தக்கது

இவ்விடத்தில் விபீஷண சரணாகதியில் சரணாகதிக்கு உரிய சில விஷயங்கள் தோன்றுகின்றன. அவை:— சரணாகதிக்கு வேண்டிய ஆனுகூல்ய ஸங்கல்பம், ப்ராதிகூல்யவர்ஜநம், ஆகிஞ்சந்யம், அநந்ய கதித்வம் என்னுமிவைகளாம். இவற்றுள் விபீஷணன் ராவணனுக்கு ஹிதோபதேசம் பண்ணினபடியாலும், ராமதூதனான திருவடியை ராவணன் கொல்லாதிருக்கும்படி விடுவித்தபடியாலும், "ராக்ஷஸாநாம் வதேஸாஹ்யம் கரிஷ்யாமி" (ராக்ஷஸர்களை வதித்தற்கு உதவி செய்கிறேன்) என்று சொல்லியபடியாலும் ஆநுகூல்ய ஸங்கல்பம் ஏற்பட்டிருக்கிறது. "பரித்யக்தாமயா லங்கா" என்றும், "தேநசாப்யவமாநித:" என்றும் சொல்லியிருக்கிறபடியால் ப்ராதிகூல்யவர்ஜநம் ஏற்பட்டிருக்கிறது. "ராவணோ நாம துர்வ்ருத்த:" என்று தனக்குள்ள நைச்யத்தை அனுஸந்திப்பதாலே ஆகிஞ்சந்யமும் "சரண்யம் சரணம்கத:" என்பதாலே அநந்யகதித்வமும் சரணாகதியும் தோற்றுகின்றன.

ஆனால் "ராஜ்யகாංக்ஷீ விபீஷண:" என்றும், "ராஜ்யம் ப்ரார்த்தயமாநஸ்து" என்றும் சொல்லுகிறபடியால் விபீஷணாழ்வானுடைய சரணாகதி ராஜ்யமடைதற்கன்றோ பண்ணப்பட்டதென்று விவாதிக்க

லாகாது. ஏனெனில் அவன் சரணுகதி பண்ணுகிற காலத்தில் "பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச, பவத்கதம்மே ராஜ்யஞ்ச" என்றதான நிஜோக்தியாலே ராஜ்யத்தை யபேக்ஷித்ததாயில்லை; ப்ரேம பரவசரான மஹாராஜருடைய பயத்தைப் போக்குகைக்காக, "ராஜ்யகாங்க்ஷீ விபீஷண:" என்று பெருமாள் சொல்லியது ராஜநீதியைக் காட்டியபடி. ஆனுல் பெருமாள் விபீஷணனுக்கு லங்கா ராஜ்யத்தைக் கொடுத்தது ஆநுஷங்கிகமேயாம். பரதாழ்வானுக்கு ப்ரஜா பரிபாலனத்தை நியமித்தருளியதுபோலே ராக்ஷஸர்கள் பரிபாலிக்கும் பொருட்டே பெருமாள் விபீஷணுழ்வானுக்கு ராஜ்யத்தைக் கொடுத்தருளினுர். இதை "சாபிதஸ்த்வம் ஸகித்வேந கார்யந்தே மம சாஸநம், ப்ரஜாஸ்ஸம்ரக்ஷதர்மேண நோத்தரம் வக்து மர்ஹஸி" என்று பெருமாள் நிர்ப்பந்தித்து நியமித்தபடியா லறியலாம். அந்த நியமனத்தை மேற்கொண்டு ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டது பகவதாஜ்ஞாநுவர்த்தனரூபமான கைங்கர்யமேயாம். இப்படியே பாரதத்திலும் "த்ரௌபத்யா ஸஹிதாஸ் ஸர்வே நமச்சக்ருர் ஜநார்த்தநம்" என்றும், "சங்கசக்ரகதாபாணே" என்கிற சுலோகத்தில் "ரக்ஷமாம் சரணுகதாம்" என்றும் சொல்லப்பட்டிருப்பதால் பாண்டவர்களும் த்ரௌபதியும் சரணுகதி பண்ணியிருப்பது விளங்குகிறது.

மேலும், கீதையில் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ" என்று நேரே சரணுகதியை விதிவாசகமான வினைச்சொல்லால் ஸ்பஷ்டமாக விதித்திருப்பதும் கண்டுகொள்ளலாம்.

ஆனுல் ஸ்ரீபாஷ்யகாரர் கீதாபாஷ்யத்தில் ஸ்வதந்த்ர ப்ரபத்திபரமாக அருளிச்செய்யாமல், அங்கப்ரபத்திபரமாக அருளிச்செய்திருப்பது கூடும்படி யெங்ஙனேயென்னில்: அவரே கத்யத்தில் பெரிய பெருமாள் ஸந்நிதியில் ஸ்வதந்த்ரப்ரபத்தியை அநுஷ்டித்திருப்பதாலும், அதற்கு ப்ரமாணமாக 'ஸர்வதர்மாந்' என்கிற சுலோகத்தை உதாஹரித்திருப்பதாலும் கீதாபாஷ்யத்தில் அருளிச்செய்திருப்பது யோஜநாபேதபரமாகையால் இதுவும் உபபந்நமாம்.

ஸ்ரீ பாகவதத்திலும் ஏகாதச ஸ்கந்தத்தில் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கும் உத்தவருக்கும் நடந்த ஸம்பாஷணத்தில் "தஸ்மாத்த்வம் உத்தவோத்ஸ்ருஜ்ய சோதநாம் ப்ரதிசோதநாம்" என்று உபாயாந்தரங்களை விட்டுத் தன்னையே உபாயமாகப் பற்றவேணுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியே மநுஸ்மிருதியில், "யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதிஸ்தித:, தேந சேத் அவிவாதஸ்தே மாகங்காம்மா குருங்கம:" என்று அவிவாதருபமான ப்ரபத்தியைச் சொல்லியிருப்பதும் கண்டுகொள்ளலாம். இப்படியே மற்றுமுள்ள ஸ்மிருதிகளிலும் சொல்லப்பட்டிருக்கிறது. மேல் நிருபணத்தில் அந்த ஸ்மிருதி வசனங்கள் உதாஹரிக்கப்படும்.

ஆழ்வார்களும் பலவிடங்களில் தாங்கள் ப்ரபத்தியை அநுஷ்டித்திருப்பதும் பிறருக்கு உபதேசித்திருப்பதும் கண்டுகொள்ளலாம். ஆசார்யர்களில் ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்நத்தில் "ந தர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதி" "அபராத ஸஹஸ்ரபாஜநம்" என்னுந் தொடக்கமான சுலோகங்களாலும் தான் ப்ரபத்தியை அநுஷ்டித்திருப்பதைக் கண்டுகொள்ளலாம். அப்படியே எம்பெருமானாரும் 'கத்யத்தில்' ப்ரபத்தியை அருளிச்செய்திருக்கிறார். ஆழ்வான் 'வரதராஜஸ்தவத்தில்' ப்ரபத்தி விஷயமாக ப்ரஸ்தாவித்திருப்பதையும் அறியலாம். பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் "உபாதத்தே ஸத்தாஸ்திதி" என்கிற சுலோகத்திலும், "தவபரோஹம்" என்கிற சுலோகத்திலும் ப்ரபத்தியை அருளிச்செய்திருக்கிறார். தேசிகன் ஸாதித்தருளிய 'நிக்ஷேப ரக்ஷையில்' ப்ரபத்தி உபாயமென்பதை நிருபித்திருப்பதும், 'ந்யாஸ திலகம்' 'ந்யாஸவிம்சதி' முதலான கிரந்தங்களிலும் நிருபித்திருப்பதும் பிரஸித்தம்.

தேசிகன் அருளிச்செய்த "ஆர்த்தேஷ்வாசுபலா" என்கிற சுலோகத்தாலும் ப்ரபத்தி நிருபிக்கப்பட்டிருக்கிறது. அந்த சுலோகமாவது :— "ஆர்த்தேஷ்வாசுபலா ததந்யவிஷயே ப்யுச்சிந்நதேஹாந்தரா, வந்ஹ்யாதே ரநபேக்ஷணாத் தநுப்ருதாம் ஸத்யாதிவத் வ்யாபிநீ, ஸ்ரீரங்கேச்வர யாவதாத்ம நியத த்வத் பாரதந்த்ர்யோசிதா த்வய்யேவ த்வதுபாயதீ: அபிஹித ஸ்வோபாய பாவாஸ்துமே" என்பதாம்.

இதன் அர்த்தம் :— பக்தியானது ஆர்த்தியுள்ளவர்களுக்கும் த்ருப்தரா யிருப்பவர்களுக்கும் ப்ராரப்த கர்மாவஸாநமானபோது மோக்ஷப்ரதாநத்துக்கு உபயுக்தமானது. ப்ரபத்தி, ஆர்த்த விஷயத்தில் உடனே பலத்தைக் கொடுப்பதாயும், த்ருப்த விஷயத்தில் ப்ராரப்த தேஹாவஸாநத்திலேயே பலத்தைக் கொடுப்பதாயுமிருப்பதால் அதிலும் சிறந்தது. அன்றியும் பக்தியானது அக்நி வித்யாங்ககமாகையாலே த்ரைவர்ணிகாதிகாரமுள்ளது. ப்ரபத்தி ஸத்யவசநாதி

கள்போலே ஸர்வாதிகாரமாயுள்ளது. பக்தியானது எல்லா சேதனர்களுக்கும் நியதமாயுள்ள அநந்யசரணத்வரூபமான உபாய பாரதந்த்ர்யத்துக்கு அநுசிதையாகும். ப்ரபத்தி ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாகிறபடியால் அந்த உபாய பாரதந்த்ர்யத்துக்கு உசிதையாயிருக்கும். பக்தி ஈசுவரனுடைய உபாய பாவத்தை விஷயீகரிக்க மாட்டாது. ப்ரபத்தியோ ஈசுவரனையே உபாயமாகப் பற்றுகையாலும், 'இயம் கேவலலக்ஷ்மீச" என்பது முதலிய சுலோகங்களின்படி உபாய வரணரூபமாயிருக்கையாலும் அநுபாயமாயிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியே லோகதேசிகன், மணவாளமாமுனிகள் முதலான ஆசார்யர்களும் ப்ரபத்தி நிரூபணத்தில் சிறந்தவர்களாயிருந்தார்களென்பது அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளால் விளங்கும். இன்னும் உபபத்தியாலும் நிரூபிக்கலாகும்.

ஒருவன் அசக்தனுயும், அஜ்ஞனுயும் ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாதவனுயுமிருந்தால் அவன், ஸமர்த்தனுயும், ப்ராப்தனுயும் உள்ள ஒருவனையடைந்து என்னை நீயே ரக்ஷிக்கவேணுமென்று ப்ரார்த்தித்தால் அவன் அப்படியே ரக்ஷிக்கிருன் என்பது லோக ஸித்தம். இப்படி கபோதோபாக்கியானத்திலும், ஸ்ரீ கஜேந்த்ராழ்வான் வ்ருத்தாந்தத்திலும் நிகழ்ந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம். கபோதத்துக்கு சரணுகதி பரமதர்மமென்கிற ஞானமுமில்லை; சரணுகதரக்ஷணம் பண்ணுவிடில் மிகுந்த பாதகமுண்டாகுமென்பதும் தெரியாது. அப்படியிருக்க, தன்னுடைய ப்ராணனை விட்டாவது தனக்கு சத்துருவான வேடனை ரக்ஷித்ததென்ருல், ஜ்ஞானவான்கள் அநுஷ்டிப்பது சொல்லவேண்டாதாயிற்று. இந்த விஷயத்தை "கபோதோ வாநர ச்ரேஷ்ட கிம்புநர் மத் விதோஜந:" என்று பெருமாளருளிச்செய்தார்.

இது நிற்க, பட்டர் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளும்போது நடுவே ஒரு வேடன் குடிசையில் தங்கியிருந்தவளவிலே காட்டிலிருந்துவந்த வேடனைக்கண்டு இன்று நீ காட்டிற் கண்ட விசேஷ மேதேனுமுண்டோவென்று கேட்டருள அதற்கு அவன் காட்டில் ஒரு ஆண்முயலைக் கண்டு அடிக்கப்புகுந்தேன் அவ்வளவில் அதன் அன்புள்ள பெட்டைமுயல் என் முன்பாக வந்து கும்பிட்டுக் கிடந்தது: அதுகண்டு இரங்கி அந்த முயலை அடிக்காமல் வந்தேன்

என்று சொல்ல, இதைக்கேட்டு பட்டர், அந்த முயலுக்கு சரணுகதி பரமதர்மமென்கிற ஜ்ஞானமில்லை; அந்த வேடனுக்கும் சரணுகத ரக்ஷணம் பரமதர்மமென்று தெரியாது. அப்படியிருக்க, சரணுகதி தர்மத்தினுடைய ப்ரபாவம் இப்படிச் செய்வித்தது. ஆதலால் பரம சேதனுன ஸர்வேசுவரனிடத்தில் சேதனர்கள் பண்ணுகிற சரணுகதி பலியாதிராதென்பது கிம்புநர் ந்யாயஸித்தம் என்றருளிச் செய்தார்; என்பது ப்ரஸித்தம்.

இந்த ப்ரபத்தி பக்தியைக் காட்டிலும் மேலானது. எப்படியென்ருல், பக்தி அதிகிருதாதிகாரையாயிருக்கும். ப்ரபத்தி ஸர்வாதிகாரையாயிருப்பது. அந்த பக்திக்குப் பலம் ப்ராரப்த கர்மாவஸாநத்தில் மோக்ஷமடைதல். ப்ரபத்தியில் ஆர்த்தருக்கு உடனே மோக்ஷ பலம் ஸித்திக்கிறது. த்ருப்தருக்கு ப்ராரப்த சரீராவஸாநத்திலேயே மோக்ஷபலம் ஸித்திக்கிறது. ப்ரபத்தியானது தன்னை யநுஷ்டிக்கிறவர்களுடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுக்கும் பலோபயோகியாயிருக்கும். பக்தி தன்னை அநுஷ்டிக்கிறவர்களுக்கு மட்டுமே பலத்தைக் கொடுக்கும்.

ஆனுல், ''தமேவம் விதித்வா அதிம்ருத்யுமேதி'' என்கிற சுருதியின்படி ஜ்ஞானமுள்ளவனுக்கே மோக்ஷம் என்று சொல்லப்பட்டிருப்பதால் ஜ்ஞானமில்லாமலிருக்கிற தத்ஸம்பந்திகளுக்கும் இது பல ஸாதனமாம்படி கூடுமோவென்னில். ''தமேவம் விதித்வா' என்கிற சுருதியில் ''நாந்ய: பந்தா வித்யதே அயநாய'' என்று சொல்லுகிற இடத்தில் 'தமேவம்' என்பதிலுள்ள தச்சப்தார்த்தமான ஈசுவரனைக் காட்டிலும் அந்யமாயிருப்பதற்கு உபாயத்வமில்லை என்பதே தாத்பர்யமாகையால் ப்ரபத்திஸ்தலத்தில் ததந்யமான ஜ்ஞானம் உபாயமாகாமையாலே ஆசார்யனுடைய ப்ரபத்தியாலேயே தத்ஸம்பந்திகளுக்கு மோக்ஷமுண்டாகு மென்பதில் விரோதமில்லை என்று 'ஸாரப்ரகாசிகை' யிலும் 'நிக்ஷேபரக்ஷை' யிலும் நிருபிக்கப்பட்டிருப்பதால் ப்ரபத்தி ஸ்தலத்தில் ஜ்ஞானத்துக்கும் பலத்துக்கும் ஸாமாநாதிகரண்யம் வேண்டியதில்லை. இப்படியே 'ந்யாய ஸித்தாஞ்ஜந' வியாக்கியானத்தில் திருப்புட்குழி ஸ்வாமி 'அந்யஸ்ய ஜ்ஞாநாத் அந்யஸ்ப முக்தி'' கூடாதென்பது ப்ரபத்தி யொழிந்த விடத்திலென்று நிருபித்திருக்கிறுர்.

அன்றியும், "அந்வயா தபிசைகஸ்ய ஸௌஜந்யா தாத்மநோ ஹரௌ, ஸர்வ ஏவ ப்ரமுச்யந்தே நரா: பூர்வே அபரே ததா" என்று பாரத்வாஜ ஸம்ஹிதையிலும் "பசுர் மநுஷ்ய: பக்ஷீவா" என்கிற சுலோகத்திலும் இந்த விஷயம் வ்யக்தமாயுள்ளது. இதை அநுஸரித்து சுருதப்ரகாசிகையில் "விநத விவித பூத வ்ராத ரக்ஷைகதீக்ஷே" என்பதன் வ்யாக்யாநவஸரத்தில் "தத்ஸம்பந்திநோபி தத ஏவ ரக்ஷ்யா:" என்று சாதித்து, "ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:, வைஷ்ணவோந: குலேஜாத: ஸாஸ் ஸந்தாரயிஷ்யதி" என்று இந்த ப்ரமாணமும் காட்டப்பட்டிருக்கிறது. இங்குக் காட்டிய ப்ரமாணங்களின் அர்த்தம்– ஒருவன் ஸர்வேசுவரனிடத்தில் ஆத்மாத்மீய பரந்யாஸம் பண்ணியிருந்தானேயாகில் அவனுடைய ஸம்பந்தத்தாலே அவனுக்கு முன்புள்ளவர்களும், பின்புள்ளவர்களும் முக்தராவார்கள். பசு, மநுஷ்யன் பக்ஷி இவர்களும் வைஷ்ணவ ஸம்ச்ரயமுள்ளவர்களாயிருந்தால் அந்த வைஷ்ணவ ஸம்ச்ரயத்தாலே முக்தி அடைகிறார்கள். ஒரு குலத்தில் வைஷ்ணவனான ஒருவன் பிறந்தானேயாகில் அவனுடைய பித்ரு பிதாமஹ ப்ரபிதாமஹர்கள் நம்முடைய குலத்தில் ஒரு வைஷ்ணவன் பிறந்திருப்பதால் அவன் நம்மை ஸம்ஸாரத்தில் நின்று கரையேற்றி விடுவன் என்று ஸந்தோஷத்தாலே கூத்தாடுகிறார்கள் என்பதாம். இப்படி ப்ரமாணங்களிருப்பதால் ப்ரபத்தியானது தன்னை அநுஷ்டிக்கிறவர்களுடைய ஸம்பந்த ஸம்பந்திகளுக்கும் பல ஸாதனமாமென்பது ஸித்தம். இது நிற்க.

பக்தி நிஷ்டனுக்கு சரீரவியோக காலத்தில் அந்திம ஸ்ம்ருதி வேணும்: அது இல்லாத பக்ஷத்தில் அவனுக்கு பலமில்லை. ப்ரபத்திக்கு சரீராவஸாநத்தில் அந்திம ஸ்ம்ருதி இல்லாமலிருந்தபோதிலும் பலத்துக்குக் கண்ணழிவில்லை. ஆனால் சரீராவஸாந காலத்தில் "வாக் மநஸி ஸம்பத்யதே" என்கிறபடியே வாகிந்த்ரியமானது மனஸ்ஸில் ஸம்பந்திக்க, அந்த மனஸ்ஸானது ப்ராணன்களில் ஸம்பந்திக்கும் என்று ஏற்படுவதால் ப்ராணன்களில் ஸம்பந்திக்கிறதற்கு முந்தி மனஸ்ஸுக்கு உபாதியில்லாமையால் எந்த விஷயத்திலாவது ஸ்ம்ருதி அவசியம் இருக்கும். அப்போது "யம்யம்வாபி ஸ்மரன்" என்கிற ப்ரமாணப்படி எதை விஷயிகரித்து ஸ்ம்ருதியுண்டாகிறதோ அந்த ஜன்மாவே இவனுக்கு ஏற்படுகிறதென்றிருப்பதால் ப்ரபந்நனுக்கும் அப்படியான அந்திம ஸ்ம்ருதி அவசியம் வேண்டியிருப்ப

தால் அதில்லாதபோது மோக்ஷம் ஏற்படாதென்னில், அது ஸாமான்ய விஷயமாகையால் ப்ரபந்ந விஷயத்தில் பொருந்தாது. ஏனெனில் இவனுக்கு ப்ரவ்ருத்தியின் நிவ்ருத்தியுண்டாயிருப்பதாலும், ஸித்தமே உபாயமாக முன்னிற்பதாலும் இதர விஷயஸ்ம்ருதி யுண்டாகமாட்டாது. த்வயாநுஸந்தான வாஸனையால் பகவத் விஷயமான ஸ்ம்ருதி யுண்டாகலாம். ஆனால் அது பலரூபமாயிருப்பதல்லது ஸாதன கோடியிற் சேராதாகையால் அந்திம ஸ்ம்ருதி ஸாதநத்வேந அவசியம் வேணுமென்கிற நிர்ப்பந்தமில்லை. "மாதவாங்க்ரி த்வயோபாயோ மாதவாங்க்ரி ப்ரயோஜந:. ஸ உத்தமாதிகாரீ ஸ்யாத்" என்பதனால் எம்பெருமானுடைய திருவடிகளை உபாயமாகவும் உபேயமாகவும் நினைத்திருப்பவன் உத்தமாதிகாரி என்று சொல்லியிருப்பதாலும், "அஸ்மிந் நிவர்த்தமாநாநாம் விதௌ விப்ர நிஷேவிதே பூர்வேத்ரய உபாயாஸ்தே பவேயுரமநோஹரா:" என்கிற சுலோகத்தில் விசேஷஜ்ஞர்களால் ஸேவிக்கப்பட்டிருக்கிற ப்ரபத்தி நிஷ்டையில் இருக்கிறவர்களுக்கு முந்தின கர்மஜ்ஞான பக்திகள் மூன்றும் அமநோஹரங்கள் என்று சொல்லியிருப்பதாலும் "ஸத்கர்ம நிரதா: சுத்தா: ஸ்வயத்ந க்ருத புத்தய:, நார்ஹந்தி சரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி" என்பதனால் மற்ற உபாயாந்தர நிஷ்டர்கள் சரணாகதனுடைய கோடியில் ஓர் அம்சத்துக்கும் அர்ஹராகார் என்று சொல்லப்பட்டிருப்பதனாலும் ப்ரபத்தி மேலானதே.

மேலும் "நரஸ்ய புத்தி தௌர்ப்பல்யாத் உபாயாந்தர மிஷ்யதே" என்கிற சுலோகத்தால் புத்தி தௌர்ப்பல்யமுள்ளவனுக்கு உபாயாந்தரத்தில் அதிகாரம் உண்டாகிறதென்று இருப்பதாலும் விசேஷஜ்ஞர்களுக்கே அதிகாரமுள்ள ப்ரபத்தி மேலானது. ஆனால் பக்தி யோக நிஷ்டர்களான வ்யாஸாதிகளுக்கும் புத்தி தௌர்ப்பல்யம் சொல்லவேண்டியிருக்கிறபடியால் அந்த அர்த்தம் அநுபபந்நம். ஆகையாலேதான் அசக்தனாயிருந்தபோதிலும் உபாயாந்தரங்களில் துராசாதார்ட்ய மேற்பட்டு தனக்கு அதிகாரமிருப்பதாக ப்ரமித்தவனுக்கு உபாயாந்தரங்களில் அதிகாரம் என்று அர்த்தம் சொல்லவேணுமென்னில், அப்போது தௌர்ப்பல்ய சப்தத்துக்கு லக்ஷணையும் அசக்தபதாத்யாஹாரமும் ஏற்படும். வ்யாஸாதிகளுக்கு புத்தி தௌர்ப்பல்ய கல்பனத்தை யபேக்ஷித்து லக்ஷணையும் அத்யாஹாரமும் ஸஹ்யமென்று சொல்லில் ரதகாராதிகரணத்திலும் நிஷாதஸ்த பத்யதிகரணத்திலும் சப்தஸ்வாரஸ்யத்தை அவலம்பித்து ரதகாராதி

களுக்கு வித்யையைக் கல்பித்திருப்பதுபோல் இங்கும் சப்தஸ்வாரஸ்யத்தை அவலம்பித்து வ்யாஸாதிகளுக்கும் அதிகாராரம்பக கர்மவிசேஷத்தைக் கற்பித்து உபதேசத்துக் குறுப்பான ஜ்ஞானமிருந்தபோதிலும் அநுஷ்டாநோபயோகியான ஜ்ஞானமில்லை யென்றே கொள்ளவேணும்.

அப்படியிருந்ததால்தான் ஆழ்வார்களுக்கு ஏற்பட்ட கௌரவ்யதை அவர்களுக்கில்லை. "தஸ்மை நமோ முநிவராய பராசராய" என்று ஆளவந்தார் அருளிச்செய்தது உபகாரக புத்தி நிபந்தனம்: உத்தாரக புத்தி க்ருதமன்று.

இத்தை அநுஸரித்து வேதாந்தாசார்யர் "ப்ரபந்நா தந்யேஷாம் நதிசதி முகுந்தோ நிஜபதம்" என்று அருளிச்செய்தார். இப்படி ப்ரமாணங்களும் உபபத்திகளுமிருப்பதால் "பக்தி முக்யோபாயம், ப்ரபத்தி கௌணோபாயம், ப்ரபத்தி மேலானதென்று சொல்லியிருப்பது ப்ரரோசநார்த்தம்" என்று சொல்லுமது அநுபபந்நம்.

இனி, ப்ரபத்தியாவது—' த்வமேவோபாய பூதோமே பவேதி ப்ரார்த்தனாமதி:, சரணாகதி ரித்யுக்தா" என்றும், "அநந்ய ஸாத்யே ஸ்வாபீஷ்டே மஹாவிச்வாஸ பூர்வகம், ததேகோபாயதா யாச்ஞா ப்ரபத்தி: சரணாகதி:" "மாமேகம் சரணம் வ்ரஜ" இத்யாதி ப்ரமாணங்களினாலே, நீயே எனக்கு உபாயமாக வேணுமென்று ப்ரார்த்திக்கை சரணாகதி என்றும், ஈசுவரனைத்தவிர மற்றொன்றால் ஸாதிக்க முடியாததாயும். தனக்கு இஷ்டமாயுள்ள மோக்ஷத்திற்கு அவனையே உபாயமாக ப்ரார்த்திக்கை சரணாகதி என்றும், மற்ற உபாயங்களை விட்டு என்னை ஒருவனையே உபாயமாகப் பற்றவேணும் என்றும் சொல்லப்பட்டிருப்பதால் அவனே உபாயமென்கிற அத்யவஸாயத்தோடு கூடின உபாயத்வ ப்ரார்த்தனையே சரணாகதியென்று ஏற்படுகிறது. இந்த ப்ரமாணங்களில் ஏகசப்தம், ஏவகாரம் இவைகளால் ஈசுவரன் உபாயமாமிடத்தில் வேறு உபாயங்களை அபேக்ஷியாமலே உபாயமாகிறான் என்று ஏற்படுகிறபடியாலும் "ஸர்வதர்மாந் பரித்யஜ்ய" என்பதால் மற்ற உபாயங்களைவிட்டே பற்றவேணும் என்றிருப்பதாலும் இவ்வதிகாரிக்கு ஈசுவரனைத்தவிர வேறு உபாயமில்லை.

ஆனால் நீயே உபாயமாக வேணுமென்று இவன் ப்ரார்த்திப்பதால் அந்த ப்ரார்த்தனையாகிற ஹேதுவினாலே ஈசுவரன் பலப்ரதானம்

பண்ணுமிடத்தில் அந்த ப்ரார்த்தனையே உபாயமாகிறபடியால் ஈசுவர னுக்கே உபாயாந்தர நைரபேக்ஷ்யமாகிற ஏகசப்தார்த்தம் அநுபபந்ந மாமே என்னில்? "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க காமோயஜேத" என்கிற இடத்தில் ஸ்வர்க்க காமனையானது ஸ்வர்க்கத்துக்கு ஸாதன மன்றியே அதிகாரி விசேஷணமாகிருப்போலே நீயே உபாய மாக வேணுமென்கிற ப்ரார்த்தனையும் ஸித்தோபாய அதிகாரிக்கு விசேஷணமாயிருக்கும்.

ஆனால் அந்வய வ்யதிரேகங்களினால் ப்ரபத்திக்கு ஸாதநத்வம் ஏற்படமாட்டாதோவென்னில்; ஸாதநமாவது—அநந்யதாஸித்தமா யிருப்பதாகையால் (அதாவது, தன்னையொழிய வேறொன்றால் பெறப் படாத பலஸித்திக்குத் தவறாமல் முன்நிற்பதாகையால்) ஈசுவரனே உபாயமென்கிற ப்ரமாணத்தாலே ஈசுவரனைத் தவிர இது உபாய மல்லாமையாலே தன்னையொழிய ஈசுவரனால் பெறப்படும் பலஸித்தி யாலே அந்யதாஸித்தமாயிருக்கையால் அநந்யதாஸித்தமாய்க்கொண்டு நியத பூர்வவர்த்தியா யிருக்கவேண்டிய ஸாதநலக்ஷண மில்லாமை யாலே ப்ரபத்தி ஸாதனமாகமாட்டாது.

எப்படி ஜ்யோதிஷ்டோமாதி ஸ்தலங்களில் ஸ்வர்க்க காமனை யானது நியத பூர்வவர்த்தியா யிருந்தபோதிலும் யஜன கர்த்தாவான அதிகாரிக்கு விசேஷணமாயிருப்பதால் அந்த ஸ்வர்க்க காமனைக்கு ஸாதநத்வம் ஏற்படவில்லையோ; அப்படியே இங்கும் சரணவரணம் அதிகாரி விசேஷணமாயிருப்பதால் அதற்கு ஸாதநத்வமில்லாமை யால்; அது ஹேதுவாக மாட்டாதென்று கண்டுகொள்வது.

அப்படி அதிகாரி விசேஷணமாகச் சொல்லும் பக்ஷத்தில் "ஸித்தமேவஹி ஸர்வத்ர நியோஜ்யஸ்ய விசேஷணம்" என்பதால் அதிகாரி விசேஷணமாயிருப்பது ஸித்தமாகவே யிருக்கவேணுமென் றேற்படுவதால் "மாமேகம் சரணம் வ்ரஜ" என்று விதேயமாகச் சொல்வது கூடாதேயென்னில், அந்த நியமம் ஸாத்யோபாய விஷய மாகையால் ஸித்தோபாய விஷயத்தில் விரோதிக்காது.

அல்லாமல் ஸித்தோபாய விஷயத்திலும் அதிகாரி விசேஷணம் ஸித்தமாகவே யிருக்கவேணுமென்னில்; உபாயமும் ஸித்தமாய் அதிகாரமும் ஸித்தமாயிருக்கும் பக்ஷத்தில் ஸர்வமுக்தி ப்ரஸங்கம் ஏற்படும். ஆதலால் அது கூடாது. அங்ஙனமன்றிக்கே வேறு

வாக்யங்களினலே விதிக்கப்பட்டதொரு விஷயமானது மற்ருெரு வாக்யத்தில் ஸித்தமாய்க்கொண்டு அதிகாரி விசேஷணமாகலாம். எப்படியென்னில், "அக்நீநாததீத" என்றும், "ஸ்வாத்யாயோ அத்யேதவ்ய:" என்றும் வாக்யாந்தரங்களால் விதிக்கப்பட்ட 'அக்ந்யாதானம்' 'அத்யயநம்' இவைகள் யாகாதிகாரிக்கு ஸித்த விசேஷணமாவதுபோலே இங்கும் 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்று பூர்வ வாக்யத்தால் விதிக்கப்பட்ட சரணவரணம் உத்தரத்தில் 'த்வா' என்பதனுல் சரணவரணம் செய்த உன்னை என்று அநுவதிக்கப்பட்டிருப்பதால் மோக்ஷாதிகாரிக்கு ஸித்த விசேஷணமாகலாம்.

ஆனல் 'சரணம் வ்ரஜ' என்று சரணவரணம் விதிவிஷயமாயிருப்பதால் அந்த விதியாலே கிருதிஸாத்யத்வமும், அதனுல் ஆக்ஷிப்தமான இஷ்ட ஸாதநத்வமும் ஏற்படுகிறபடியால் சரணவரணம் உபாயமன்றென்று சொல்லுமது அநுபபந்நமென்னில்; விதிக்கு கேவல கிருதிஸாத்யத்வமே அர்த்தமாகக் கொள்வது பாதகமில்லாத ஸ்தலத்தில்; அங்கு இஷ்ட ஸாதநத்வம் அர்த்தாத் ஸித்திக்கும். இங்கு சரணம் வ்ரஜ என்பதில் சரணுகதி உபாயவரண ரூபமாக ஏற்படுகிறபடியால் உபாயவரணத்துக்கு உபாயத்வமில்லாமையாலே சரணம் வ்ரஜ என்கிற விதியால் சரணவரணத்துக்கு இஷ்டஸாதநத்வம் ஏற்பட மாட்டாது.

மேலும் இஷ்டஸாதனமென்பது இஷ்டமான ப்ரயோஜனத்தை அடையச்செய்வது என்று ந்யாய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது: சரணவரணம் இஷ்ட ப்ரயோஜனமாகையால் விதிக்கும் விஷயமாகலாம். அன்றியும் இந்த சரணவரணத்திற்கு பலம் ஈசுவரன் தனக்கு உபாயமாயிருக்கையாகையால் அந்த உபாயமாயிருக்கையாகிற இஷ்டத்துக்கு ஸாதனமாயிருப்பதால் இஷ்டஸாதநத்வமும் ஏற்படலாம். இப்படியே ஸாராஸ்வாதினியில் "ப்ரபத்தி ஈசுவரனுடைய உபாயாந்தர ஸ்தாந நிவேசத்துக்கு ஸாதனமாவதல்லது பக்தியைப்போலே ஸாக்ஷாத்தாய் மோக்ஷ ஸாதனமன்று" என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே இங்கும் தன் விஷயத்தில் ஈசுவரன் உபாயமாகையாகிற பலத்திற்கு ஸாதனமாயிருக்கத் தட்டில்லை. ஆனல் ஈசுவரனுக்கு உபாயத்வம் ஸ்வாபாவிகமாயிருந்த போதிலும் தனக்கு ஈசுவரன் பலப்ரதனுயிருக்கை ப்ரார்த்திக்கப்படலாம். இங்ஙனமன்றிக்கே இவன் பாசுரம் கேட்டவாறே

திருவுள்ளமுகக்கும் என்பதுபோல் ஸ்வயம் ப்ரயோஜனமான பகவந் முகோல்லாஸத்துக்கு ஸாதனமாகையாலும் இஷ்ட ஸாதநத்வம் ஏற்படும்.

இப்படியிருக்கையாலே வேறொன்றுக்காக அநுஷ்டிக்கப் படுவதாய்க்கொண்டு ப்ரஸங்காத் உபகாரகமாயிருக்கையால் ப்ரபத்தி வ்யாஜமாக ஏற்படுகிறது. இதை யனுசரித்தே தேசிகனும் "ப்ரபத்தே: வ்யாஜ மாத்ரத்வம்" என்பதால் ப்ரபத்தியை வ்யாஜோபாயம் என்று அருளிச்செய்திருக்கிறார். இப்படியுள்ள ப்ரபத்தி அநுபாய மென்பதும், தேசிகன் ந்யாயஸித்தாஞ்ஜநத்தில் அருளிச்செய்த "இயம் கேவல லக்ஷ்மீச" என்கிற சுலோகத்தால் வ்யக்தமாம். அதன் அர்த்தம். ச்ரிய:பதியான ஈசுவரனிடத்திலிருப்பதாயும், மற்ற வர்களிடத்தி லில்லாததாயும் இருக்கிற உபாயத்வத்தை விஷயீகரிக் கிற ஜ்ஞானமாயுள்ள ப்ரபத்தியானது தான் உபாயமென்கிற புத்தி யைத் தடுக்கிறது என்பதாம். இத்தால் ஈசுவரனைக் காட்டிலும் அந்யமாயுள்ளதொரு உபாயமில்லையென்றும், ப்ரபத்தியும் ஈசுவரனைக் காட்டிலும் வேறாகையாலே இதுவும் உபாயமாக மாட்டாதென்றும் ஏற்படுகிறபடியால் ப்ரபத்தி அநுபாயமென்பது ஸித்தம்.

ஆனால் இந்த உபாயத்வம் பலப்ரதத்வரூபமாகக் கொள்ளில் அது, ப்ரபத்தியில் ப்ரஸக்தமாகாமையாலே ப்ரஸக்தத்துக்கே ப்ரதி ஷேதம் உசிதமாகையால் நிஷேதம் அநுபபந்நமாம். நிக்ஷேப சிந்தா மணியில் கீழ்ச்சொன்ன சுலோகத்துக்கு அர்த்த நிருபணம் பண்ணு கையில் "ப்ரபத்திக்கு உபாயத்வம் அந்வய வ்யதிரேகங்களினால் ஏற்பட்டிருந்தபோதிலும் விசாரதசையில் அந்த ப்ரபத்தி உபாயத்வ ஜ்ஞானரூபமாகையாலே உபாயத்வ மேற்படாது" என்று நிருபிக்கப் பட்டிருக்கிறது. இப்படியே 'ந்யாயஸித்தாஞ்ஜன' வ்யாக்யான மான ரத்நபேடிகையில் திருப்புட்குழி ஸ்வாமியும் நிருபித்திருக்கிறார்.

அங்ஙனமன்றிக்கே அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் "உபேக்ஷ கோ யதாகர்ம பலதாயீதி யாமதி:" என்கிற சுலோகத்தில் கர்மானு குணமாக ஈசுவரன் பலப்ரதானம் பண்ணுகிறவனாகையால் உபேக்ஷ கன் என்கிற ஜ்ஞானமானது ஈசுவரன் ரக்ஷிக்கக்கடவன் என்கிற விசுவாஸத்துக்கு ப்ரதிபந்தகம் என்று சொல்லியிருப்பதால், ப்ரபத்தி உபாயமாகும் பக்ஷத்தில் அந்த உபாயத்தை அநுஷ்டிக்கிறவனிடத் தில் அந்த ப்ரபத்திரூப கர்மாநுகுணமாக பலப்ரதானம் ஈசுவரன்

பண்ணுகிறவன் என்றேற்படுவதால் ஈசுவரன் உபேக்ஷகன் என்கிற புத்தியானது அவசியம் உண்டாகக் கூடுமாகையால் ப்ரபத்திக்கு அங்கமாயுள்ள விசுவாஸம் ஏற்படமாட்டாதென்று ஆக்ஷேபித்து ப்ரபந்ந விஷயத்தில் மோக்ஷபலம் தாயத்வ ஸம்பந்த ப்ரயுக்தம் 'ப்ரபத்தி ப்ரயுக்தமன்று' என்று 'நிக்ஷேப சிந்தாமணி'யில் நிருபித்திருப்பதையும் கண்டுகொள்க.

மேலும் நம: சப்தார்த்த விசாரத்தில், நம: சப்தார்த்தம் அநந்ய சரணத்வமானால் ப்ரபத்தியை உபாயமாக அநுஷ்டிக்கும் பக்ஷத்தில் அநந்ய சரணத்வம் ஏற்படாதாகையால் ப்ரபத்தி உபாயமன்று: வ்யாஜம் என்று 'ஸாராஸ்வாதிநி'யிலும் நிருபிக்கப்பட்டிருக்கிறது. அந்த வ்யாஜத்வம் பலகரணத்வரூப உபாயத்வத்தைக் காட்டிலும் வேறுபட்டது. அப்படியன்றிக்கே வ்யாஜத்வம் பலகரணத்வ ரூபமாகச் சொல்லும் பக்ஷத்தில் ஜ்யோதிஷ்டோமாதிகளும் ஸ்வர்க்கத்துக்கு வ்யாஜங்களாகவே ஏற்படும். அது பூர்வதந்த்ர விருத்தம்.

அது நிற்க. "பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி:" என்கிற பூர்வாசார்யர்களுடைய வாக்யத்தால் ஈசுவரன் உபாயாந்தரங்களை அநுஷ்டிக்கிறவன் விஷயத்தில் தான் நிருபாதிக ரக்ஷகனாகிறதில்லை என்றறியலாம். ஆகையால் உபாயாந்தர ப்ரவ்ருத்தியானது ஈசுவரனுடைய ரக்ஷணப்ரவ்ருத்திக்குத் தடையாகையால் அந்த உபாயாந்தரங்களைவிட்டு ஈசுவரனை உபாயமாகப் பற்றுகையாகிற ப்ரபத்தி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விசிஷ்டையாகையாலே அந்த ப்ரபத்தி ஈசுவரனுடைய ரக்ஷணத்துக்கு ப்ரதிபந்தகமான உபாயாந்தர ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியோடு கூடினதாகையால் ப்ரதிபந்தகாபாவ ரூபையாக ஏற்படுகிறது. நம்முடைய ஸித்தாந்தத்தில் ப்ரதிபந்தகாபாவத்துக்குக் காரணத்வமில்லை; அத்தாலும் ப்ரபத்தி உபாயமாக மாட்டாது.

ஆனால் ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ஸ்வாபகாலத்தில் உண்டாயிருப்பதால் அப்பொழுதும் இவன் ப்ரபந்நனாகக்கூடும் என்கிற ஒரு சங்கை வரக்கூடாதோவென்னில் ஜ்ஞான கார்யமான நிவ்ருத்யாக்யயத்நமே இவ்விடத்தில் விவக்ஷிதமாகையால் அது வரமாட்டாது.

ஆனால் ஸர்வசக்தனான ஸர்வேசுவரன் ரக்ஷணத்தில் ப்ரவ்ருத்தனானால் அந்த ப்ரவ்ருத்திக்கு இவனுடைய ப்ரவ்ருத்தி ப்ரதிபந்தக

மாகும் பக்ஷத்தில் அவனுடைய ஸர்வசக்தத்வத்திற்குக் குறைவுண்டாகாதோ வென்னில், ஈசுவரன் உபாயாந்தர ப்ரவ்ருத்தன் விஷயத்தில் தான் நிருபாதிகமாக ரக்ஷிக்கிறதில்லை என்று ஸங்கல்பித்திருப்பதால் அந்த ஸங்கல்பத்தை அநுஸரித்து அவன் விஷயத்தில் ரக்ஷண ப்ரவிருத்தியில்லாமை ஸர்வசக்தத்வத்துக்குக் குறைவாக மாட்டாது. இப்படியே இது பூர்வாசார்யர்களுடைய வாக்யமென்று ரஹஸ்ய த்ரயஸாரத்தில் தேசிகன் அருளிச்செய்திருக்கிறார்.

ஆனால் ப்ரபத்தியை உபாயமாக அநுஷ்டித்தபின்பு உபாயாந்தர ப்ரவ்ருத்தி கூடாதென்பது அந்த வாக்யத்தின் அர்த்தமாகச் சொல்லுமது வாக்ய ஸ்வாரஸ்ய விருத்தமாம்.

இப்படியிருப்பதாலே பிராட்டி 'சீதோபவ ஹநூமத:" என்று தன்னுடைய வாக்யத்தாலே திருவடி விஷயத்தில் அக்நியைச் சுடாமலிருக்கும்படி பண்ணினதுபோலே ராவணனையும் தன்னுடைய வாக்யத்தாலே 'ந த்வா குர்மி' என்கிற சுலோகத்தின்படி பஸ்மமாக்கவல்ல சக்தி யிருக்கச்செய்தேயும், அந்த ப்ரவ்ருத்தி பெருமாளுடைய ரக்ஷணத்துக்குத் தடையென் றேற்படுகிறபடியாலொழிக்கப்பட்டது.

ஆனால் இது ப்ரபத்த்யநுஷ்டாநாநந்தரம் ஏற்படுகிற ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியென்று சொல்லவொண்ணாதோ வென்னில், ராவணனாலே ஏற்பட்ட ஆபத்தைப் போக்குகைக்காக, பெருமாள் விஷயத்தில் தன்னுடைய உபாயாந்தர ப்ரவ்ருத்தியை விட்டே சரணம் புகுந்தவளாகையால் அது அநுபபந்நமாம். மேலும், "ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி: ப்ரபத்தி:" என்கிற வாக்யத்தில், "பாவாந்தரம் அபாவ:" என்கிற ந்யாயத்தால் அந்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்திக்கு விசேஷணமாக ஏற்படுவதாலும் அப்படிச் சொல்வது அநுபபந்நம்.

அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலும் நம: சப்தார்த்த நிருபணாவஸரத்தில், நம: சப்தத்துக்கு ஸ்தூலயோஜனை ஸூக்ஷ்மயோஜனை, பரயோஜனை என்று மூன்று யோஜனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த மூன்று யோஜனைகளிலும் ப்ரபத்திக்கு உபாயத்வமில்லை என்று ஏற்படுகிறது.

அவைகளில் முதல் யோஜனையில், நம: சப்தம் ணமு-ப்ருஹ்வீபாவே' என்கிற தாதுவால் நிஷ்பந்நமானதால், அது ஸ்வரூபாந்தர்கத

மாய் ஸ்வயம் ப்ரயோஜனமான சேஷவ்ருத்தியைச் சொல்லுகிறது: அதாவது:—ஜ்ஞானவான் தன்னைக்காட்டிலும் ஸர்வப்ரகாரத்தாலும் உத்க்ருஷ்டனைக் குறித்து ஸ்வபாவஸித்தமாய் வணங்குகை நம: சப்தார்த்த மென்பதாம்.

லோகத்தில் சேதனர்கள் உத்க்ருஷ்டர்களென்றும், அபக்ருஷ்டர்களென்றும் இரண்டு வகையாயிருப்பர்கள். ஸர்வ ப்ரகாரத்தாலும் உத்கர்ஷம் எவனிடத்திலிருக்கிறதோ அவன் உத்க்ருஷ்ட சப்தத்துக்கு முக்யார்த்தம்: அவனைக் காட்டிலும் வேறாயிருக்கிறவர்கள் அபக்ருஷ்டர்கள்: சேஷபூதர்கள். இவர்களில் சேஷிகளாயுள்ளவர்களை சேஷபூதர்கள் ப்ரயோஜனத்தை அபேக்ஷியாமல் வணங்குகை ஸ்வாபாவிகம். ஆதலால் ஸர்வப்ரகாரத்தாலும் உத்கர்ஷமுள்ளவன் ஸர்வேசுவரனாகையாலும், அவனைக் காட்டிலும் மற்றவர்கள் அபக்ருஷ்டர்களாகையாலும் ஸர்வேசுவர விஷயத்தில் மற்ற சேதனர்கள் வணங்குகை ஸ்வயம் ப்ரயோஜன சேஷவ்ருத்தி ரூபம். இது மாநஸமாயும், வாசிகமாயும் காயிகமாயுமிருக்கும்.

அவைகளில் மானஸமாவது:—ஸர்வேசுவரன் உத்க்ருஷ்டன்: நான் அவனிற்காட்டில் அபக்ருஷ்டன் என்கிற எண்ண முடைமை வாசிகமாவது:—இந்த எண்ண முடைமையே காரணமாக 'நம:' என்று உச்சரிக்கை. காயிகமாவது:—அவ்வெண்ணத்தோடு கூடியே உத்க்ருஷ்டனை வணங்குகையாம். 'நமதி அநேந' என்ற கரண வ்யுத்பத்தியில் காயிகமான நமஸ்காரத்துக்குக் காரணம் கீழ் நிரூபிக்கப்பட்ட எண்ணமேயாகையால் அந்த தன்தாழ்வை நினையுமெண்ணமும் நம: சப்தார்த்தமாகிறது. இப்படியாக இவன் தன்னுடைய நைச்யத்தைத் தெரிவிப்பதான நமஸ்காரத்தைப் பார்த்து ஸர்வேசுவரன் "ஸுக்ரீவம் சரணங்கத:" என்கிறபடியே இவனை வணங்குகிறபடியால் 'பரம் நாமயதி' என்கிற வ்யுத்பத்தியைக் கொண்டும் 'நம:' சப்தம் நிஷ்பந்நமாகிறது. இப்படி உத்க்ருஷ்டனைக் குறித்து அபக்ருஷ்டன் த்ரிவிதகரணங்களாலும் செய்யும் நமஸ்காரமானது தன்னுடைய அபகர்ஷஸூசகமாயும் ஸ்வாபாவிகமாயுமுள்ள வ்யாபார விசேஷமாகையால் இந்த நமஸ்காரம் உபாயமாக மாட்டாது.

இப்படி மூன்று கரணங்களாலும் செய்யப்படும் நமஸ்காரம் பூர்ணசேஷவ்ருத்திரூபமாம். இவைகளில் ஒன்று குறைந்தாலும் பூர்ணமாகமாட்டாது. எப்படியென்றால், ஸர்வேசுவரன் தன் விஷ

யத்தில் கைங்கர்யத்தைச் செய்யும்படியாகவே கரணங்களைக் கொடுத் திருக்கிறபடியால் அவைகளில் ஒரு கரணங் குறைந்தாலும் அவன் திருவுள்ளத்துக்குக் குறைவுண்டாவதால் கைங்கர்ய பூர்த்தியில்லை ஆதலால் மூன்று கரணங்களாலும் செய்யப்படும் நமஸ்காரமே பூர்ணசேஷவ்ருத்திருபமாகக் கொள்ளத்தக்கது. இப்படியிருந்துள்ள 'நம:' சப்தார்த்தமான நமஸ்காரத்தினுடைய அவஸ்தா விசேஷங் களே தன்னடையே வரக்கூடிய ஸ்வபாவங்களாயுள்ள அங்கங்க ளாகையால் அவை இனி நிருபிக்கப்படும்.

அவற்றுள் முதலாவது அங்கம்:—நான் பரஞன புருஷனை உத்தேசித்து வணங்குகை எனக்கு சாசுவதமான ப்ரயோஜனம்; இதைத்தவிர வேறு ப்ரயோஜனமில்லை; என்கிற புத்தி விசேஷம். இந்த புத்தி விசேஷத்துக்கு விரோதி பலத்தை அபேக்ஷிக்கை. என்றிப்படிச் சொல்லியிருப்பதால் இது உபாயமன்று என்று ஸித்திக்கிறது.

மேல் கார்ப்பண்ய ரூபமான இரண்டாவது அங்கம் நிருபிக்கப் படும். அதாவது:— இப்படி ஸ்வயம் ப்ரயோஜனமாயிருந்துள்ள நம: சப்தார்த்தத்தை யுடையவர்களுக்கு 'பொய்நின்ற ஞானமும்' இத்தியாதிப்படியே அநாதியான விபரீத வாஸனு விசேஷத்தாலும் 'மாயும் வகையறியேன் வல்வினையேன் பெண்பிறந்தே' என்கிற படியே ஸ்வாபாவிகமான பாரதந்த்ரியத்தாலும், ஹேயமான சரீரத்தி னுடைய ஸம்பந்தத்தாலும் 'என்ஞன் செய்கேன்' என்கிறபடி ஜ்ஞானகர்மாக்களுடைய ஹாநியாலே 'நோற்ற நோன்பிலேன் நுண் ணறிவிலேன்' என்கிறபடியே அநுஸந்திக்கை:–இந்த அநுஸந்தானம் ஸ்வாபாவிக பாரதந்த்ரியா நுஸந்தான கெர்ப்பமாகையாலே 'அஸந் தேசாத்து ராமஸ்ய' 'மமைவம்ய துஷ்கிருதம் கிஞ்சித்' 'ஏஷா விபத்யா ஹமல்ப பாக்யா' என்கிறபடியே தான் சக்தையாயிருக்கச் செய்தேயும் ஸ்வரக்ஷணத்தில் ப்ரவ்ருத்தியில்லாத பிராட்டியி னுடைய ஆசாரத்தாலே சிக்ஷிக்கப்பட்ட அத்யந்த பாரதந்த்ரிய நிஷ்டையாகையால் இதற்கு விரோதி ஸ்வரக்ஷணத்தில் ப்ரவர்த்திக் கைக் குறுப்பான ஸ்வஸ்வாதந்த்ரிய ப்ரமமென்று சொல்லப்பட் டிருப்பதால் ஸ்வரக்ஷண ப்ரவ்ருத்தி ரூபமான உபாயாநுஷ்டானம் கூடாதென்று ஸித்திக்கிறது.

இனி விசுவாஸரூபமான மூன்ருவது அங்கம் நிரூபிக்கப்படும். அதாவது:—ஸர்வேசுவரன் பரனுயிருக்கச்செய்தேயும், ஸர்வ பூதங்களிடத்திலும் கிருபையுள்ளவனுகையால் அநுக்கிரஹத்தி லொன்றிலுமே புத்தியுள்ளவனென்கிற த்ருடாத்தியவஸாயம்; முந்தி நிரூபிக்கப்பட்ட கார்ப்பண்யாநுஸந்தானத்தா லுண்டான பயத்தைப் போக்குமதான பகவத் குணுநுஸந்தான ரூபமான விசுவாஸம். இதற்கு விரோதி அவரவர்களா லநுஷ்டிக்கப்படுகிற உபாயங்களுக் கநுகுணமான பலத்தைக் கொடுக்கிறவனுய்க்கொண்டு உபேக்ஷகனுயிருப்பன் என்கிற ஞானவிசேஷம். இந்த ஜ்ஞானம் ப்ரபத்தி உபாயமாகும் பக்ஷத்தில் அந்த உபாயத்துக் கநுகுணமான பலத்தைக் கொடுக்கிறவனுய்க்கொண்டு உபேக்ஷகனுயிருப்பன் என்பதை விஷயீகரிப்பதால் ப்ரபத்திக்கு முக்யாங்கமான விசுவாஸம் தடைபடுவதால் ப்ரபத்தி உபாயமாக மாட்டாது.

இனி, நாலாவது அங்கம் நிரூபிக்கப்படுகிறது:— அதாவது ஸர்வேசுவரன் நம்முடைய கார்யத்தை நிர்வஹிக்க சக்தியுடையவன் என்கிற பகவத் சக்த்யநுஸந்தான ரூபமான கோப்த்ரு சக்தி நிருபணம். இது 'சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா' இத்யாதிப்படியே 'களைவாய் துன்பங்களை யாதொழிவாய் களைகண்மற்றிலேன்' என்று தன்னுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்கையாகிய கோப்த்ருத்வ வரணத்துக்குக் காரணமாயிருக்கும். இதற்கு விரோதி 'சங்கே மத்பாக்ய ஸம்க்ஷயாத்' என்கிறபடியே தன்னுடைய பாக்கிய ஹானியாலே ப்ரஹ்மாஸ்த்ரம்போல வேறு ஸஹாயத்தை அபேக்ஷியாமல் கார்யத்தைச்செய்ய சக்தனுன ஸர்வேசுவரனிடத்தில் குணபாவத்தை சங்கிக்கை.

இனி, ஐந்தாவது அங்கம் நிரூபிக்கப்படும்:— அதாவது கீழ்ச் சொல்லப்பட்ட அங்கங்களோடே கூடின நம: சப்தார்த்தத்தை அநுஷ்டிக்கு மவர்களுக்குத் தன்னடையே வரக்கடவதான கிற்பன் கில்லேனென்றிலன்' என்றும், 'யாதானும் பற்றி நீங்கும் விரதம்' என்றும் சொல்லப்படுகிற ப்ராதிகூல்யவர்ஜநம். இதற்கு விரோதி ப்ரயோஜநாந்தர ப்ரவ்ருத்தி, ஸாதநாந்தர ப்ரவ்ருத்தி: இவைகள்.

இனி, ஆருவது அங்கம் நிரூபிக்கப்படும்:—அதாவது ஸமஸ்தமான ஸ்தாவர ஜங்கமங்களும் ஸர்வேசுவரனுக்கு சரீரங்கள்; அவை

களுக்கு அநுகூலனுயிருக்கக்கடவேன் என்கிற அத்யவஸாய விசேஷ ரூபமான ஆந்ருசம்ஸ்யம். இதுக்கு விரோதி லௌகிக மர்யாதா நிராகரணம். இப்படி ஸ்வயம் ப்ரயோஜனமாயுள்ள நம: சப்தார்த்தமும் இத்தை அநுஷ்டிக்குமவனுக்கு ஸம்பாவித ஸ்வபாவ விசேஷங்களான அங்கங்கள் ஆறும், அவைகளுக்கு விரோதிகளாயுள்ளவைகளுடைய நிவ்ருத்தி ரூபங்களான உபாயங்களும் நிருபிக்கப்பட்டன. கீழ் நிருபித்தபடி ப்ரபத்திக்கு உபாயத்வம் ஏற்படவில்லை. இந்த அர்த்தங்களை யெல்லாம் பிரதிபாதிக்கிற அஹிர்ப்புத்ந்ய ஸம்ஹிதா சுலோகங்கள் இங்கே காட்டப்படுகின்றன.

அவை :—

"ப்ரேக்ஷாவத: ப்ரவ்ருத்திர்யா ப்ரஹ்வீபாவாத்மிகா ஸ்வத:
உத்க்ருஷ்டம் பரமுத்திச்ய தந்நம: பரிகீயதே
லோகே சேதந வர்க்கஸ்து த்விதைவ பரிகீர்த்தித:
ஜ்யாயாந் சததைவாஜ்யாயாந் நைவாப்யாம் வித்யதே பர:
காலதோ குணத:சைவ ப்ரகர்ஷோ யத்ர திஷ்டதி
சப்தஸ்தம் முக்யயா வ்ருத்த்யா ஜ்யாயாநித்ய வலம்பதே
அத:சேதந வர்க்கோந்ய: ஸ்ம்ருத: ப்ரத்யவரோ புதை:
அஜ்யாயாந: சாநயோர்யோக: சேஷசேஷி தயேஷ்யதே
அஜ்யாயாம் ஸோ(அ)பரே ஸர்வே ஜ்யாநேகோமத: பர:
நந்த்ரு நந்தவ்ய பாவேந தேஷாம் தேந ஸமந்வய:
நந்தவ்ய: பரமச்சேஷீ சேஷாநந்தார: ஈரிதா:
நந்த்ரு நந்தவ்ய பாவோயம் ந ப்ரயோஜந பூர்வக:
நீசோச்சயோஸ் ஸ்வபாவோயம் நந்த்ரு நந்தவ்ய தாத்மக:
உபாதிரஹிதே நாயம் யேந பாவேந சேதந:
நமதிஜ்யாயஸே தஸ்மை தத்வா நமநமுச்யதே
பகவாந் மேபரோ நித்யம் அஹம் ப்ரத்யவர: ஸதா
இதி பாவோ நம: ப்ரோக்த: நமஸ: கரணம் ஹி ஸ:
நாம யத்யபிவா தேவம் ப்ரஹ்வீ பாவயதி த்ருவம்
ப்ரஹ்வீ பவதி நீசோஹி பரோநைச்யம் விலோகயந்
அதோவா நமஉத்திஷ்டம் யத்தந்நாமயதி ஸ்வயம்
வாசா நமஇதி ப்ரோச்ய மநஸா வபுஷாசயத்
தந்நம: பூர்ணமுத்திஷ்டம் அதோந்யத் ந்யூந முச்யதே
இயம் கரண பூர்த்திஸ்ஸ்யாத் அங்கபூர்த்தி மிமாம்ச்ருணு

சாச்வதீ மம ஸம்ஸித்தி: இயம் ப்ரஹ்வீ பவாமியத்
புருஷம் பரமுத்திச்ய நமேஸித்தி ரதோந்யதா
இத்யங்க முதிதம் ச்ரேஷ்டம் பலேப்ஸா தத்விரோதிநீ
அநாதி வாஸநா யோகாத் அநைச்வர்யாத் ஸ்வபாவஜாத்
மலாவகுண்டிதத்வாச்ச த்ரிக்ரியா விஹதிர்த்தியா
தத் கார்ப்பண்யம் ததுத்போதம் த்விதீயம் ஹ்யங்க மீத்ருசம்
ஸ்வஸ்வாதந்த்ர்யா வபோதஸ்து தத்வ்யாகாத: உதீர்யதே
பரத்வே ஸநிதேவோயம் ஸர்வபூதாநு கம்பந:
அநுக்ரஹைகதீர் நித்யம் இத்யே தத்துத்ருதீயகம்
உபேக்ஷகோ யதாகர்ம பலதாயீதியாமதி:
விச்வாஸாத்மக மேதந்துத்ருதீயம் ஹந்திவை ஸதா
ஏவம்பூதோப்யசக்தஸ்ஸந் மத்ராணம் பவிதும் க்ஷம:
இதி புத்யாஸ்ய தேவஸ்ய கோப்த்ரு சக்தி நிரூபணம்
சதுர்த்த மங்கமுத்திஷ்டம் அமுஷ்ய வ்யாஹதி: புந:
உதாஸீநோ குணபாவா தித்யுத்ப்ரேக்ஷா நிமித்தஜா
ஸ்வஸ்ய ஸ்வாமி நிவ்ருத்திர்யா ப்ராதிகூல்யஸ்ய வர்ஜநம்
ததங்கம் பஞ்சமம் ப்ரோக்தம் ஆஜ்ஞா வ்யாகாத வர்ஜநம்
அசாஸ்த்ரீயோவ ஸேவாது தத்வ்யாகாத உதீரித:
சராசராணி பூதாநி தாநி ஸர்வாணி தத்வபு:
அதஸ்ததாநுகூல்யம் மேகார்ய மித்யேவ நிச்சயம்
ஷஷ்டமங்கம் ஸமுத்திஷ்டம் தத்வ்யாகாதோ நிராக்ருதி:
பூர்ணமங்கை ரூபாங்கை:ச நமநம்தே ப்ரகீர்த்திதம்.
ஸ்தூலோயம் நமஸ:சார்த்த: ஸூக்ஷ்மமங்யந்நிசாமய"

என்பனவாம். இப்படியாக ஸ்தூல யோஜனை நிருபிக்கப்பட்டது. இதில் உபாயாந்தர ப்ரஸங்காஸஹமாய்க் கீழ் நிருபிக்கப்பட்ட அங்கோபாங்கங்களோடே கூடினதாயும் ஸ்வயம் ப்ரயோஜனமாயுமுள்ள ப்ரஹ்விபாவருபமான. ஸித்தோபாயபூதனான ஸர்வேசுவரனுடைய ஸ்ருஷ்ட்யவதாராதி ரூபாநேகக்ருஷி பரம்பரையாற் பலித்திருக்கிற சேஷத்வ ஜ்ஞாநமே நம: சப்தார்த்தமென்று நிர்ணயிக்கப்பட்டது.

இனி ஸூக்ஷ்மயோஜனை நிர்ணயிக்கப்படும்.
